T. 1681

i Mahal Series No. 7

இராமய்யன் அம்மானை

RĀMAIYAN AMMĀNAI

(A HISTORICAL BALLAD IN TAMIL)

MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

No. XLV

MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

General Editor:
T. CHANDRASEKHARAN, M. A., L. T.,
CURATOR, GOVT. ORIENTAL MANUSCRIPTS LIBRARY,
MADRAS

No. XLV

இராமய்யன் அம்மானை

(இராமப்பய்யன்)

Saraswati Mahal Series No. 7

RĀMAIYAN AMMĀNAI

(RAMAPPAYYAN)

CRITICALLY EDITED WITH INTRODUCTION AND NOTES

By

C. M. RAMACHANDRA CHETTIAR, B. A., B. L.,
Editor, "Siddhantam"

Published by:
S. GOPALAN, B. A, B. L.,
Honorary Secretary for the Administrative Committee,
T. M. S. S. M. Library,
TANJORE

1950

Price: Re. 1—0—0

GENERAL INTRODUCTION

TO THE

MADRAS GOVERNMENTAL ORIENTAL SERIES.

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science etc., early in May 1948. Important manuscript Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Saraswathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48 – 10, Education dated 4–4–1949 constituted an expert committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication. The following are the members of the Committee.

The Name of Personnel of the Committee Constituted for Selecting Manuscripts for Publication.

1. Sri T. M. Narayanaswami Pillai, M. A., B. L.
2. ,, R. P. Sethu Pillai, B. A., B. L.
3. ,, C. M. Ramachandran Chettiar, B. A., B. L.
4. ,, R. Krishnamoorthy (Kalki)
5. Dr. N. Venkataramanayya, M. A., Ph. D.
6. Sri M. Ramanuja Rao Naidu, M. A.
7. ,, V. Prabhakara Sastri
8. ,, N. Venkata Rao
9. ,, H. Sesha Ayyangar

10. Sri Masthi Venkatesa Ayyangar
11. ,, M. Mariappa Bhat, M. A., L. T.
12. Dr. C. Achyuta Menon, B. A., Ph. D.
13. ,, C. Kunhan Raja, M. A., D. Phil.
14. ,, A. Sankaran, M. A., Ph. D, L. T.
15. Sri P. Rama Sastri
16. ,, S. K. Ramanatha Sastri
17. Dr. M. Abdul Haq., M. A., D. Phil., (Oxen)
18. Janab Afzul-ul-Ulma Hakin Khader Ahamed
19. Sri P. D. Joshi
20. ,, S. Gopalan, B. A., B. L.
21. ,, T. Chandrasekharan, M. A., L. T.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahrathi and Islamic Languages. They met during the month of May 1949 at Madras and at Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government in G. O. No. Mis. 2745 Education dated 31—8—1949 and they decided to call these publications as the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES", and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras-5, as the General Editor of the Publications. The following manuscripts have been taken up for publication during the current year.

A. From the Government Oriental Manuscripts Library, Madras.

TAMIL

1. KAPPAL SATTIRAM
2. ANUBHAVA VAIDYA MURAI
3. ATTANAKOLAHALAM
4. UPADESA KANDAM
5. COLAN PURVA PATTAYAM
6. KONGA DESA RAJAKKAL
7. SIVAJNANA DIPAM
8. SADASIVA RUPAM, with commentary

TELUGU

1. SANGITARATNAKARAMU
2. AUSHADA YOGAMULU
3. VAIDYA NIGHANTU
4. DHANURVIDYA VILASAMU
5. YOGA DARSANA VISAYAMU
6. KHADGA LAKSANA SIROMANI

SANSKRIT

1. VISHANARAYANIYAM
2. BHARGAVA NADIKA
3. HARIHARACATURANGAM
4. BRAHMA SUTRA VRITTI MITAKSARA
5. NYAYASIDDHANTA TATVAMRTAM

MALAYALAM

1. GARBHA CHIKITSA

2a. VASTULAKSHNAM

b. SILPAVISAYAM

3. MAHASARAM
4. KANAKKUSARAM
5. KRIYA KRAMAM

KANNADA

1. LOKOPA KARA
2. RATTAMATA
3. DIKSABODHE
4. ASVASASTRAM

5a. AUSHADAGALU

b. VAIDYA VISHAYA

6. SANGITA RATNAKARA
7. SUPASASTRA

ISLAMIC LANGUAGES

1. JAMIL-AL-ASHYA
2. TIBB-E-FARIDI
3. TAHQUIQ-AL-BUHRAN
4. SAFINAT-AL-NAJAT

B. From the Tanjore Maharaja Serfoji's Sarashvati Mahal Library, Tanjore.

TAMIL

1. SARABENDRA VAIDYA MURAI (Diabetes)
2. Do. (E. N. T.)
3. AGASTHYAR 2,000
4. KONGANARSARAKKU VAIPPU
5. TIRUCHITRAMBALAKKOVAIYAR with Padavurai
6. KALACHAKRAM
7. TALASAMUDRAM
8. BHÀRATANATYAM

9a. PANDIKELI VILASAM NATAKAM.
 b. PURURAVA CHAKRA VARTHI NATAKAM
 c. MADANA SUNDARA VILASA NATAKAM
 d. PERCY MACQUEEN'S COLLECTION in the Madras University Library of Folklore.

10. RAMAYYAN AMMANAI
11. TAMIL PADALKAL including Pattinathar Venba and Vannankal.

TELUGU

1. KAMANDAKNITISARAMU
2. TALADASAPRANADIPIKA

3a. RAGHUNATHA NAYAKA ABHYUDAYAMU
 b. RAJAGOPALA VILASAMU

4. RAMAYANAMU by Katta Varadaraju

MARATHI

1. NATYASASTRA SANGRAHA

2a. BOOK OF KNOWLEDGE. VAHI
 b. FOLK SONGS
 c. DORA DARUN VENI PADDHATI.
 d. AṢWASA CATULA DUMANI.

3a. PRATAPASIMHENDRA VIJAYA PRABHANDAM
b. SARABHENDRA THIRTAVALI
c. LAVANI
4. DEVENDRA KORAVANJI
5. BHAKTA VILAS
6. SLOKA BHADHA RAMAYANA.

SANSKRIT

1. ASWASASTRA with Tricolour illustrations
2. RAJAMRAGANKA
3. CHIKITSAMRATA SAGARA
4. AYURVEDA MAHODADHI
5. GITA GOVINDA ABHINAYAM
6a. COLACAMPU
b. SAHENDRA VILASA
7. DHARMAKUTAM—Sundara Kanda
8. JATAKA SARAM
9. VISHNUTATVANIRNAYA VYAKHYA
10. SANGITA DARPANA
11. BIJA PALLAVA

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next four years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The Editors have, however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the foot note or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of Publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts, in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various Presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

T. Chandrasekharan,
General Editor.

PREFACE.

The Saraswathi Mahal Library in Tanjore is essentially the product of the fusion of different cultural influences under the Tamilian Chola Kings, the Telugu Nayaks and the Maharashtra rulers. This process was further enriched by the impact of the West, especially under the Great Maharashtra King, Maharaja Serfoji. It is not as well known as it should be that this institution is not merely a great relic of the past or a mere museum of antiquarian interest but of vital living interest in the present and for the future especially in our present era of national revival. It is a fit centre for historical, medical and scientific research.

What signal contribution the Saraswathi Mahal could make to the reconstruction of South Indian History is illustrated by this able edition of 'Rammayyan Ammanai' by Sri C. M. Ramachandra Chettiar, B. A., B. L., Coimbatore. It was a happy idea to have alloted this work to him. His introduction is both thorough and brilliant and he has pressed into his service various historical sources including obscure Jesuit letters to add substance to his conclusions.

'Ramayyan Ammanai' is one of the numerous unpublished manuscripts in the Saraswathi Mahal, of historical value, dealing with an episode in the frequent wars between Madhurai and Ramanathapuram. Ramayyan was the commander of the Madhura King in the first half of the 17th century and his campaign against the Sethupathi of Ramanathapuram is the subject of the work published here. This poem is of rare popular appeal and takes its place among the immortal ballads sung in the Tamil country. The merits of the work as a folksong and its historic setting are lucidly brought out by the learned Editor. In particular, he

has taken great pains to disentangle the historical from the apocryphal portions of the story and has presented to the reader a picture of the legendary Ramayyan in his true historical colours.

The learned Editor has shown us the lines along which research should proceed in dealing with the historical materials in our Library. We wish that he is able to take up more works of this kind and that his example inspires students of South Indian History to come forward and work in this rich quarry of historical treasure.

In closing, we must express our grateful thanks to the Government of Madras for the timely assistance given to us in bringing to light the valuable treasures of our Library.

Tanjore,
1—6—1950.

S. Gopalan,
Honorary Secretary,
T. M. S. S. M. Library Committee.

முன்னுரை.

தஞ்சை ஸரஸ்வதி மஹால் நூல் நிலையம், தமிழ் நாட்டுச் சோழர்கள் கலாசாரமும், தெலுங்கு தேசத்திய நாயக்க மன்னர்களோடு வந்த தெலுங்கு நாட்டுக் கலாசாரமும், மகாராஷ்டிர ஆளுகையின்கீழ் நம் நாட்டுக்கு வந்த மகாராஷ்டிர தேசத்திய கலாசாரமும் ஒருங்கே சேர்ந்த பல்வகைக் கலைநூல் நிலையமாகும். இக்கலைகளோடு, மேல்நாட்டுக் கலாசாரமும் சேர்ந்து, இந்நிலையம் உலகத்தின் பல்வேறு கலைகள் அடங்கிய ஒப்பற்ற கலைப்பொக்கிஷமாக விளங்குகிறது. மகாராஷ்டிர மன்னர்களில் சிறந்தவராகிய இரண்டாவது சரபோஜி மகாராஜா, (1798—1832) மேல்நாட்டுக் கலை, விஞ்ஞானம் முதலியவைகளில் நல்ல தேர்ச்சியடைந்து, நம் நாட்டுக் கலைகளையும் நன்கு பரிசோதித்து, மேல் நாட்டில் அச்சிடப்பட்ட நூல்களையும், நம் நாட்டில் பலவிடங்களிலும் கிடைக்கக்கூடிய சுவடிகளையும், சேகரித்து, இதிலுள்ள கலைச் செல்வத்தை வெகுவாக விருத்தி செய்தார். இக்கலை நிலையம், பண்டைக் காலத்திய சின்னங்களாக மதிக்கப்படும் புராதன ஏட்டுச் சுவடிகளின் நிலையம் மட்டும் அல்ல. தற்காலத்திலும், இனி வருங்காலத்திலும், அன்றாட வாழ்க்கைக்கு உபயோகமானதும், தற்கால நாகரீகத்திற்கு உகந்ததுமான, பல கலை விஞ்ஞானப் பகுதிகளும் இந்நிலையத்தில் இருந்து வருகின்றன. நமது தேசீயப் புது மலர்ச்சிக்கு உதவிபுரியத்தக்க, சரித்திர ஆராய்ச்சிக்கும், வைத்தியம் முதலிய விஞ்ஞான ஆராய்ச்சிக்கும், ஸங்கீதம் முதலிய கலை ஆராய்ச்சிக்கும், இது சிறந்ததோர் இடமாகும். இந்நிலையத்தைப்பற்றிய இவ்வுண்மையை யாவரும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியமாகும்.

தென்னிந்திய சரித்திரத்தைச் சரிவர ஆராய்ச்சி செய்து எழுதுவதற்கு, இந்நூல் நிலையம் எவ்வாறு உதவியளிக்கும் என்பதற்கு, ஸ்ரீமான் கோயமுத்தூர் C. M. இராமச்சந்திரம் செட்டியார், B. A., B. L., அவர்களால் அரிய திறத்துடன் பதிப்பிக்கப்பட்ட 'இராமய்யன் அம்மானை' என்ற இந்நூலே

ஓர் சான்று. இந்நூல் பதிப்பதற்காக அவரிடம் ஒப்புவிக்கப் பட்டது ஓர் அதிர்ஷ்டவசம் என்றே சொல்லவேண்டும். அவருடைய பதிப்புரையில் அவர் பாட்டுடைத் தலைவனாகிய 'இராமய்யன்' என்பவரது காலத்திய சரித்திரத்தைப் பல்வேறு ஆதாரங்களைக்கொண்டு ஆராய்ச்சிசெய்து ஐயந்திரிபற விளக்கி யுள்ளார். அவரால் கையாளப்பட்டிருக்கும் ஆதாரங்களில் 'ஜெஸ்யூட்' (Jesuit) என்று பிரஸித்தமான பாதிரிமார்களின் நிருபங்களும் ஒரு பகுதியாக இருக்கின்றன.

'இராமய்யன் அம்மானை' என்னும் இந்நூல் ஸரஸ்வதி மஹாலில் இருந்து வரும் அச்சிடப்படாத சரித்திர நூல்களில் ஒன்று. இது, மதுரையில் ஆண்ட நாயக்கர்களுக்கும், இராமநாத புரத்தில் ஆண்ட தேவர்களுக்கும், 17-ம் நூற்றாண்டின் முற் பகுதியில் அடிக்கடி நடந்த சில்லரைப் போர்களில் ஒன்றின் வரலாற்றைக் கூறுவது. அப்போது நாயக்கர்கள் தளபதியாக இருந்தவர் 'இராமய்யன்' என்னும் ஓர் அந்தணர். அவர் இராமநாதபுரத்துச் சிற்றரசரான சேதுபதியின்மீது தொடுத்த போரே இந்நூலின் உள்ளடக்கம். நமது நாட்டுப் பாடல்களின் வகையைச் சேர்ந்த 'அம்மானைப் பாட்டு' என்ற செய்யுள் முறையில் எழுதப்பட்ட இந்நூல், 'புகழேந்தி' முதலிய புலவர் களால் பாடப்பட்ட 'கோவலன் கதை' 'சித்திரபுத்திரன் பாடல்' 'புலந்திரன் களவு மாலை' முதலிய, என்றும் அழியாப் பாடல் களோடு சேர்ந்து, நம் நாட்டினர்க்குக் கலையுணர்ச்சியையும், வீரத்தையும், தருவதாக இருக்கின்றது. நமது நாட்டுப் பாடல் களில் இதற்குரிய இடத்தைப் பதிப்பாசிரியர், தமது அரிய பதிப்புரையில் தெளிவாக விளக்கியுள்ளார். குறிப்பாக இப் பாட்டிலுள்ள வரலாற்றில், சரித்திரப் பகுதியையும், கதையாகச் சேர்க்கப்பட்ட பகுதியையும், வெகு பாடுபட்டுப் பிரித்துக் கதா நாயகனாகிய இராமய்யனுடைய வரலாற்றைச் சரித்திர உண்மைப் படி விவரித்திருக்கிறார்.

கல்வியிற் சிறந்த ஸ்ரீமான் செட்டியார் அவர்கள், சரித்திர உண்மையைக் கண்டுபிடிப்பதற்கான ஆதாரங்களை, நாம் எவ்வாறு ஆராய்தல் வேண்டும் என்பதைத் தமது பதிப்புரையிற் காட்டி யுள்ளார். இவர், இதைப்போன்ற சரித்திர சம்பந்தமான ஏனைய

நூல்களையும் பதிப்பிக்கக்கூடுமானால், அது சாலச் சிறந்ததாகும். இவரது சரித்திர ஆராய்ச்சியைப் பார்த்து, அதே ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் மற்றவர்களும், புதியதோர் ஊக்கம் பெற்று, ஆராய்ச்சிக்கான ஆதாரக் களஞ்சியமான இந்நூல் நிலயத்தி லுள்ள மற்ற நூல்களையும் ஆராய்ச்சி செய்யப் புகுவர் என்று நம்புகிறோம்.

கடைசியாக, ஸரஸ்வதி மஹாலிலுள்ள இதைப்போன்ற அரிய நூல்களை, வெளியிடுவதற்குத் தகுந்த காலத்தில் பொரு ளுதவி செய்ய முன்வந்திருக்கும், நம் சென்னை அரசாங்கத் தாருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளு கிறோம்.

ஸரஸ்வதி மஹால்,
தஞ்சாவூர்,
1—6—1950.

***S.* கோபாலன்,**
கௌரவ காரியதரிசி.

கோயமுத்தூர்
கூட்டுறவு அச்சுக்கூடம், லிமிடெட்,
கோயமுத்தூர்.

பதிப்புரை.

சரித்திரக்கலை உணர்ச்சி.

தமிழ் இலக்கியத்திலே பல்லாயிரக்கணக்கான நூல்கள் இருக்கின்றன. அனேக நூற்றாண்டுகளாக அவைகள் எழுதப் பட்டும் படிக்கப்பட்டும் வந்திருக்கின்றன. பொதுவாகப் பார்க்கும்போது அவைகள் சமயம், நீதி, புலமை, கற்பனை முதலிய பொருள்களைப் பற்றியே கூறுகின்றன. விஞ்ஞானப் பகுதிகள் வரலாற்றுப்பகுதிகள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. சரித்திரக்கலை என்னும் வரலாற்றுப்பகுதி தமிழில் இல்லை என்றே வெளிநாட்டார் எண்ணியிருந்தார்கள். ஆனால் மிகுதியாக இல்லா விட்டாலும் கூடிய அளவு இருக்கின்றது என்றே கூறவேண்டும். என்றாலும் சரித்திரப்பகுதிகள் ஏனையவற்றோடு கலந்து இருப் பதினால் அவைகள் தெளிவாகவும் விளக்கமாகவும் தோன்றுவ தில்லை. சங்கத்தார் காலத்து நூல்களிலே பல அருமையான சரிதப் பகுதிகள் இருக்கின்றன. அவைகளை ஆராய்ந்து வெளி யிடும் முயற்சி தற்போதுதான் ஆசிரியர்கள் இடத்தில் தோன்றி வருகின்றது. மேலும் பின் வந்த சமண சைவ வைணவ சமய மேம் பாட்டுக் காலங்களில் தோன்றிய நூல்களிலே சரித வரலாறுகளை தற்போது ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். சோழ பாண்டிய ஆட்சிக் காலங்களின் வரலாறுகளைக் கல் வெட்டுக்களின் ஆதரவு களைக்கொண்டு ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. அக்காலத்தில் மிகுதியாக புராணக் கதைகளையே புலவர்கள் எடுத்தாண்டு வந்தார்கள். கலிங்கத்துப்பரணி, மூவர் உலா, போன்ற சில நூல்களே சரித்திரத்தை எடுத்து ஆண்டன. புராணங்களில் பெரிய புராணம் ஒன்றே சரித்திர ஞானம் ஏற்றுக்கொண்டு எழுதப்பட்ட நூல். பின்னாலே விஜயநகரத்தார் ஆட்சியிலே சரித்திரம் புறக்கணிக்கப்பட்டது, சில்லறைப் பிரபந்தங்களே தமிழில் தோன்றின. ஆனால் அந்தக்காலத்தில் தெலுங்கு மொழி யில் விரிவான சரிதப்பகுதிகள் தோன்றின. அவற்றை ஆராய்ந்துத் தொகுத்துச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் சமீபத்தில் மூன்று படிகளை வெளியிட்டிருக்கிறார்கள். அக்காலத்திலும் அதற்குப் பின்னாலேயும் தமிழில் நூல்கள் ஆக்கப்படவில்லையா என்பது ஒரு கேள்வி. தெலுங்கில் இருப்பதைப்போல அத்தனை நூல்கள் இல்லாமற்போனபோதிலும் வேண்டிய அளவு தமிழிலும் இருக் கின்றன. அவைகள் புலவர்களின் கண்களுக்குப் புலப்படா நிலையில் இருந்தன. புலவர்களின் கண்ணோட்டம் அவைகளுக்கு

இல்லாமற்போன போதிலும் பாமரர்களின் நெஞ்சுக்களுக்கும் செவிகளுக்கும் அவைகள் உற்சாகம் மூட்டிக்கொண்டு இருந் திருக்கின்றன.

நாட்டுப் பாடல்கள்.

புலவர்கள் கண்களில் விழாமல் நாட்டுப் பாமர மக்களின் செவிகளில் விழுகின்றன என்றால் அதற்கு என்ன பொருள் என்று கேட்கலாம். புலவர்கள் உயர்ந்த செந்தமிழ் நடையையே விரும்புவார்கள். கற்பனைகளைப் போற்றி உண்மைகளை உதறித் தள்ளுவார்கள். பாமரர்களோ எளிய நடையை விரும்பிக் கண்டதும் கேட்டதும் உள்ளபடி போற்றும் தன்மை உடைய வர்கள். அவர்கள் ஏட்டுப்படிப்பை விட்டு நெஞ்சில் எழும் உணர்ச்சிகளைத் தெளிய மொழிகளில் விளங்கும்படி பாடுகிற வர்கள். ஆகையால் அப்படி எளிதானவைகளே நாட்டு மக்களிடை போற்றப்படுவன. அவைகளே நாட்டுப்பாடல்கள் ஆகும். அவைகளை நன்கு ஆராய்ந்தால் பல வரலாற்றுப்பகுதிகள் அவை களில் விளங்கி நிற்பதைக் காணலாம். பாடல்களோ செம்பாக மாக யாரும் அறியக்கூடிய அளவில் இருக்கும். அவைகளே தமிழ்நாட்டுச் சரிதத்தின் ஆதாரங்களைக் கொண்டிருக்கின்றன. இந் நாட்டுப் பாடல்கள் ஏடுகளில் மிகுதியாக ஏறவில்லை. கர்ண பரம்பரையில் பாடப்பட்டு வந்தன. ஆகவே சென்ற இரண்டு மூன்று நூற்றாண்டுச் சரிதங்களே இவைகளில் காணப்படுகின்றன. மனிதனை உருக்கித்தள்ளும் நிகழ்ச்சிகளே இப்பாடல்களுக்கு ஆதாரங்களாக நிற்கின்றன. அவைகள் பெரும்பாலும் இரு கட்சிக்காரர்களுக்குள் நடக்கும் போர்களாக இருக்கும் அல்லது ஒரு ஆண் ஒரு பெண் செய்த அற்புத வீரச் செயலாக இருக்கும். இவ்விதமான அடிப்படை கொண்டதே நாட்டுப்பாடல் என்று வழங்கி வருகின்றது. சமீப காலத்தில்தான் இவற்றில் பல பாடல்கள் ஏடுகளில் எழுதப்பட்டன. சில அச்சும் ஏறி இருக் கின்றன. பல இன்னும் கர்ண பரம்பரையாகவே இருக்கின்றன.

தமிழ் நாட்டில் வழங்கிவரும் நாட்டுப் பாடல்களில் சிறந்தவை பொன்னழகர் அம்மானை, நல்லதங்காள் கதை, கான் சாயபு சண்டை, கட்டபொம்மு சரிதை, சின்னப்பையன் வில்லுப் பாட்டு, தேசிங்கு ராசன் கதை முதலியன. பொன்னழகர் அம்மானை கொங்கு நாட்டில் நடந்த ஒரு வகுப்புப் போரைக் குறித்தது. நல்லதங்காள் கதை ஒரு சமூக ஊழலைக் குறித்து எழுந்த சம்பவத்தைக் கூறுவது. கான் சாயபு சண்டை மதுரை யில் சிறிது நாள் ஆக்கிரமித்து ஆண்ட ஒரு முகம்மதியன் கதை,

கட்டபொம்மு பாண்டிநாட்டுப் பாஞ்சாலங்குறிச்சி வீரச் சரிதம், சின்னப்பையன் பாட்டு திருநெல்வேலிச் சீமையில் ஒரு தாழ்ந்த குலத்தான் செய்த தீரச் செயல். தேசிங்குராசன் சரிதை செஞ்சிக்கோட்டை ஆண்ட ஒரு தீரன் செயல். இவ்விதப் பாடல்களில் இராமப்பையன் அம்மானையும் ஒன்று. இதுவரை அச்சு ஏறாத நூல்களில் இது ஒன்று ஆகும். இதனை ஆங்கிலத்தில் சுருக்கமாக "இந்திய புராதனம்" (Indian Antiquary) என்ற வெளியீடு 1916-ல் பதித்திருக்கிறது.

இராமப்பய்யன அம்மானை.

இது சரித்திரத் தொடர்பு கொண்ட ஒரு சிறந்த நாட்டுப் பாடல். மேலே சொன்ன மற்ற அம்மானைப் பாடல்களைப் போன்று தொடர்ச்சியாகக் கதையைக்கூறும் ஒரு நூல். கி. பி. 1623—56 வரையில் ஆண்ட திருமலை நாய்க்கரிடம் தளவாயாக இருந்த இராமப்பய்யன் என்ற சேனதிபதி இராமநாதபுரத்தில் ஆண்ட சேதுபதி சடைக்கத்தேவன்மீது போர்தொடுத்து அவனைச் சிறை செய்து கொண்டுவந்த தீரச்செயலைக் கூறும் நூல் இதுவாகும். நாட்டுப்புறங்களில் உடுக்கை அடித்துக்கொண்டு பாடும் முறையில் எழுதப்பட்டது. அந்தக் காலத்திற்கு ஏற்றப்படி மிகத் தெளிவான நடையில் நாட்டு மக்கள் எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது. பாட்டுக்குத் தகுந்தபடி எதுகை மோனை விரவி வந்துள்ளது. மேலும் அடுக்குச் சொற்களும் திருப்பித் திருப்பிச் சொல்லும் கூற்றுகளும் வந்துள்ளன. மக்கள் விரும்பிக் கேட்டு நெஞ்சில் ஆழ்ந்து நிற்கக்கூடிய முறையில் அடுக்கடுக்கான சொற்கள் அமைந்துள்ளன. இந்த முறையில் பொதுவாக அம்மானைப் பாடல்கள் எல்லாம் இருக்கும்.

இந்நூல் கர்ணபரம்பரையாக வழங்கி வந்து பின்னல் ஏட்டில் எழுதப்பட்டிருக்கவேண்டும். நடைப் போக்கு சாதாரணமாக உள்ளது. நாட்டில் வழங்கும் மருவுச் சொற்களும் திரிபுச் சொற்களும் திசைச் சொற்களும் நிரம்ப வந்திருக்கின்றன. ஏட்டில் எழுதினவர்கள் மிகுந்த இலக்கணப் பிழைகளும் சொற்பிழைகளும் செய்திருக்கின்றனர். அவைகளைக் கூடியவரையில் திருத்திப் படிப்பதற்கு இலகுவாக இருக்கும்படி ஆக்கப்பட்டிருக்கின்றது. இந்நூலினுடைய ஆசிரியர் இன்னர் என்று கூற யாதொரு ஆதாரமும் கிடைக்கவில்லை. நாட்டுப்புறத்துப் புலவர் ஒருவராக இருக்கலாம். இலக்கிய இலக்கணங்களில் தேர்ச்சியற்றவராக இருக்க வேண்டும்.

இராமப்பையன் சரிதம் கூறும் பிரதிகள் மூன்று இப்போது கிடைத்திருக்கின்றன. ஒன்று தஞ்சை மகாராசர் சரபோஜி மன்னர் அருமையாகத் தொகுத்து வைத்திருக்கும் சரசுவதி மகால் நூலகத்தின் பிரதி ஆகும். இதில் 300 அடிகள்தான் உண்டு. இதில் சரிதம் முடிவு பெறவில்லை. மற்ற இரண்டு பிரதிகளும் சென்னை அரசியலார் கைப்பிரதிச் சாலையில் இருக்கின்றன. இவை இரண்டும் ஏறக்குறைய ஒற்றுமைப்பட்டு இருக்கின்றன. சரிதமும் பூர்த்தியாக இருக்கின்றது. தஞ்சைப் பிரதிக்கும் சென்னைப் பிரதிக்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. சில சொற்றொடர்களும் அடிகளும் ஒத்து இருக்கின்றன. ஆனால் பெரும்பான்மைச் சொற்றொடர்கள் வேறு ஆகும். படித்துப் பார்த்தால் இரண்டும் வெவ்வேறு புலவர்கள் செய்திருக்கலாம் என்று நினைக்கக்கூடியதாக இருக்கின்றன. சென்னைப் பிரதி விவரமாகவும் மிகுந்த அடிகளைக் கொண்டதாகவும் இருக்கின்றது. நடையும் வேறு என்று சொல்லலாம்.

கதைச் சுருக்கம்.

முன்னமே கூறியபடி இந்நூல் மதுரை நாயக்க மன்னன் திருமலை நாயக்கனுடைய தளவாய் இராமப்பையன் சேதுபதி சடைக்கத்தேவன்மீது படையெடுத்துச் சிறை செய்த செய்தி கூறுவது. இச் செய்தியை தஞ்சைப் பிரதி அடியிற் கண்டபடி கூறுகிறது. இராமப்பையன் திருமலை நாயக்கனிடம் சென்று சடைக்கத்தேவன்மீது படையெடுக்க உத்தரவு கேட்கிறான். நாயக்கன் அதனை மறுத்து சடைக்கத் தேவன் வெகு பலசாலி முன்னம் நமது சேனையைத் தோற்கடித்துள்ளான் ஆகையால் அது செய்யாதே என்கிறான். ஆனால் இராமப்பையன் வீரியம் பேசி, அவனை வென்று சிறைப்படுத்தி வருவதாக வாக்குறுதி கூறுகிறான். நாயக்கன் அது கேட்டு எச்சரிக்கை செய்துப் பின் சம்மதிக்கிறான். பிறகு பரிசுகள் தந்து விடை கொடுக்கிறான். இராமப்பையன் தன் தமயன் வைத்தியநாதனிடம் விடை பெறச் செல்கையிலும் எச்சரிக்கை செய்யப்படுகிறான். பிறகு மிகுந்த கோலாகலத்துடன் பாளையக்காரர்கள் புடைசூழ சேனைகளை நடத்திக்கொண்டு மானாமதுரையில் பாளையம் இறக்குகிறான். அதனைக் கண்ட தூதுவன் படைக்கு அஞ்சி சடைக்கத் தேவனிடம் இச்செய்தியைச் சொல்லுகிறான். மிகுந்த கோபத்துடன் சடைக்கத் தேவன் வீரியம் பேசித் தன் மருகன் வன்னியன் மூலம் படை அனுப்புகிறான்.

சென்னைப் பிரதியில் கண்ட கதைச் சுருக்கம் அடியிற் கண்டவாறு. முதலில் மேலே சொன்ன சரிதையே சிறிது விவரமாகக் கூறப்பட்டுள்ளது. பிறகு இராமப்பையன் கொலுவிருந்து விட்டு ஸ்ரீ மீனாட்சியம்மையைத் தொழுதுவிட்டு வெகு டாம்பீகமாகப் பவனி செல்கிறான். வண்டியூர் திருப்பூவணம் வழியாக மானாமதுரையில் பாளையம் இறங்கிக் கூடாரம் அடிக்கிறான். அதைத் தூதுவன் கண்டு சடைக்கனிடம் ஓடிப்போய்க் கூறுகிறான். சடைக்கன் கோபுங்கொண்டு வீரம் கூறுகிறான். தன் மருகன் வன்னியனை அழைத்துப் போருக்கு அனுப்புகிறான். அரியாணிக் கோட்டைக்குப் படை செல்லுகிறது. அது முதல் இரு படைகளுக்கும் போர் நடக்கிறது. முதலில் வன்னியின் கட்சியே வெல்லுகிறது. இராமய்யன் தன் கீழுள்ள 72 பாளையக்காரர்களையும் அழைத்து எச்சரிக்கை செய்து போர் புரிகிறான். இரு படைகளும் அணிவகுத்து போர் செய்தன. கடும் போரில் வன்னி மீண்டும் வெல்லுகிறான். ஒட்டன் ஓலைகொண்டு செல்லுகிறான். அதனைப் படித்து சீற்றம் மிகுதி கிளம்புகிறது. பிறகு போகலூர் கோட்டையிலே போர் நடக்கிறது. வன்னி வெற்றியுற்றுத் திரும்பிப்போய் சடைக்கனிடம் பரிசு பெறுகிறான். இராமன் மீண்டும் அரியாசைபுரத்தை முற்றுகை இடுகிறான். அதில் சடைக்கனுக்குக் காயம் ஏற்பட்டுப் படகு ஏறி இராமேசுவரத் தீவு அடைகிறான். இராமன் அத்திபுத்திக் கோட்டையில் இருக்கிறான். அப்போது திருமலைநாய்க்கரிடமிருந்து மதுரைக்கு வரும்படி ஓலை வருகிறது. இராமய்யன் மதுரை சென்று நாயக்கரைக் காண்கிறான். விஜயநகரத்து இராயரிடமிருந்து உதவி வேண்டி நிருபம் வந்ததாகச் சொல்லி நாய்க்கன் இராமய்யனை வடக்கே அனுப்புகிறான். சேனைகளைக் கூட்டிக்கொண்டு இராமய்யன் வடக்கே திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி, கண்ணனூர், வாலிகொண்டபுரம் வழியாகக் கணவாய் சென்று இராயரைக் கண்டு அவனுக்காக துலுக்கருடன் போர் புரிந்து வெற்றி அடைகிறான். பிறகு பரிசுகள் பெற்று மதுரை திரும்புகிறான். மீண்டும் சேதுநாடு சென்று போகலூர் கோட்டை முற்றுகை போடுகிறான். அதில் மன்னன் குமாரன் அழகனைப் பிடித்து சித்திரவதை செய்துகொல்லுகிறான். அவன் மனைவி வீரம் பேசி உயிர் விடுகிறாள்.

பிறகு இராமேசுரத்தீவிற்குச் செல்ல அணை கட்ட ஆணை இடுகிறான். படைகள், வேசியர், வணிகர், ஏழையர் எல்லோரும் சேர்ந்து அணை கட்டுகிறார்கள். (இங்கே கவியின் கற்பனை வெகு விநோதமாக இருக்கிறது).

அணை கட்டினதும் பண்டைய இராமனைப்போல் அதன்மீது இராமய்யன் செல்லுகிறான். போர் செய்வதற்கு பறங்கிகளை உதவிக்கழைத்துச் செல்லுகிறான். கப்பற் போரும் நடக்கிறது. வெற்றியும் தோல்வியும் இருபுறமும் ஏற்படுகின்றன. இப்படி இருக்கையில் வன்னிக்கு வைசூரி காணுகிறது. அதுகண்டு கோபித்துச் சடைக்கன் யாகம் செய்வித்து இராமய்யனுக்குப் பிளவை தோன்றச் செய்கிறான்.

பாம்பன் துறையில் போர் நடக்கிறது. அம்மை வார்த்திருந்தும் வன்னி போருக்குச் செல்லுகிறான். அப்போரில் வென்றுவிட்டுத் திரும்புகிறான். திரும்பினதும் சடைக்கனிடம் இராமய்யன் அடைக்கலம் ஆவதே சரியென்று சொல்லிவிட்டு உயிர் துறக்கிறான். எல்லாரும் அழுகிறார்கள். ஈமத் தீயில் வன்னியின் மனைவி விழுந்து இறக்கிறாள். சடைக்கன் இனிப் போர் செய்தல் சரியல்லவென்று அடைக்கல ஓலை அனுப்புகிறான். பிறகு கோலாகலத்துடன் சரண் அடைகிறான். ஆனால் துடுக்காய்ப் பேசினதினால் விலங்கிடப்படுகிறான். இராமய்யன் சடைக்கனோடு மதுரைக்குத் திரும்புகிறான். திருமலை நாயக்கனிடமும் சடைக்கன் துடுக்காகப் பேசினதினால் சிறையில் அடைக்கப்படுகிறான். இராமய்யன் வெகுமதிகள் பெற்று ஊரில் பவனி செல்லுகிறான். சிறையில் சடைக்கன் மனம் நொந்து கடவுளை வணங்குகிறான். தளைகள் தானே அறுந்து விழுகின்றன. நாயக்கன் அது கேட்டு வியந்து அவனை விடுதலை செய்துப் பரிசுகள் தந்து அவனைத் தலைநகருக்கு அனுப்புகிறான். சடைக்கன் இராமநாதபுரம் சென்று மீண்டும் ஆட்சி புரிகிறான். வாழ்த்துடன் அம்மானைப்பாடல் முடிவு பெறுகிறது. இதுதான் கதையின் சுருக்கம்.

நூலின் சிறப்புக்கள்.

நூலை வாசித்தவுடனே நமது மனதில் தோன்றுவது இந்நூலின் கதாநாயகன் யார் என்பதே. தஞ்சைப்பிரதியில் முதற்பகுதியே உள்ளதினால் கதாநாயகன் இராமப்பையனே என்று தோன்றும். சென்னைப் பிரதியை வாசித்தால் வேறு விதமாகத் தோன்றும். அடிக்கடி இராமப்பையன் படை தோல்வி அடைவதும், வன்னியன் வெற்றி அடைவதும், போருக்கு உதவியாக இராமப்பையன் தன் பாளையக்காரர்களை அழைப்பதும் அவர்களை நன்றாகப் போர் செய்யாவிட்டால் கழுவில் ஏற்றுவதாகப் பயமுறுத்துவதும் பறங்கிகளைச் சகாயம் வேண்டுவதும் அவர்கள் இருந்தும் வெல்லக்கூடாமல் திகைத்ததுவும் வன்னிக்கு அம்மை கண்டு வருந்தியதினால் போருக்கு வரத் தாழ்ந்ததும் அதுகண்டு இராமன் பாம்பனைப் பிடிக்க முயல்வதும் அம்மையோடு

வன்னி வந்து போர் புரிந்து வெற்றியடைவதும் அந்த முயற்சியில் வென்று அரண்மனை சென்று உயிர் விடுவதும் தன் மருமகன் இறந்ததினால் சடைக்கன் அடைக்கலம் அடைவதும் கண்டால் வன்னிதான் கதாநாயகன் என்று கூறவேண்டும் அல்லவா! கவியும் அவனுடைய வீரச் செயல்களையும் சொற்களையுமே எடுத்து விளக்கமாகக் கூறுகிறான். இராமய்யன் அழகனைச் சித்திரவதை செய்த கொடிய செயல் அவன் புகழுக்கு இழுக்கு ஆகிறது. வெறும் பேச்சே அன்றி உண்மைப் பெருமை இராமனிடம் காட்டப்படவில்லை.

இராமனுக்குத் துணையாக அவனுடைய சொந்தக்காரர்களே யன்றி 72 பாளையக்காரர்களும் செல்லுகிறார்கள். அவர்கள் சிறிதும் வேறுபாடு இன்றி இராமனுக்குக் கீழ்ப்படுகிறார்கள். இராமனும் மிரட்டுதல் செய்தே அவர்களை நடத்துகிறான். அம் மிரட்டுதலில் கழுவேற்றலும் ஒன்று. தனது நாட்டுக் குறுநில மன்னன் ஆகிய சடைக்கன்மீது படையெடுத்துச் செல்வதில் அன்னிய நாட்டானாகிய பறங்கியை அழைத்தது மிகுந்த அபக் கியாதி என்று கூறவேண்டும். அது அவனுடைய நாட்டு அன்பைக் காட்டுவதில்லை. மேலும் அவன் சேனைகளில் துலுக்கரும் இருக் கிறார்கள். சடைக்கத்தேவனாகிய மறவனோ மிகுந்த ஆண்மையும் நாட்டுப்பற்றும் அஞ்சா நெஞ்சமும் தீரமும் கடவுள் பக்தியும் உள்ளவன். தன் மருகன் இறந்தபிறகுதான் அவன் சொல்படி அடைக்கலம் அடைகிறான். அப்படி இருந்தும் தைரியம் விட்ட வனல்ல. சிறையிலிருந்தும் நெஞ்சு அழியாத பேச்சே அவன் வாயிலிருந்து வருகிறது. திருமலை நாய்க்கன் மிகவும் கம்பீர குண முள்ளவன். சடைக்கன் கொர்வப் பேச்சைக் கேட்டு சிறையில் இட்டும் அவன் தெய்வ அன்பு கொண்டவன் என்று கண்டதும் அவனை விடுவித்து அவனிடம் நாட்டைக் கொடுத்துவிடுகிறான். இராமன் சண்டைக்குப் போவதற்குத் துடித்துக்கொண்டு இருந்த போதும் எச்சரிக்கை செய்துவிட்டு இறுதியில்தான் உத்தரவு கொடுக்கிறான்.

அக்காலத்தில் போருக்கு அனுப்புவதற்கு முந்தி தாம்பூலம் கொடுத்துப் பரிசுகளும் கொடுப்பதுண்டு. வென்ற பிறகும் அவ்வாறே நடக்கும். சிறை பட்டவர்களைச் சித்திரவதை செய்வ துண்டு. பெண்களைச் சிறையெடுப்பதும் அவமதிப்பதும் உண்டு. போருக்குச் செல்லுகிறவன் ஆடம்பரத்துடன் பவனி செல்வது வழக்கம். துப்பாக்கி கத்தி முதலிய ஆயுதங்களேயன்றி நிலப் போரோடு கடற்போரும் நடந்தன. கப்பற் போரில் பறங்கிகள் சோனகர்கள் சிறந்து விளங்கினார்கள். இவை முதலான செய்தி களை இந்நூல் காட்டுகிறது.

சரித்திரம்.

திருமலை நாய்க்கன் சரித்திரம் பலவகைகளிலும் ஆராய்ச்சி செய்து எழுதப்பட்டுள்ளது. அந்த வரலாற்றிற்கும் இந்த அம்மானையில் கண்ட போக்குக்கும் சிற்சில வேறுபாடுகள் உண்டு. அவைகள் கவியின் கற்பனையினால் ஏற்பட்டிருக்கலாம். அல்லது கர்ணபரம்பரையில் சேர்ந்தும் மாறியும் வந்திருக்கலாம். சரிதத்தின் சுருக்கத்தை இங்கு குறிப்போம்.

தென்னாட்டை விஜயநகரத்து இராயர்கள் கைப்பற்றிக் கொண்டபிறகு இதனை ஆளச் சில நாயக்கர்களை அனுப்பினார்கள். அவர்களிலே மதுரையை ஆண்டது விசுவநாத நாயக்கர் வமிசம். அந்த வமிசத்திலே ஆறாவது பட்டத்திற்கு வந்த முத்துகிருஷ்ணப்ப நாயக்கருக்கு இரண்டு மக்களில் மூத்தவர் முத்துவீரப்ப நாயக்கர் இளையவர் திருமலைசவுரி நாயக்கர். இவரே பேர்போன திருமலை நாயக்கர். இவர் பிறந்தது கி. பி. 1584. மூத்தவர் பட்டம் பெற்று 1622-ல் காலகதி அடைந்தார். பிறகு திருமலை நாயக்கர் 1623-ல் பட்டம் எய்தினர். அவருக்கு அப்போது வயது 39. அவர் வெகு புகழோடு ஆட்சிபுரிந்து பல அற்புதக் கட்டடங்கள் கட்டி பல யுத்தங்களில் ஈடுபட்டு 1659-ல் காலகதி அடைந்தார். அவர் சமய வழிபாட்டில் ஈடுபட்டு கோயில்களைப் புதுப்பித்து தமிழ் தெலுங்கு என்ற இரு மொழிகளிலும் ஒருவாறு ஆதரவு காட்டி நாயக்க மன்னர்களிலேயே மிகச் சிறந்தவராக விளங்கினர்.

ஒரு அரசனுடைய பெருமை அவனுடைய அமைச்சர்களாலேதான் வரும். சரியான அமைச்சர்களைத் தெரிந்தெடுப்பதே ஒரு அரசனுடைய சிறந்த செயல். திருமலை நாயக்கர் அதில் வல்லமை பெற்றவர். இவர் தன் தளவாய் (சேனாதிபதி) ஆகவும் முதல் அமைச்சராகவும் இராமய்யர் என்ற ஒரு பிராமணரைத் தெரிந்தெடுத்து நியமித்துக்கொண்டார். அவரே இவருடைய பெரும் புகழுக்குக் காரணம் ஆனார். இராமப்பய்யர் மதுரைக்கு ஏழுகல்லில் உள்ள சதுர்வேதமங்கலம் என்ற கூத்தியார்குண்டில் பிறந்தவர். அவ்வூர் சிவாலயத்தில் அவருடைய உருவச்சிலை இருக்கிறதாம்.

இராமப்பய்யர் நாயக்கருக்குச் செய்துதந்த முதல் வெற்றி மைசூர்ப் போரில் ஆகும். அப்போது அவருக்கு உதவியாகச் சென்றவர் திண்டுக்கல் பாளையக்காரர் இரங்கண்ண நாயக்கர். இரண்டாவது வெற்றி சேதுபதியுடன் செய்த படையெடுப்பில் ஏற்பட்டது. இதில் நடந்த போரின் சரிதைதான் இராமப்பய்யன் அம்மானையில் பாடப்பட்டுள்ளது.

சேதுபதி வம்சம் இராமநாதபுரத்தைத் தலைநகராகக்கொண்ட மறவநாட்டை ஆண்டுவரும் வம்சம். இவ்வம்சத்தார் இராமேசுவரத்தின் தலைமை வகித்துச் சேதுவைப் பாதுகாத்து வந்ததினால் இவர்களுக்குச் சேதுபதி என்ற பட்டம் வந்தது. இவர்கள் குலம் மறவர் குலம். உடையான் சேதுபதி என்ற முதல் சேதுபதி 1621-ல் காலகதி அடைந்தார். அவருக்கு கூத்தன் சேதுபதி என்ற ஒரு மகன் தோன்றி 1635 வரை ஆண்டார். கூத்தனுக்கு சடையப்பத் தேவர் என்ற ஆணும் கண்காணும்நாச்சியார் என்ற ஒரு பெண்ணும் பிறந்தார்கள். சடைக்கத் தேவருக்குத் தளவாய்ச் சேதுபதி என்ற ஒரு பட்டமும் உண்டு. கூத்தன் சேதுபதிக்கு 'தம்பி' என்ற ஒரு சோர புத்திரனும் இருந்தான். சடைக்கத் தேவர் பட்டத்துக்கு வந்து மூன்று ஆண்டுகளுக்குள் இரகுநாத தேவர் என்பவரைத் தத்து எடுத்து அவருக்குப் பட்டம் அளிப்பதாக விளம்பரம் செய்தார். அது தம்பிக்குப் பிடிக்கவில்லை. உடனே மதுரை சென்று திருமலை நாயக்கரைத் தூண்டி சடைக்கத் தேவர் மீது கோள் சொல்லி அவரை நீக்கித் தன்னை சேதுபதி ஆக்கும்படி தூண்டினார். உண்மை அறியாத நாயக்கரும் ஒப்புக் கொண்டார் படையெடுப்பும் தொடங்கியது. சடைக்கன் சேதுபதி தனக்கு கீழ்ப்படியவில்லையென்று குற்றம் சாட்டி அவர்மீது படையெடுக்க இராமப்பய்யரும் இரங்கண்ண நாயக்கரும் அனுப்பப்பட்டார்கள். நாயக்கருக்குக் கீழ் இருந்த பாளையக்காரர்கள் கூட அனுப்பப்பட்டார்கள். போர் நடந்தது. வெற்றி தோல்விகள் இருபுறமும் இருந்தன. சடைக்கன் சேதுபதி பாம்பன் கால்வாய் தாண்டித் தீவில் இருந்துகொண்டு போர் புரிந்தார். இலங்கையிலிருந்தும் கொச்சியிலிருந்தும் வந்து ஐந்து கப்பல்களில் இறங்கிய பறங்கியர்கள் போரில் கலந்துகொண்டார்கள். இச் செய்தியைச் சில பாதிரிமார்கள் குறித்திருக்கிறார்கள். (1653) இராமய்யர் பாம்பன் கால்வாயைத் தாண்ட ஒரு அணை கட்டுவித்து அதின்பேரில் சென்று போர் புரிந்தார். வெற்றிபெறும் சமயத்தில் இராமய்யர் நோய் கண்டு இறந்துவிட்டார். சேதுபதி செய்த (அபசார) செய்வினை மந்திரத்தால் இறந்ததாகக் கூறுவர். சிலர் நஞ்சூட்டிக் கொன்றார் என்பர். ஆனால் அதனால் போர் முறை மாறவில்லை. நாய்க்கர் அவர் மரணத்திற்காக வருந்தினார். உடனே அவருடைய மருமகனை சிவராமய்யரை தளவாயாக நியமித்தார். போர் மீண்டும் தொடங்கியது. போரில் சேதுபதி தோல்வி உற்றார். அவரும் அவருடைய மருமகன் சடைக்கத் தேவரும் பிடிபட்டு மதுரையில் சிறையில் அடைக்கப்பட்டார்கள்.

சேது நாட்டின் தலைமை தம்பிக்குக் கிடைத்தது. ஆனால் அவனுக்கு மறவர்கள் கீழ்ப்படியவில்லை. நாடெங்கும் கொள்ளையும் கொலையும் கலகமும் ஏற்பட்டன. சடைக்கனுடைய மருமக்களான இரகுநாத தேவரும் நாராயணத் தேவரும் கலகம் செய்தார்கள். நாய்க்கரிடம் தம்பி முறையிட்டு உதவிநாடினான். அதற்குள் இராமேசுவரம் சென்று மதுரை திரும்பிய சில வடநாட்டு யாத்திரிகள் நாய்க்கரிடம் சென்று நாட்டு நிலைமையைக் குறித்துச் சொன்னார்கள். அதைக்கேட்டு உண்மை நிலைமை அறிந்த நாய்க்கர் சடைக்கனை விடுதலை செய்து சேது நாட்டிற்கு அனுப்பினார். அவர் கலகத்தை அடக்கி அமைதி கொண்டுவருகையில் தம்பி 1645-ல் அவரைக் கொன்றுவிட்டான். பிறகு நாடு மூன்றாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. தம்பி இறந்தான். நாடு இரகுநாத தேவர் ஆளுகைக்கு வந்தது. பாதிரிமார்கள் எழுதிவைத்த சரித்திரத்திலும் பெரும்பாலும் இதுவே காணப்படுகிறது. மேலும் இராமப்பய்யன் சேதுபதிப் போரின் இடையில் சாகவில்லை என்றும் அதற்குப் பிந்திதான் இறந்தார் என்றும் சில சான்றுகள் கூறுகின்றன.

சில வேறுபாடுகள்.

மேலே கூறிய சரித்திரத்திற்கும் அம்மானைக் கதைக்கும் உள்ள வேறுபாடுகளில் சிலவற்றைக் கூறுவோம். போர் முடியும் காலத்தில் இறந்தது யார் என்பதே ஒரு வேறுபாடு. இராமப்பய்யன் நோயால் இறந்ததாக சரித்திரம் கூறுகிறது. அம்மானையோ வன்னியன் இறந்ததாகக் கூறுகிறது. அவன் இறந்ததினால் சேதுபதி அடைக்கலம் புகுந்தான் என்று அது கூறுகிறது. சரித்திரமோ இருவிதமாக இருக்கிறது. இராமப்பய்யன் இறந்தும் போர் நடந்தது அவன் மருமகன் தளவாயாகி வெற்றியடைந்தான் என்பது ஒன்று. இராமப்பய்யன் வெற்றியடைந்துப்பின்னும் இருந்தான் என்பது மற்றொன்று. சிறையடைந்தவர்கள் சேதுபதியும் அவன் மருமகனும் என்று சரித்திரம் கூறுகிறது. தம்பியினுடைய கலகம் அம்மானையில் கூறப்படவில்லை. சேதுபதி விடுதலை யடைந்தது யாத்திரிகர்களுடைய வேண்டுகோளால் என்று சரித்திரம் கூறும். ஆனால் அம்மானையோ தெய்வாதீனத்தில் விலங்குகள் உடைய அதுகொண்டு நாயக்கன் விடுதலை தந்தார் என்று கூறும். இது கற்பனையாக இருக்கலாம்.

இராமப்பய்யன் போரின் இடையில் நாயக்கரால் அழைக்கப்பட்டு வடக்கே இராயருக்காக உதவி செய்ய அனுப்பப்பட்டார் என்று அம்மானை கூறுகிறது. ஆனால்\ சரித்திரமோ

இராயரின் ஆதிக்கத்திலிருந்தும் நாயக்கர் நீங்கிக்கொண்டு சுயேச்சை அடைந்தார் என்று கூறுகிறது.

இவ்வாறான சில வேறுபாடுகள் இருந்தபோதிலும் பெரும் பான்மையாக இரண்டு வரலாறுகளும் ஒத்தே இருக்கின்றன என்று கூறலாம். அந்த வகையில் இந்த அம்மானை நூல் சரித்திர உண்மை அறிவதற்கு மிகுந்த பலன் அளிக்கிறது.

பாளையப்பட்டுக்கள்.

பாளையம் என்றால் சேனை அல்லது இராணுவம் இறங்கி அமரும் இடம். பாளையக்காரர் என்றால் அந்தப் பாளையத்துத் தலைவர். பாளையப்பட்டு என்றால் அவர்கள் அரசு அல்லது அவர்கள் ஆட்சியில் அடங்கியிருக்கும் நாடு. இத்தலைவர்கள் பண்டைத் தமிழ் நாட்டு வேளிர் அல்லது குறுநில மன்னருக்குச் சமானமானவர்கள். இவர்களை ஆங்கில நாட்டில் நடுக்காலத்தில் இருந்த நாட்டுத் தலைவர்கள் போன்றவர்கள் (Feudal barons) என்னலாம். அரசன் தன் நாட்டை அனேக வட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒவ்வொரு தலைவனை நியமித்து அவன் குறிப்பிட்ட சேனையை வைத்துக்கொண்டு, அரசன் அழைத்தபோது அச்சேனையுடன் வந்திருந்து போர் நடத்த வேண்டும் என்ற நிபந்தனை இட்டு வழங்கிவந்த முறையே பாளையப்பட்டு முறை ஆகும். பாளையப்பட்டு முறையை முதல் முதலில் தென் நாட்டில் ஏற்படுத்தியவன் நாயக்க வம்சத்தினைத் தொடங்கின விசுவநாத நாயக்கன். அவன் நாட்டிலிருந்த முந்திய குறுகிய மன்னர்களில் இணக்கமானவர்களைச் சேர்த்துக் கொண்டும் புதிதாகத் தன்னுடன் வந்த நாயக்கத் தளகர்த்தர்களை வைத்துக்கொண்டும் பாளையக்காரர்கள் ஆக்கி வெகு திறமையுடன் ஆண்டான். அந்த வம்சத்தில் தோன்றிய திருமலை நாயக்கன் அவன் முறையை வலுப்படுத்தினான். அவனுக்குக் கீழே இராமநாதபுரம் சேதுபதி, சிவகங்கை உடையாத்தேவன் புதுக்கோட்டைத் தொண்டைமான் என்ற மன்னர்கள் போக மற்றவர்கள் 72 பாளையக்காரர்கள் ஆக வகுக்கப்பட்டார்கள். அவர்களின் பெயர்களைக் கூறுவோம்.

திருச்சி :	அரியலூர்	நயினார்
	துறையூர்	ரெட்டியார்
	இலுப்பூர்	காமாட்சி நாயக்கர்
	குளத்தூர்	தொண்டைமான்
	கற்றலூர்	
	பெரம்பலூர்	குட்டிதேவர்

மணற்பாறை :	மருங்காபுரி	பூச்சி நாயக்கர்
	நத்தம்	லிங்கம நாயக்கர்
	குமாரவாடி	லக்கைய நாயக்கர்
	மடுவூர்	நாயக்கர்
	தோகைமலை	நாயக்கர்
	பிள்ளை முழுங்கி	முத்தி நாயக்கர்
	ராமகிரி	சாமி நாயக்கர்

திண்டுக்கல் :

பழனி		அமட்டாறு
விருபாட்சி		அம்மய நாயக்கர்
ஆய்க்குடி		கூளப்ப நாயக்கர்
மாம்பாறை		கொப்பி நாயக்கர்
இடையகோட்டை		தொட்டய்யன் கோட்டை
அயிலூர்		திருமலை கண்டம
வல்லகொண்ட	நாயக்கர்	திருமலை போடி
மடுவூர்		பூசாரி
பாலமுத்து		பெரியகுளம்
மருமுத்து		அப்பாச்சி
எழுக்காபுரம்		தேவாரம்
தவசிபடை		கம்பம்

மதுரை :

வாகாமி	வெள்ளிய குண்டம்
ஊற்றம்	சிறுமலை
தொட்டப்ப	கச்சைக்கட்டி
கவண்டன் கோட்டை	

திருநெல்வேலி :

எழாயிரம் பண்ணை	உளர்நாடு
எட்டயபுரம்	கடம்பூர்
பாஞ்சாலன்குறிச்சி	காடல்குடி
சிவகிரி	குளத்தூர்
சேற்றூர்	மேமந்தை
கோலாறு	மாவிவோடை
நாகலாபுரம்	அருங்குளம்
ஊற்றுமலை	செந்நெல்குடி

குருக்கவெட்டி	பாவாலி
மணியாச்சி	தும்பிச்சி
சொக்கன்பட்டி	சாமி
சுரண்டை	எட்டுமா
நடுவுகுறிச்சி	மணிக்கோட்டை
தலைவன் கோட்டை	ஆற்றங்கரை
கொல்லம்பட்டி	பெத்தரை
சிங்கம்பட்டி	அழகாபுரி
நெய்க்கொட்டான் சேவல்	இரட்டைக்குடை வன்னியன்

கோயமுத்தூர் :

தளி	ஊற்றுக்குழி

சேலம் :

தலைமலை	பெம்மசானி
தாரமங்கலம் கெட்டி	இளம்புரம்
மன்னிமை	ராஜாப்பாளையம்
குருவிகுளம்	

இப் பெயர்கள் அம்மானைப் பாடலில் வந்திருப்பதைக் காணலாம். அக்காலத்தில் வழக்கத்தில் இருந்த பெயர்கள் முற்றும் இதில் காண முடியும். மேலும் பல முசுலிம் தலைவர்களும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் பெயர்களையும் காண்கிறோம். இவர்களின் பெயர்கள் சிதைந்திருக்கின்றன. இவர்கள் ஊதியம் பெற்று போர்புரியக்கூடியவர்கள். பாளையக்காரர்களோ இராச விசுவாசத்தைப்பொருத்துப் போர் புரிகிறவர்கள்.

சில பழக்க வழக்கங்கள்.

அம்மானை நூலில் அக்காலத்துப் பழக்க வழக்கங்ள் சில கூறப்பட்டுள்ளன.

போருக்குப் போகும்போது அரசனிடம் விடைபெற்று தாம்பூலம் பரிசு முதலியன பெற்று ஊர்ப் பவனி சென்று கொலுவு இருத்தல். அப்போது ஆடல், பாடல், வாத்தியம் முதலியன உண்டு.

பாளையம் இறங்குமிடத்தில் கூடாரம் அடித்து அதில் கொலுவு இருத்தல் உண்டு.

போருக்குச் செல்லும் முன்னர் ஆலயம் சென்று மூர்த்திகளைத் தொழுதுவிட்டுச் செல்லுதல் ஒரு வழக்கம்.

கோபம் வந்து வீரியம் பேசுகையிலும் நாட்டு வழக்கம் மீருமல் இருத்தல். இராமய்யன் பேசும்போது சடைக்கனை நிர்மூலம் செய்வதாகக் கூறுகிருன். ஆனல் சடைக்கன் பேசும்போது இராமய்யனை அவ்வாறு செய்வதாகக் கூறுவதில்லை. அவனை வென்றபிறகு கொல்லாமல் குடுமியிலே தேங்காய் கட்டி கண்ணைக் குத்திக் காட்டில் ஓட்டுவதாகக் கூறுகிருன். ஏனெனில் பிராமணனைக் கொன்ருல் பாவம் வருமாம்.

அபசார மந்திரம், மாரண வித்தை, செய்வினை செய்தல் முதலியவைகளில் அப்போது முழு நம்பிக்கை இருந்தது. யாகம் செய்து பிளவை உண்டாகும்படி ஏவுதலும் இருந்தது.

மன்னர்கள் இறந்தால் மனைவியர் உடன்கட்டை ஏறுதல் இருந்தது. வன்னியன் இறக்க அவன் தேவி ஈமத்தீயில் விழுகிருள். குமாரன் அழகன் கொல்லப்பட அவன் தேவி உயிர் துறக்கிருள்.

போரில் சிறை செய்தால் சித்திரவதை செய்தலும் உண்டு. குமாரன் அழகனை தச்சனைக்கொண்டு முதுகு தோல் உரித்து எலும்புதரித்திடச் செய்த தண்டனை மிகக் கொடூரமானது. இதனைத் தளவாயே செய்கிருன். பெண்களையும் சிறை பிடித்து மானபங்கம் செய்வதும் உண்டாம். இது கொடுங்கோன்மையைக் காட்டுகிறது. ஆனல் பெண்கள் தாங்களே உயிர் துறந்தால் அவர்களைப் போற்றுவண்டு. அழகனுடைய மனைவி உயிர் துறக்க இராமப்பய்யன் மெச்சுகிருன்.

அக்காலத்தில் தளவாய்களாகவும் பிராமணர்கள் இருந்திருக்கிருர்கள். இராமப்பய்யனுடைய சகோதரர்கள் அரசனுடைய சேவகத்தில் இருந்திருக்கிருர்கள். அவர்கள் வைத்தியநாதன், கிருஷ்ணப்பய்யன் என்பவர்கள். (519/1916). மருமகன் கொண்டப்பய்யனும் வேலையில் இருந்தான். பிராமணர்கள் அரச வம்சத்தார்போல் ச்ண்டைக்குச் செல்வார்கள். அப்போது கொடூர குணமும் வந்துவிடும்போல் தோன்றுகிறது. பிராமணரைப் பஞ்சாங்கப் பார்ப்பான் என்று வைவது அக்காலத்திலும் இருந்தது.

முடிப்புரை.

அம்மானையில் சொற் சிறப்பும் பொருட் சிறப்பும் மிளிர்கின்றன. சில உதாரணங்களை எடுத்துக் காட்டுவோம். சொற் சிறப்பில் அருமையான சொற்களை ஏற்ற இடங்களில் எடுத்தாளுவதும், உணர்ச்சி பொங்கச்செய்து நெஞ்சில் ஊறி எழுப்புவதற்காக அடுக்குச் சொற்களை அடுக்கி ஆண்டிருப்பதும் போற்றத்தக்கன.

"ஆங்காரியம் சொல்லும் அருணைத்திரி" — (ப. 3) அருணைத்திரி அமைச்சன் அரசனுக்கு மதி கூறும்போது ஆகக்கூடிய செயலை மட்டும் சொல்லுகிறவன் என்று பொருள்பட ஆங்காரியம் என்ற சொற் பிரயோகம் அருமையானது.

'தோரூத சேவகன்'—(ப. 7)—தோல்வி அறியாத வீரன்—தோரூத — ஒரு வழக்கச் சொல்.

அவ்வாறே அடுக்குச் சொற்களுக்குப் பல பிரயோகங்கள் உண்டு.

"அஞ்சுவனே இராமன் அஞ்சேனே ஒருநாளும்" (3)
"சொன்னதொரு வார்த்தைதனைச் சொல்லடா தூதுவனே" (30)
முதலியன காண்க.

செய்யுட் போக்கும் எளிதானது. மோனை எதுகை நிரம்பி வந்த கொச்சகத்தில் பாடப்பட்டது. பெரும்பாலும் வெண்டளையால் விரவிவந்த காய்ச்சீர் நான்கைக்கொண்ட அடிகளைக் கொண்டது. படிப்பதற்கும் பாடுவதற்கும் இவ்விதச் செய்யுளே ஏற்றமுடையதாகும்.

"ஆலவாய்ச் சொக்கர் அருள்தானும் உண்டாக
சீலமுள்ள திருமலேந்த்ரன் செங்கோல் தழைத்தோங்க" (1)

"பூவேந்தே எங்களுக்குப் பொருந்தி மனமகிழ்ந்து
தேவேந்த்ரன் வட்டம்போல் செய்வித்தீர் மன்னவனே" (10)

"அந்தநாள் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்
ஆழித்தேரேறி அலைகதிரோன் வந்துதித்தான்" (6)

"ஆற்றங்கரையும் அடர்ந்த மரச் சோலையும்" (17)
இவைபோல மற்றவற்றையும் காண்க.

இனி, பொருட்சிறப்பில் நாட்டுப் பழமொழிகளும், உவமை அணிகளும், மிகப் பெற்றுள்ள வாய்ப்புக்களைக் காணலாம். இராமாயணம், பாரதம் முதலியவைகளிலிருந்து உவமைகள் எடுத்துக்காட்டியமுறை மக்களுக்குத் தெரிந்த கதைகளிலிருந்து தெளிவுபடுத்துவதற்காக கொள்ளப்பட்டது என்று கூறலாம். உதாரணங்கள் :—

மேற்கோள்கள்.

1. "அரக்கர் குலத்தை அன்று ராமன் அறுத்தாற்போல்" (3)

2. "அரக்கர் குலத்தை அனுமார் அழித்தாற்போல்" (13)

3. "திரியோதனனை சித்திரசேனன் முன்னாகப்
பரிவாகத் தேர்க்காலில் பாசமுடன் கட்டுகைபோல்"

4. "பஞ்சவர்க்கு மாயன் பாரித்து நின்றாற்போல்" (17)

5. "வாலியிட போரோ மாயனிட போரோ" (32)

பழமொழிகள்.

1. "பின்குடுமி தன்னில் பேருலகு தானறிய
தேங்காயைக் கட்டி சிதற அடிக்காவிட்டால்" (14)

2. "ஆசார வாசல் அரமனைக்குள் உள்ளதெல்லாம்
இடித்துப் பரப்பி எருக்கு விரைப்பார்காண்" (19)

3. "தேக்கிலையில் நீரதுபோல் தியங்கிடவே" (28)

4. "சதுரகிரி பருவதத்தை தான்பார்த்து நாய்
குலைத்தால்" (30)

5. "தட்டழிந்து கெட்டதுகாண் தலைகெட்ட
நூலதுபோல்" (31)

6. "புலியை நரி பாய்ந்து போகுமோ" (34)

7. "வலையில் அகப்பட்ட மானதுபோல்" (52)

இவை முதலாக பற்பல அருமையான பழமொழிகளும் வழக்குகளும் உவமைகளும் ஆங்காங்கு காணலாம். இவைகள் நூலுக்கு ஏற்றம் கொடுக்கின்றன அல்லவா?

கோவை,
ஜூன் 1950.

ம. இராமச்சந்திரன்.

மதுரை நாயக்கர் வம்சம்

- 2. விசுவநாத நாயக்கன் (1529—1564)
  - ⋮
  - 8. முத்துகிருஷ்ணப்ப (1601—1609)
    - 9. முத்துவீரப்ப (1609—1623)
    - 10. திருமலை நாயக்கன் (1623—1659)
      - முத்துவீரப்ப (1659)
    - குமாரமுத்து

இராமநாதபுரம் சேதுபதிகள் வம்சம்

- 1. சடைக்கன் சேதுபதி I (1604—1621)
  - 2. கூத்தன் சேதுபதி (1621—1635)
    - 3. சடைக்கன் II (தளவாய்ச் சேதுபதி) (1635—1645) 1840-ல் சிறை-மீண்டும் அரசு. தம்பியால் கொல்லப்பட்டான்
    - தம்பி (சோர புத்திரன்) கலகம் செய்தவன் (மரணம் 1646)
    - கண்காணும் நாச்சியார்
      - 4. இரகுநாத தேவன் (1645—1670)
      - நாராயணத் தேவன்

இராமப்பையன் அம்மானை

அம்மானைப் பாட்டு (தஞ்சைச்சுவடி எண் 405)

வெண்பா.

காப்பு கடவுள் வணக்கம் சித்திவிநாயகர் துதி

தாரணியே ராமன் சடக்கன் தனைப்பிடித்துப்
பாரறிய வந்தபடை பண்பாட — மாமதுரைச்
சித்திவி நாயகனே செங்கண்மால் தன்மருகா
புத்திமிக வேணுமெனைப் போற்று.

நூல்

வாழ்த்து

ஆலவாய்ச்சொக்கர் அருள்தானு முண்டாகச்
சீலமுள்ள திருமலேந்திரன் செங்கோல் தழைத்தோங்க
திங்களில் மூன்றுமழை திறமாகத் தான்பொழிய
பொங்குகலிநீங்கிப் பூமியெல்லாந் தான்தழைக்க
எண்ணரிய மாதவரும் எவ்வுலகிலுள்ளோரும்
கண்ணீரும் வாராமல் காசினியோர் வாழ்கவென்று

பிள்ளையார் துதி

அம்மானை பாடுகிறேன் ஐங்கரனே முன்னடவாய்.

கலைமகள் துதி

கைம்மான் மழுவுடைய கண்ணுதலோன் தானளித்த
வெண்டாமரை யாளே விரைந்துவந்து முன்னடவாய்.

பாயிரம்

தண்டாமரை மார்பன் சடக்கன் தனைப்பிடித்து
வாரணத்தின் மேலேற்றி மதுரையிலே கொண்டுவர
தாராருந் தையல்புணர் தர்மதிரு மலேந்திரன்முன்
பாரோரும் பார்த்திருக்கப் பண்டொருநாள் வந்தகதை
நானுந்தா னுரைத்திடுவேன் நகரிலுள்ளோர் தான்கேளீர்.

அவையடக்கம்

யென்றும் பெரியோர்கள் யானுரைத்த புன்சொல்தனை
நன்றெனவே கேட்டருள்வீர் நானுரைத்த புன்சொல்தனை.

இராமப்பையன் வரலாறு

சங்கையுள்ள வேதியர்கள் குலத்தில் வந்தவன்காண்
துங்க வளறு துலங்கவந்த புத்திரன்காண்.

திருமலை நாயக்கனைக் கண்டது

ஆஹிரன் போசனிவன் அதிவீர ராமனென்னும்
மற்றரசர் சிங்க(ம்) மன்ன(ன்) புலிராமன்
திக்கடங்(க) வெட்டித் திறன்கொண்ட வாள்வீரன்
நக்கதிரு மலேந்திரனைத் தான்வந்து கண்டான்.

சண்டைக்கு அனுப்புமாறு நாயக்கனை வேண்டியது

“மதுரைநகர் வாழும் மன்னவனே, நீகேளாய்
நாலுதிக்கு மெட்டும் பதினறு கோணமெல்லாம்
திக்கடங்க வெட்டித் திறைகொண்டே தானுமின்று
வணங்காத மன்னர்தம்மை வணங்குவித்தேன் தானுமின்று,
நின்னருளாலிம் மன்னர்தமை நீண்நிலத்தில் வெட்டிக்
கட்டாத கப்பமெல்லாம் கட்டுவித்தேன் நின்னருளால்.
தஞ்சாவூர்க் கோட்டை தவிடுபொடி ஆக்கிடுவேன்.
எனக்கு விடைதாரு” மெனக்கேட்டா(ன்) ராமயனும்.

நாயக்கன் வேண்டாம் என்று தடுத்தல்

“வீண் புகழிராமாநீ வீரியங்கள் பேசாதே
பண்டுமுன்னாள் நஞ்சேனை பாருலகில் தானலற
சென்றிறங்கி தோவூரில் சேனைமன்ன ருள்ளதெல்லாம்
கோரைவாய்க் காலதனில் கொள்ளையிட்டோம் [மன்னரெல்லாம்
இன்று திறைகொள்வது தான்என்ன பிரவலந்தான்
வேண்டாங்காண் ராமாநீ வீரியங்கள் பேசாதே”

இராமப்பையன் மீண்டும் வற்புறுத்துதல்

“ஆண்டவனே, இப்போது அடியேன் சொல்விண்ணப்பம்.
ஆகமூகரூப பரிசா அடர்ந்தபடை வந்தாலும்
செஞ்சியி லிராயர் சேர்ந்தபடை வந்தாலும்
ஒட்டியர் மராடியர் உள்ளபடை வந்தாலும்
சிங்களியர்தங்கள் சேர்ந்தபடை வந்தாலும்
என்பேரைச் சொன்னலே யிப்பூமி நாடார்கள்.

தஞ்சாவூர்க்கோட்டை மெத்த தாடாண்மை பேசிவிட்டீர்
சென்றிறங்கி எட்டாநாள் தென்னவனே நானுமின்று
நாடழித்துக் கொள்ளைஇட்டு நன்னகரி தீக்கொளுத்தி
வெட்டிச் சிறைபிடித்து வேந்தரெல்லாந்துரத்தி
கட்டிக்கொருக் கோட்டுவாவென கச்சித்திருமலே ந்திரனே
எனக்கு விடைதாரு” மெனக்கேட்டான் ராமயனும்.

நாயக்கன் மீண்டும் தடுத்தல்

“பண்டுவினை தீர்த்துப் பஞ்சகலியாணம் செய்தோம்
இன்று பகைத்ததென்றால் எதிர்த்தமன்னர் நகையாரோ?
சூரனே ராமனே சொல்லுகிறேன் நீ கேளாய்,
இந்த சமர்க்களந்தான் வேண்டாங்காண் ராமாநீ.”

இராமப்பையன் இனியும் கேட்டல்

“பட்டவாய் மதங்கள்பேசி மறவன் திருபத்தைக்
கண்டால் கிழித்தெறிவேன் கச்சித் திருமலேந்திரனே
தாடாண்மை யாகஅவன் வைத்த தாணையமும்
முன்னாள் நஞ்சேனை முனைச்சமரில் வென்றதுவும்
இன்றளவுங் கப்பங் கட்டா திருந்ததுவும்
திருமுகத்தைத் தான்கிழித்த திறமுஞ் சமர்த்தறிய

அதற்கு நாயக்கன் விடை

போய்வாரே னய்யா, புகழ்வேந்தர் தங்கண்முன்னே "
"வாழ்வீர ராம மன்னவனே நீகேளாய்
கட்டும் பரியானையும் கனத்தபெருங் குஞ்சரமும்
ஆங்காரியஞ் சொல்லும் அருணைத் திரிதனையும்
தாங்காமல் நின்று சதிர்மானஞ் செய்தவன்காண்
நஞ்சேனை யென்றால் ஒருக்காலு மெண்ணான்காண்
வாதுக்குவெட்டி மன்னர் பெரும் படைதான்
சேதுக்கரை தனிலே சேர இறந்துவிட்டார்,
அருணைத்திரித் துணைவன் ஆன சேஷாத்திரியை
வெட்டித் துரத்தி யோட்டிவிட்ட மன்னவரை
வடுகப்படையை மதியான் மறவனுமோ.
நம்மருகே தானிருந்த நல்லதொரு மன்னவர்கள்
எல்லாருஞ் சென்று இறந்தார்கள் கோட்டையிலே
அவனுக்கு நாடகசாலை யுண்டாம்
நல்லகொலுக்கூட முண்டாம்
துப்பாக்கி மெத்தவுண்டாம் தோற்றச் சமர்க்களத்தில்
அதுதான் இருவரும் அறிந்துகொல்லும் எண்ணூர்காண் "

இராமப்பையன் பேச்சு

" கச்சித்திரும லேந்திரனே கன்னனே நீகேளாய்
மறவன் தனையுமிப்போ மாபார மெண்ணிவிடீர்
ஈழம் யாழ்ப்பாணம் இலங்கைப் படைவீடும்
ஒட்டியர் மராடியர் உள்ளபடை வீடும்
செஞ்சியிலி ராயர் சேர்ந்த படைவீடும்
என் பேரைக்கேட்டால் இப்பூமி நாடார்கள்.
மறவன் எனக்கெதிரோ மன்னவனே இப்பொழுது
அவன்வைத்த பெருங்கோட்டை மதிலுமுட னிடித்து
சென்றுமுட்டிக் கொள்ளைஇட்டுத் தீப்புகையுந் தான்காட்டி
அரக்கர் குலத்தை அன்றுராம னறுத்தாற்போல்
மறக்குலத்தை யானுமின்று வாகாய்க் கருவறுத்து
வெட்டிப் பிடித்துவர விடைதாராய் மன்னவனே,
அந்தரத்தின் வானம் அதிர்ந்து விழுந்தாலும்
அஞ்சுவனோ ராமன், அஞ்சேனே ஒருநாளும்,
வெஞ்சமரில் அஞ்சுவனோ, வேந்தருக்கு மோடுவனோ,
உன்சொத்தை உண்டு ஒருக்காலுங் கோழையிலை,
இன்றுநீ மன்னா எனைநீ அனுப்பு"மென்றான்

போர் புரிய உத்தரவு அளித்தல்

தாளி சவுக்களியுந் தங்கக் கடயமுடன்
ஆணிப் பதக்கம் ஆனசரப் பளியும்
பூஷணங்க ளுள்ளதெல்லாம் போதவே தானீந்து
அடைக்காயும் வெற்றிலையும் அன்புடனே தானீந்து
"வென்றுவா" வென்று விடைகொடுத்தா ரம்மானை.

நாயக்கன் விடை கொடுத்தல்

கச்சித் திருமலேந்திரனே கைகுவித்துத் தானிறங்கி
மன்னவர்கள் எல்லாரும் வாரும் எனவழைத்து
ஏறுங்கள் பல்லக்கு எடுங்கள்குடை ராமனென்றான்
வைகைக்கோர் நிலப்புறமாய் வந்தே யிறங்குகின்றார்.

தமயனிடம் விடை பெறுதல்

" தமையன் வயித்தியனே தார்வேந்தர் மந்திரியே
மதியான மறவன்மேல் மன்னவனே போய்வாரேன் "

தமயன் விடை தரல்

" சூரனே ராமனே தோற்றாத வாசகனே
வீரனே சூரனே விருதுகள ராமய்யனே
மதுரை (க்கோட்)டையை மதியான் மறவனுமோ
உன்னுடைய வாட்டிறத்தை ஒருக்காலு மெண்ணான்காண்
தந்திரத்தின்மேலே தானே வரவழைத்து
மண்டலத்தி லுள்ள வாய்த்த பகுதி யெல்லாம்
கப்பங்கள் கட்டுவித்துக் கதித்தசமர் தானுமெண்ணு
ஆறுசடைச் சொக்கர் அருளே துணையாக
வென்றுவெட்டி மீண்டு திரும்பிவா ராமாநீ
எல்லையற்ற சேனைபடை யெல்லோரை யுங்காட்டி
வானுலகு தன்னில் மதிக்கப் படையெடுத்து
நீயிறங்கு கூடாரம் நேரே யிறங்குவித்து
தன்னரசு நாடு சதிமானஞ் செய்தவர்காண்.
மறவன்சதிகாரன் மதியான வடுகன் என்றால்
பாரி படுகளமும் நீயு மின்று
எச்சரிக்கை மேலே யிருந்துகொள்ளும் காரியத்தை
கும்படித்த மன்னவரும் கோட்டைப் பெருந்தளமும்
வெட்டி நிலையிட்டு விரையவா ராமாநீ,
கச்சித்திரும லேந்திரர்க்கு கண்ணான ராம(ய்)யனே
இன்று நீபோய்வாரா " யென்றே விடைகொடுத்து
செங்கமலக் கண்கள் சிவக்கவிழி நீர்ததும்ப

தாம்பூலம் கொடுத்தல்

அடைக்காயும் வெள்ளிலையும் அன்புடனே தானீந்து
" தம்பி, அரவானே வீரர்தார்வேந்தே போய்வாரும் "
நின்று விடைவாங்கி நொடிக்குமுன்னே தான்மீண்டு

கொலுவிருந்தது

கொலுவுச் சாவடிதனிலே வீற்றிருந்தா ரம்மானை.

சாமந்தர்களை அழைத்தல்

" மாப்பிள்ளைக் கொண்டப்பய்யா வாருமென வழைத்து
சத்திரி வீர அய்யா தார்வேந்தே வாருமென்று
தலையூர்க் கொண்டப்பய்ய தனையுமே வாருமென்று
மன்னர் புலியே மண்டூருப் பாபய்யனே
விருதுசொல்லி வெட்டிவரும் வேட்டைபுரந் தளவாய்
போர்க்களத் தின்நின்று பொரும்புட ரோசாவே
நரபாலர் கொண்டாடும் நாகபா ராசாவே (

பொட்டிமூக் குளபேத்து ராசர்ப்பெரும் படையும்
இராவாழி பட்டையுறும் நல்லபடை மன்னவரும்
மாதவராசாவு மன்னர் பெரும் படையும்
எல்லையற்றசேனைபடை எல்லோரை யுங்கூட்டி
மாப்பிள்ளைக் கொண்டப்பய்யா வாருமென வழைத்து
தேவர்கள் போற்றுந் திருப்பூவணந் தனிலே
போயிறங்கும்'' மென்றான் புகழ்பெரிய ராமய்யனும்.

பாளையக்காரர்கள் பெயர்கள் சொல்லி அழைத்துவரச் சொல்லல்

பாருலகிலுள்ள பாளையக் காரரெல்லாரும்
சேரவங்கே நின்று திரைபோல் தான்கூடி
அனுப்பி விடுவேன் அடுக்குடனே நீபோகாய்
பாளையக்காரர் மாபல பேருமெத்த வுண்டு
ஆரார் வருவார்கள் ஆண்டவனே இப்பொழுது
நத்தத்து லிங்கயனும் நல்லதொரு மன்னவரும்
திருமலைப் பூச்சியனுஞ் சேனைவெள்ள மத்தனையும்
மாம்பூண்டி லக்கயனு மன்னவர் கணத்தினையும்
முள்ளிப்பாடி யிலிருக்கும் முத்தய்ய நாய்க்கனும்
ஈரோடு தன்னி லியல்பான மின்னாட்டில்
இரவும் பகலு மிருந்துபொருங் கெட்டியும்
சேராரைவென்ற சிங்கஞ் செலத்தான தன்படையும்
பட்டத்து னாய்க்கன் பரிவார மத்தனையும்
இளையா னாயக்க னியலான காலாளும்
கொட்டத்து ரெட்டி குமார பாக்கியங்களுடன்
அடர்ந்து சமர்பொருதும் அரியலூர் மழவராயன்
தோறாத வாசகனுந் தும்பிச்சி நாய்க்கனும்
கொட்டமிட்டு வெட்டிவரும் எட்டப்ப னாய்க்கனும்
கட்டபொம்மு தன்படையுங் கனத்தபுகழ் மன்னவரும்
ஆண்டுகொண்டான் வன்னி அவனுடைய காலாளும்
தேனங்காஞ்சி மூக்கை சிவிலிராமன் தன்படையும்
முருக்கு னாடுதன்னில் மூவரையன் தன்படையும்
கலங்காத கண்டன் கனத்த தொருகாலாளும்
தொட்டப்ப நாய்க்கனும் தோறாத வாசகனும்
பாவலி மூக்கை பரிவார மத்தனையும்
மதவானை தன்மூக்கை மன்னவர் களத்தனையும்
மேல்முகத் தும்பிச்சி வீரன் அவன் காலாளும்
ஏழு மடையி லேறிச்சின்னான் காலாளும்
அம்மைய நாய்க்க னடுத்த பெரும்படையும்
கூளப்ப நாய்க்கனக் கூடிப் பெரும்படையும்
முனைச்சமரில் நின்று பொரும்மூக்கி லணைபூசாரி
கொப்பனாய்க்கன் குறித்ததொரு காலாளும்

குறிக்கொண்டப்ப ணுய்க்கன் கூட்டப் பெரும்படை
க............யனுய்க்கன் கனத்த புக(ழ்)க் காலாளும்
நல்லம்ம ணுய்க்கன் வல்லபடை வீரர்களும்
யெல்லாரையுங் கூட்டி யிப்போவரவிடுவேன்
மாப்பிள்ளைக் கொண்டப்பய்ய மன்னவனே நீபோகாய்
போகிறேனுன் னென்று பொருந்த விடைவாங்கி

பல்லக்கு ஏறுதல்

ஏறினன் பல்லக்கு எல்லையற்ற சேனைமுன்னே.
மன்னர் புடைசூழ மந்திரிமார் தான்சூழ
தண்டுங் குடைநெருங்க சாமரைகள் தான்வீச
வெண்சாமரம் வீச விருது பலமுழங்க
கருதிப் பெரும்படையும் கடல்நிறைபோலே விளங்க
தாரை நமரி தலைமுரசு தான்முழங்க
வீராணம் நாகசரம் வெங்கலக் கொம்புமுழங்க
திடுமறைகள் மேளங் திக்கெங்கும் நின்றதிர
தம்பட்டம் நின்றதிர தளத்துடனே தானங்கூட்டி

திருப்பூவணத்தில் கூடாரம் போட்டது

சீரார் கமலத் திருப்பூவணந் தனிலே
கொண்டுவந்து கூடாரம் போட்டார்கள் மன்னரெல்லாம்
மத்தன் சிறுகுடியில் வணங்கா "களவண்டா"ரென்(று)

வணங்காக் களவண்டான் பார்த்தது

ஓசை கேட்டதற்பின் மோசமிக வந்ததென்று
தட்டெழுப்பக் கேட்டுத் தலைகெட்ட நூலதுபோல்
கைபிடித்த பெண்டுக்குக் கனத்தபட்டி மாடுவிட்டு
வேங்கைகண்ட மானதுபோல் வேறுபட்டு மலையேறி
வந்தானே ராமனென்று மலையேறிப் பார்த்துநின்று
அந்நிளை் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்.

மறு நாள் காலை

ஆழி நெடுந்தேரேறி அலைகதிரோன் வந்துதித்தான்.
தோப்பு மரமுஞ் சோலை யிடங்களுமாய்
அதுவேதெனக் கேட்டான்ராமன் பெரும்படை
[மன்னவர்கள்
ராசகெம்பீரன் நல்ல பெருங் கோட்டை
கிளியினங்கள் பண்பாடும் கிறுங்கா திடிகோட்டை
நாடுடைய மண்டலங்காண் நல்ல பெருங்கோட்டை
கள்ள வண்டாரிருக்குங் காடும் பெருவழிகாண்
வைகை ஒருபுறமாய் மாவீரன் மதுரைவந்து

மானா மதுரையில் கூடாரம் அடித்தது

வனவீரன் மதுரைதனில் வளைந்தடித்தார் கூடாரம்.
இந்திர லோகம்போல் இருந்தானே ராமய்யனும்
அந்நிளை் சென்று அலைகடலோன் போய்மறைந்தான்.

தூதுவன் வந்து கண்டது

வாள்கோட்டை ராயன் மத்தளவாய் தூதுவனும்
அம்பில் விரைந்தோடிவந்து அவனிறங்கும் பாளையத்தே
கண்டு பயந்து கலங்கி இடிவிழுந்து

ஓடினான் ஓட்டனுமோ உற்றபெருங் காற்றெனவே
வாள்கோட்டை ராயன் கேட்டது — அம்பில் விரைந்தோடிவந்து அவனிருக்கும் கோட்டையிலே
வந்துகண்டு தெண்டனிட்டான் வாள்கோட்டை ராயனையும்
"ஏண்டா நீதூதுவனே இப்போதிங் கோடிவந்தாய்"

தூதுவன் சொல் — "ஆண்டவனே இப்போ(து) அடியேன் பயந்துவந்தேன்"
ராயன் கேள்வி — "ஆத்தாங் கரையும் அடர்ந்த மாந்தலையும்
மானம் இடிந்தாலும் மதுக்கள் திறந்தாலும்
ஆகமது பாரீசர் அடர்ந்த படைவந்தாலும்
அஞ்சுவனோ யென்தூதா அஞ்சாதே சொல்லு" மென்றார்.

விடை — "ஆண்டவனேயிப்போ(து) அடியேன் சொல் விண்ணப்பம்
ஆத்தாங் கரையும் அடர்ந்த மாந்தலையும்
பாலைப்பழிக்கும் உந்தன் பாங்கான ஊருணியும்
கொண்டுவந்து கூடாரம் போட்டார்கள் கொற்றவனே
சூரனும் ராமனும் தோருத சேவகனும்
போருக்கு வீரனும் புகழுக்குக் கன்னனுமாம்
கச்சித்திரும லேந்திரர்க்குக் கண்ணான ராமய்யனும்
எண்ணெய்க் குடத்தை எறும்புவந்து சூழ்ந்தாற்போல்
வண்ணக் கடல்போலே வளைந்தடித்தார் கூடாரம்"

கோட்டை ராயன் பேச்சு — "வாடாநீ தூதுவனே மதியாமல் சொன்னாயே
பஞ்சாங்கஞ் சொல்லுகிற பார்ப்பான் படைக்கோட
பாரமென்று சொல்லைப் பயந்து உரைத்தாயே
முன்னாள் நம்மேல் முற்பட்ட மன்னரெல்லாம்
வந்து பொருத மன்னர் பிழைத்தாரோ
சூரப் பயன்விருது தோருத வாசகனும்
வெட்டி நிலைஇட்ட வேந்தர் காணம்மானை.

அருணத்திரி அவன் ஆனதொரு சேனையெல்லாம்
பரம்பைக் குடிக்கோட்டைதனில் பாகாய்த் தானடைத்து
துப்பாக்கி தன்னாலே சூறையிட்டோம் நானுமின்று
அறிந்திருந்த பார்ப்பா னவன்படைதான் வந்ததென்றால்
சீனநரிகள் பேயோரி தின்றேப்ப மிட்டிடுவேன்
என்பெய ரோஅப்போ யானுந்தள வாயோ"

பண்டாரம் சொல் — ராமனுத பூசைபண்ணும் நல்லதொரு பண்டாரம்
"வாள்கோட்டை ராயாமதி மலங்கச் சொன்னாயே
கர்த்தன் பெரும்படைதான் கடல்திரைபோல் [வந்ததென்றால்
சென்றுகண்டு தேவரீர் திறையிட வேணுமென்றால்
கண்டுமெள்ளத் தேவரீர் கப்பமுங் கட்டு மென்றான்"

ராயன் வீரம் பேசுதல்

"பார்ப்பான் தனக்குப் பயந்துமெள்ள நானுமின்று
கப்பமுங் கட்டி கைகட்டி நிற்பேனோ
ஈழத்து ராசாக்கள் என்னை நகையாரோ
ஆழி தவறிடினும் அலைகடல்தான் பொங்கி(டி)னும்
ஊழி முடிந்து உகந்தூங்கிப் போனாலும்
அப்போதுங் கப்பங்கள் கட்டேனே நானும்" என்றான்.

"ஏழைத் தனமாக யென்னை உரைத்தீரோ
எட்டுகுடியும் இரு வாட்சி சீமையெல்லாம்
அஞ்சு கோட்டைபத்து அடர்ந்த குடிக்காடும்
வாழ்ந்த புகழ்படைத்த மங்கல நாடுகளும்
வெட்டி யொடுக்கி வீரவாள் தான் பறித்தேன்
பாங்கான படிக்கோட்டை வழும்பு தலைவனையும்
தாங்காமல் வெட்டித் தன்வசமாய்க் கொண்டேனே
வட்டாணந் தொண்டியிலே வைத்தேனே தானையமும்
சோரரை வென்றசிங்கஞ் செங்கோல பிள்ளைதன்னை
வெட்டி யங்கேநானுங் கப்பங்கள் கட்டுவித்தேன்
ஈழத்துராசாவுக் கென் சீட்டு நடக்கலையோ
கண்டியி லிராசாவுங் கண்டுவணங் கலையோ
துலக்கா ணந்தலச் சோங்கு ஆறுமாவும்
என்பேரு சொன்னால் என் துறையி லொட்டாது
அலைகடல் மேற்கப்பல் நமக்கஞ்சி நடக்கலையோ
பாஷை அறியாத பறங்கி தன்னை இன்று
நாடகசாலை இவையித்துடனே பார்த்திருக் கலையோ
குண்டையங் கோட்டைக் குறும்படிக்குங் கள்ளர்தம்மை
வெட்டிச் சிறைப்பிடித்து விருது பறித்தேனே
வெட்டும் படையொழிய வேறுபடை யில்லையே
குழக்கா றரத்தினையு மங்கொடிப் புலிகாணம்மானை.

எண்ணாதே இப்போது இளைத்நி னும்பேசாதே
என்னோடே பார்ப்பான் எதிர்ப்பனோ" வென்றுசொல்லி

ராயன் கோவித்தது

"வேறே ஒருத்தர் வேகவந்தா ராமாகில்
கொன்றுவிடுவே"னென்று கோவித்துக் கண்சிவந்து
வீரவடிவனை யழைத்து வெங்கண் மிகச்சினந்து

மதிகூறல்

"கோபமு ரைத்தாயே கொற்றவனே நீகேளாய்
அரசர் படையோடே ஆண்மைசெய்ய வேண்டாங்காண்.
அரசருடனே துதித்து ஆர்வாழ்ந்தா ரிப்புவியில்
வானப்புலி ராமன் வைத்தபடை யத்தனையும்
இப்போது நானுரைத்த(து) இனிகேளாய் மன்னவனே
கோலக்கொண்டை ராயன் கோட்டைதனை அழித்து

தண்டுமிண்டு பண்ணும் தடியத் தலைவனையும்
கொண்டுவந்து கண்டதுண்ட மாக்கிவைத்த
[கொற்றவன்காண்.

திருவரங் கோடுதனில் சென்றிறங்கி யப்பொழுது
குத்திக்கு நனம்பாலே குருதி மடைபாய
மலையாள முள்ளதெல்லாம் வாகாய் மிகவறுத்து
தலையறுத்துத் தன்பொதியில் தான்பிடித்த வன்காண் ''
கப்பமுங் கட்டுவித்த ககெனெ வேதான்
கச்சித்திரும லேந்திரனைக் காண்பித்தா ரம்மானை.

நாசிநாடுதனில் நல்ல மணியம் வைத்தான்
தேவர்கள் கொண்டு துலுக்காணந் தானடந்தான்
திருநகரி தன்னிலே சேரவங்கே தான்கூட்டி
சென்று வளைத்து சேர்த்துப் பிடித்துவந்து
கொண்டுவந்த துரகந்தனி லேற்றுவித்த கொற்றவன்காண்.

ஈரோடுதன்னில் எண்ண வொண்ணுக் கொடிமன்னர்
காங்கேய மண்ணுடி கதித்தமிசனை வண்டன
கோட்டை ....

இராமய்யன் அம்மானை.

(சென்னைப் பிரதி)

பாயிரம்.

பிள்ளையார் துதி

கர்த்தன் றிருமகனே காரானை மேனியனே
சத்திக் கணபதியே தையனல்லாள் புத்திரனே
வித்தை விநாயகனே வேறுவினை வாராமல்
புத்தி மிகதந்து போதம் அருள்வாயே.

சித்தி விநாயகனே தென்கூடல் வாழ்பவனே
பக்தியுட னம்மானை பாட வரமருள்வாய்
வெற்றி விநாயகனே வேலவற்கு முன்னோனே
சித்த மிரங்கித் திருவாக்குத் தந்தருள்வாய்.

கந்தன் துதி

கந்தனே யிக்கதையை காத்தருள வேணுமையா
மைந்தா குமரா மயிலேறுஞ் சேவகனே
ஏறி யருள்புரியும் இளைய பெருமாளே
மாறிவருஞ் சூரர்தம்மை வாகாக வென்றோனே.

சிவபெருமான் துதி

இராமய்யன் படைப்போர் நன்றாக யான்பாட
காமன் தனையெரித்த கண்ணுதலோன் முன்னடவாய்.

அவையடக்கம்

ஆஹிரவன் போச னதிவீர ராமயனை
மன்னர்கள் மெச்சு மதியூகி ராமயன்மேல்
மாற்றலர்கள் சிங்கம் மன்னபுலி ராமன்மேல்
திக்கடங்க வெட்டித் திறைகொண்ட ராமயன்மேல்
ஆராரும் பாடுகிற அம்மானைப் பாடுகிறேன்.

நூல்.

தென்னவனூர் கச்சித் திருமலை நராதிபனை
பொன்னவனும் ராமய்யன் போற்றி யிருகையேந்தி

இராமய்யன் விண்ணப்பம்

" ஆண்டவனே யிப்போ தடியேன்சொல் விண்ணப்பங்கேள்
மதுரை நகராளும் மன்னவனே நீர்கேளும்
பூவேந்தே யெந்தனுக்குப் பொருந்தி மனமகிழ்ந்து
தேவேந்திரன் வட்டம்போல் செய்வித்தீர் மன்னவனே,
அன்று முதலின்றளவு மடியேனு முந்தனுக்கு
அட்டதிக்கு மெட்டும் ஆன பதிறைமெல்லாம்
திட்டென்று வெட்டித் திறைகொண்டு நான்வருவேன்
வணங்காத பேரையெலாம் வணங்கவைப்பே னாண்டவனே,

கண்டு வணங்காதான் கைகட்டி நில்லாதான்
எல்லோரும் வந்து எனக்குப் பணிவிடைதான்
யென்பேருஞ் சொன்னால் எதிர்ப்பார்களோ மன்னவர்கள்
வானுலகில் வந்தெதிர்த்த மன்னரையுந் தான்பிடித்து
கட்டிக் கொண்டுவருவேன் கர்த்தன் சமூகத்தில்
தஞ்சாவூர் கோட்டைதனைத் தவிடுபொடி யாக்கிவைப்பேன்
கோவிலடிக் கோட்டையிலே கொள்ளையிட்டு
[கொண்டிடுவேன்
எனக்குவிடைதாருமையா'' வென்றுரைத்தான் ராமயனும்.

நாயக்கர் விடை ''விருதுபுகழ் ராமா, நீ வீரியங்கள் பேசாதே''

இராமன் சொல் ''ஆண்டவனேயிப்போ தடியேன்சொல் விண்ணப்பம்கேள்
பாளையக்காரரெல்லாம் பயந்து வணங்குவர் காண்
வணங்காமல் தானிருக்கும் வண்டமறவனையும்
வளைத்துப்பிடித்து வந்து வணங்கவைப்பேன் ஆண்டவனே
எனக்கு விடைதாருமய்யா'' வென்றுரைத்தான்
[ராமயனும்.

நாயக்கர் சொல் ''வேண்டாமடா ராமா வீரியங்கள் பேசாதே
பண்டுமுன்னாள் நம்சேனை பாருலகு தானறிய
குழல்வாய்க் கிரையாக கொள்ளைக் கொடுத்தோமே
யின்று பகைத்தால் எதிர்த்தமன்னர் தானகைப்பார்
சேதுக் கரைதனிலே சென்றவர்கள் மீண்டதில்லை
வாளுக் கிரையிட மறவன் வலுக்காரன்
துப்பாக்கி மெத்தஉண்டாந் தோலா மறவனுக்குத்
தன்னரசு நாடு தனிக்கோட்டை யாளுவனும்
மதுரைப் படையென்றால் மதியான் மறவனுந்தான்
மறவர்கள் சற்று மதியார் வடுகரென்றால்
உன்னுடைய வாள்திறத்தை ஒருக்காலு மெண்ணேன்காண்
வேண்டாமடா ராமா வீரியங்கள் பேசாதே
பண்டு முன்னாள் நஞ்சேனைப் பாருலகுதானறிய''
மன்னனுரைத்த தெல்லா மனமகிழ்ந்து கேட்டிருந்து
கன்னன் புலிராமன் கைகொட்டி வாய்புதைத்து

இராமய்யன். சொல் ''அரசர் பெருமானே ஆண்டவனே சொன்னீரே
பண்டு வடுகரென்று பாராமல் நின்றுரைத்தீர்
என்கீர்த்தி தன்னை யினிக்கேளு மாண்டவனே
வஞ்சனைகள் பண்ணுகிற மறவர்க ளெல்லோரும்
தஞ்சமென்று வந்து சரணம் சரணமென்பார்
தஞ்சாவூர் கோட்டைதனைத் தவிடுபொடி யாக்கிவைப்பேன்

மைசூர் கோட்டைதனை மதியாமல் நானிடிப்பேன்
வங்காளம் கொங்கு மலையாள முள்ளதெல்லாம்
தாங்காம லுன்பாதம் சரணம் பணியவைப்பேன்
வட்டானமுள்ள மகதகத்து மன்ன ரெல்லாம்
கட்டாத கப்பமெல்லாம் கட்டவைத்தே னுன்னருளால்
சத்திரத்தை யெண்ணுமல் தான்குறும்பு சொன்னுரை
மதுரைத் திருவாசலிலே வந்து பணியவைத்தேன்
வையகத்திலுள்ள மன்னர் மனு ராசாக்கள்
சேரப்பணிந்து திறை நீட்டி நிற்கலேயோ
வல்லவனே தான்மறவன் மாபொருட்டோ மன்னவனே'
இவ்வசன மெல்லா மியல்பா யுரைத்தபின்
மைவிழியார் மோகன மன்னவனைர்முன்னை நின்று
மெய் வசனமாக விளம்பினர் ராமய்யனும்
"சென்றே மறவனிட செய்தியெல்லாம் பார்த்துவர
பண்டைப்படை வெட்டும் பார்த்து வரவேநான்
ஆண்டவனே யிப்போ தனுப்பிவிக்கவேணு" மென்றூர்
"போய்வாரேனய்யா பொருந்து விடைதாரு" மென்றூர்
போய்வாரே னென்ற புகழ் ராமனைப்பார்த்து

நாயக்கர் சொல் வணங்கா முடிவேந்தன் வாகாய்ச் சிரித்துரைப்பான்
"எப்படியோ வென்று யெண்ணி நினையாமல்
இல்லாத செய்தியெல்லாம் ஏனுரைத்தாய் ராமாநீ
முன்னமே தானிறந்த முனை வடுகர் பற்றூதோ
மறவனுட பூமியிலே மாள்வையென்று கற்றிலேயோ"
என்றுசொல்லி மன்னவனு மியம்புவா னப்போது
"பெற்றூர் பிறந்தார் பெயர்போன நங்குலத்தார்
உற்றூ ருறன்முறையா ருள்ள வடுகரெல்லாம்
பாளையக்காரர் படைத்தலைவ ரெல்லோரும்
வேலையதில் வென்றுவரும் வீரப் பரிவாரங்களும்
தொட்டியர் கம்பளத்தார் தோருத சேவகரும்
சூரப்பய்யனை வெட்டிச் சூறையிட்டான் கண்டாயே
ஆங்காரியஞ் சொல்லும் அருணுத்திரிதவனையும்
பண்டு வடுகர் படைத்தலைவ ரத்தனையும்
சதுரேறி வெட்டிச் சதிமானஞ் செய்தவன்காண்
சேதுக்கரைதன்னில் சேர யிறந்து விட்டார்
காட்டிலே வெட்டிக் கழுகு பசிதீர வைத்தான்
வெற்றிச் சங்கூதி விருது பறித்தவன்காண்
முன்னமே வெட்டி முனைகண்டான் மறவனுந்தான்
இந்நாளிலே தான் என்ன எம் வடுகரென்றுல்
வேண்டாங்காண் ராமய்யனே வீரியத்தை விட்டுவிடும்"

இராமய்யன் சொல்

"தென்னவனே விண்ணப்பஞ் செய்கின்றேன் கேளுமய்யா
முன்னமே நஞ்சேனை முடிந்தார்க ளென்றுரைத்தீர்
மன்னவர்கள் மெத்த மடிந்தார்க ளென்றுரைத்தீர்
அந்த மறவன் படுபாடு கேளுமைய்யா
எந்தனிட வாள்திறத்தை யினிப்பாரும் மன்னவனே
திரியோதனனை சித்திர சேனன் முன்னாள்
பரிவாகத் தேர்க்காலில் பாசமுடன் கட்டுகைபோல்
அரக்கர் குலத்தை அனுமா ரறுத்தாப்போல்
மறக்குலத்தை நானும் மாய்த்துக் கருவறுப்பேன்
எட்டாம லோடியிறங்கி யிருந்தாலும்
சென்றிறங்கி யெட்டாநாள் தென்னவனே பாருலகில்
நாடழித்துத் தீக்கொழுத்தி நன்னகரைப் பாழாக்கி
வெட்டிச் சிறைபிடித்து வேந்தன் சடைக்கனையும்
கட்டிக் கொண்டுவருவேன் கர்த்தனே யுன்பாதம்
ஆண்டவனே இப்போது அனுமதிக்க வேணுமென்றான்
போய்வாரே னய்யா பொருந்த விடைதாரு" மென்றான்.

விடை தந்து அணிகள் தரல்

வணங்காமுடி வேந்தன் மனமகிழ்ந்து தான்சிரித்து
நல்லதென்று சொல்லி நரபால னப்போது
நம்பிக்கை முத்திரையும் நால்விரலில் மோதிரமும்
தும்பிக்கை பதக்கங்கள் சேர வயிடூரியமும்
தாளிச் சவுக்களியுந் தங்கக் கடையமுடன்
ஆளிப் பதக்கமுடன் ஆன பீதாம்பரமும்
நீலக் கடுக்கன் நிரையாழி மோதிரமும்
அத்தக் கடையமுடன் ஆணிமுத்து மாலைகளும்
முத்துக் கடுக்கன் முன்கை முதாரியுடன்
கோத்த துராயும் கோத்தமுத்துத் தாழ்வடமும்
சவ்வாதுத் தலையில் தலைப்பாகை வைத்து
பூஷணங்களுள்ள தெல்லாம் பூட்டி யலங்கரித்து
மாயோகி யென்னுமொரு வான்பரியுந் தான்கொடுத்து
பட்டத்துக் குஞ்சரமும் பாங்குடனே தான்கொடுத்து
ஏத்தப் பணிகொடுத்தார் எதிரில்லா ராமையற்கு

அரசன் எச்சரிக்கை

"நேசமுடனுந்தனுக்கு நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்
ஆறுசடைச் சொக்கர் அரனா ரருளாலே
அங்கயற்கண் மீனாட்சி அம்ம னருளாலே
தீர வெட்டிவாரு" மென்று தெள்ளவிடை கொடுத்தார்.
விடைவாங்கி ராமய்யனும் விருது மிகப்பேசி
கர்த்த னெனுந்துரையைக் கனகரத்தின மேடைதனில்
நின்றனுப்பிக்கொண்டு நீதியுடன் கைகுவித்து

" ஆண்டவனே யிப்போ தடியேனும் போய்வாரேன் "
" போய்வாராய் ராமா " வென்று பொருந்தி மனமகிழ்ந்து
" வீரியவா னென்றாலும் வெஞ்சமரில் பத்திரமாய்
கச்சைகட்டி பாளையத்தில் கண் தூக்கங் கொள்ளாமல்
எச்சரிக்கை மேலே யிருந்து கொள்ளுங் காரியத்தை
பாரில் படுகளமும் பத்திரமாய் தானிறுத்தி
வாது சொல்லி நீபோறாய் மறவன் சதிகாரன் "

கொலுவு இருக்கை

அப்போது ராமய்யனும் அன்பாய் அமைந்திருந்து
புறப்பட்டான் ராமய்யனும் பேருலகு தானறிய
கொலுச்சாவடிதனிலே கொலுவிருந்தான் ராமையனும்.
அந்த நாள் சென்று அங்கதிரோன் போய்மறைந்தான்.

வணக்கம்

மற்றாநாள் தானும் மன்னன் புலி ராமய்யனும்
செப்பமுடன் மீனாட்சி திருவாசல் தனில்நின்று
" சிங்கார மண்டபமும் திருத்தேரு முன்தனக்கு
வங்கார மாக வயிரமுடி தங்கமுடி
மெய்யாகக் கட்டிவைப்பேன் மீனாட்சியே யுமையே
யெந்தனிட சேனை யிரிந்தலையாய் போகாமல்
வந்த மறவனுடன் வாகாகச் சமர்பொருது
வெற்றி கொண்டு மீண்டுவர வேகமுடனருளும்
கன்னி மதுர மொழி கைலாசன்தன் துணையே "
என்று மிகப் போற்றி யேத்தி மலரடியைத்
தெண்டனிட்டு மெள்ளத் திரமாய் வெளியில் வந்து
ஆரவாரத்துடனே ஆர்ப்பரித்துக் கொக்கரித்து

அண்ணனிடம் விடை பெறல்

தமயன் வயித்தி அய்யன் தார்வேந்தன் தன்னிடத்தில்
" மதியா மறவன் மேல் மன்னவனே போய்வாரேன்
அண்ணா நீ யென்னை அனுப்புவிக்க வேணு "மென்றான்.
என்று சொன்ன தம்பியரை யேறிட்டுத் தான்பார்த்து
" என் துணைவா தம்பியரே யென்வார்த்தைக் கேளுமினி
மறவன் சதிக்காரன் மதியா னொருநாளும்
தன்னரசு நாடு சதிமானஞ் செய்திடுவான்
சேதுக் கரைதனிலே சென்றவர்கள் மீண்டதில்லை
சேதுவிலே படையெடுத்துத் திரும்பின பேருண்டோகாண்
வாதுசொல்லி நீபோறாய் மறவன் வலுக்காரன்
உன்னுடையவாள்திறத்தையொருக்காலு மெண்ணுன்காண்
விருதுக்கு வெட்டிவரும் வேந்தனே தம்பியரே "

இவ்வசன மெல்லா மியல்பாயுணர்ந்த பின்பு
கன்னன் புலி ராமய்யனும் கைகட்டி வாய்புதைத்து

"என்னுடைய வாள்திறத்தை யினிக்கேளு மன்னா நீர்
பண்டு வடுகரென்று பாராமல் நீருரைத்தீர்
சேனைக்கிரங்கி யெட்டாநாள் தேவரீர் பாருமினி
நாடழித்து தீக்கொழுத்தி நன்னகரைப் பாழாக்கி
வெட்டிச்சிறைபிடித்து வேந்தரையுந் தான்துரத்தி
கட்டிக் கொண்டுவருவேன் கனத்த திருமலேந்திரன்முன்
அண்ணா நீ வேணது அனுப்புவிக்க வேணுமென்றான்
போய்வாரேனையா பொருத்த விடைதாரு" மென்றான்

அவ்வார்த்தை கேட்டு ஆனதொரு அய்யனுந்தான்
போய் வாருமென்று பொருந்தி மனமகிழ்ந்து
யென்றுரைத்துத் தம்பிதனை யேறிட்டுத் தான்பார்த்துக்
கட்டியணைத்து தம்பியரை கண்புயத்தில் யணைத்திட்டார்
இருகண்ணால் நீர்ததும்பி யேங்கி மிகத்தழுவி
'யெச்சரிக்கை மேலேயிருந்து கொள்ளுங் காரியத்தை
பாரில் படுகளமும் பதனமாய்த் தானிருத்தி
வீரியவா னென்றாலும் வெஞ்சமரில் பத்திரமாய்
கச்சைகட்டி பாளையத்தில் கண்தூக்கங் கொள்ளாமல்'
அண்ணனுந்தான் சொல்ல அதிவீர ராமய்யனும்
நின்றனுப்பிக்கொண்டு நீதியுடன் கைதொழுது

இராமன் புறப்பாடு

சிவிகை தனிலேறி சிறந்த மதுரையிலே
கொலுச்சாவடி தாண்டி கொற்றவனுந் தானடந்தான்.
பாளையக் காரர் படைத்தலைவ ரெல்லோரும்
எண்ணவொண்ணா கோடிபடையெல்லோருஞ் சூழ்ந்துவர
ஆனை குதிரை அளவிறந்த சேனையுடன்
மட்டில்லா சேனையுடன் வந்திருந்தார் மண்டபத்தில்.

ஐயமிட்டுத் தான்பார்த்து யெல்லாரும் வாருமென்று
அய்யனுந்தான் போசனிட ஆசனைபோல் தானிருந்தான்.
இந்திர லோகம்போல் யிருந்ததுகாண் மதுரைநகர்
நடந்தான் புலிராமன் நல்ல பெருஞ்சேனையுடன்
ஆனைமேல் பேரிகை அலைகடல்போல் முழங்க
ஒட்டைமேல் பேரிகை யுலகம் கிடுகிடென
குதிரைமேல் டமாரம் குமுகுமென்று தான்முழங்க
பதினெட்டு மேளவகை பண்புடனே தான்முழங்க
ஆயிரம் பல்லக்கு அதிவீரர் சூழ்ந்துவர
குஞ்சரமும் வான்பரியுங் கோவேற்றம் முன்னடக்க
கட்டியக்கா ரர்கள் விருதுகள் கூறிவர
பஞ்சவர்ணப் பாவாடை கொஞ்சி மகப்போட
விருது வகைகளெல்லாம் வேடிக்கையாய்ச் சூழ்ந்துவர

கவிவாணர் கொண்டாட கண்ணன் புலிராமய்யனை
எக்காளமூரல இயம் முரசு தான்முழங்க
மெய்க்காவலர் சூழ மிகவிருது தான்முழங்க
தூளிப்புகையாக தூசியிலே தானடந்தான்.
அந்தரத்தில் தூள் யெழும்பி ஆதித்தனை மறைக்க
கடைவீதி தன்னில் புறப்பட்டான் ராமய்யனும்.

உலா

மதுரை பதிவாழும் மங்கையர்க ளெல்லோரும்
தேவேந் திரனோ திருமாலோ வென்பாரும்
பூவேந்த னென்பாரும் போசனிவ னென்பாரும்
மன்மதன்கா ணென்பாரும் மதிமந்திரி காணென்பாரும்
பூலோகந்தனைக் கவர்ந்த புண்ணியவா னென்பாரும்
என்று புலம்பி ஏமாந்து நிற்பாரும்
நின்று புலம்பி நெடுமூச்செறிவாரும்
உடுத்த கலை சோர்வடைய ஒய்யார குழல்சரிய
கதித்து விம்முகுறத்தை கையாலே தானமுக்கி
இப்படியே பார்த்து நின்றார் ஏந்திழைமாரெல்லோரும்
செப்பமுடன் ராமய்யனும் தீரன் பவனி வந்தான்.
வைகை யொருபுறமாய் வந்து தயங்கிநின்று
சென்றே யிறங்கினார் சின்ன ருவுத்தர் பாளையத்தில்.

கூடாரம் அடித்தது

எண்ணெய்க் குடத்தை யெறும்புவந்து சூழ்ந்தாற்போல்
வண்ணக் கடல்போல வளைந்தடித்தார் கூடாரம்.
ஆயிரம் கூடாரம் அடித்தார்கள் கொற்றவர்கள்
அந்நேரந்தன்னில் அலைகதிரோன் போய் மறைந்தான்.
ஆழிநெடுந் தேரேறி அலைகதிரோன் வந்துதித்தான்
மன்னரும் தானும் மன்னன் புலி ராமய்யனும்
வண்டியூர் கோட்டையிலே வந்தே யிறங்கினார்கள்
கோட்டையிலே வந்திறங்கி கொலுவிலே தானிருந்தான்
செய மக்களைத் தான் சேரவளைக்கச் சொன்னார்
அந்தக்கணம் அழைத்து வந்தா ரெல்லோரும்
கூட்டமிட்டு வந்தார்கள் கொலுவிட்டு மன்னவர்கள்
நாட்டமுடன் சேதியெல்லாம் நன்றாகத் தானுரைத்தார்
"சேது மறவனைத்தான் சென்று பிடிக்கவென்று
வீர பரிவாரங்களே மேல்சேதி யென்ன" வென்றான்
"முந்தி வரது சொல்லிவந்தேன் மன்னன் சமூகத்தில்
சூரனே அய்யாவே தோராத ஆண்டவனே
முந்தின சண்டையிலே முறிந்து வந்தா ரெல்லோரும்
இந்த விசையிலும் யிளப்பங்கள் வாராமல்
தந்திரமாய் அத்தேசம் தான்போக வேணு"மென்றார்


பாண்டி நாட்டுப் படம்
இராமப் பையன் படையெடுப்பு
சென்றவழி
தஞ்சை
வெள்ளாறு
சோழவந்தான்
வைகை
மேலூர்
திருப்பத்தூர்
காரைக்குடி
ஆவுடையார் கோயில்
மதுரை
மதுரை
சின்னராவுத்தர்பாளையம்
வண்டியூர்
திருப்பூவணம்
சிவகங்கை
தேவிக்கோட்டை
காளையார்கோயில்
திருப்புனவாசல்
வட்டாணம்
திருவாடானை
தொண்டி
மானாமதுரை
இளையான்குடி
பரமக்குடி
கடல்
விருதுபட்டி
திருச்சுழியல்
அருப்புக்கோட்டை
இராமநாதபுரம்
தேவிபட்டினம்
ஆற்றங்கரை
போகலூர்
சாத்தூர்
இராமநாதபுரம்
கீழ்க்கரை
இராமேசுவரம்
பாம்பன்
தனுஷ்கோடி
சேதுக்கரை
திருநெல்வேலி
கடல்
BY S.N. SAMY & CO. ENG.

"பஞ்சவர்க்கு மாயன் பாரித்து நின்றாற்போல்
வஞ்ச வினை செய்த மறவனுக்கப்போது
தனுக்கோடி காவலென்று சாங்கமாய் நின்றார்கள்
ஆகையினால் முன் சேனை அடிபட்ட" தென்றுரைத்தார்
கேட்டுத்தான் ராமய்யனும் கெர்விதமாய் சொல்லுவனும்

பாளையக்காரர் சமுகத்து வரிசை

பாளையக்காரர் படைத்தலைவ ரெல்லோரும்
வேளையமாய் ராமய்யனும் வெகு வரிசை தான்கொடுத்து
ஏறுங்கோள் பல்லாக்கு யெடுங்களடா **கட்டாயம்**
சந்திரருஞ் சூரியருஞ் தான் வருங்கொண்டார்
இந்திரன்போல் ராமய்யனும் ஏறினான் தண்டிகைமேல்

அந்தணர் வாழ்த்து

வச்சிர சரீரமென்று வாழ்த்திப் பிராமணரும்
அட்சதையுந் **தோள்** கொடுத்தார் ஆயிரம்பேர்கள்
நடந்தான் புலி ராமன் நளின பரியேறி
உருவின வாள்காரர் ஒன்பதினாயிரம் பேர்கள்
சருவிப் பொரு மல்லர்கள் தண்டிகையை சூழ்ந்துவர
மைக்கொழுந்து போல மாசேனை சூழ்ந்துவர
திக்கெழுந்த சூரியன் செந்தூள்கள் தான் மறைக்க

பூவணம்

சென்றே யிறங்கினார் **திருப்பூவணந்தனிலே.**
ஆற்றங்கரையும் அடர்ந்த மரச்சோலையிலே
ஏரிக் கரைகளெல்லாம் யிறக்குவித்தார் பாளையத்தை
துடியான மன்னவரை சுற்றி யிறங்கச்சொல்லி
கச்சை கட்டி பாளையத்தில் கண் தூக்கங் கொள்ளாமல்
பாரில் படுகளமும் பதனமாய்த் தானிருந்தார்
கங்குல் விடிந்து கதிரோனெழுந்த பின்பு
மன்னன் புலிராமன் மன்னவனைத் தானழைத்து
ஒழுங்குப்படியே யுற்றபடை ராணுவ மெல்லாம்
அந்தப்படியே அழைத்துச் சொன்னா னய்யனுந்தான்

மற்றாநாள் தானு மன்னன் புலி ராமய்யனும்
தேவர்கள் பூசைபண்ணும் **திருப்பூவணத்தை விட்டு**
மானா மதுரைக்கு வழி கொண்டும் போகச்சொன்னான்
கூடாரந்தான் பிடுங்கி கொல்லிட்டு தானடந்தான்
வைகை வழியாக நடந்தார்கள் சேனையெல்லாம்
மன்னன் புலிராமன் மற்ற பாதி கொக்கரித்து
நடந்தான் புலிராமன் நல்லது மாலை கொஞ்சம்
வாராவதிதனிலே மண்கோட்டை யேறு மென்றான்
கிளி அன்னங்கள் பாடுங் கிறுங்கா கோட்டையென்றார்
ஆடும் பரியும் அழுக்குடை சீமையென்றார்

மாவலி வாணன் மன்னனிருந்த இடம்
காடுகளைத்தான் பார்த்தான் கண்ணன் புலிராமய்யனும்
அந்நேரந்தன்னி லாயிரம் பேரைத் தானழைத்து
காடுவெட்டி முள்பொறுக்கி கட்டையறவே பறித்து
ராச கெம்பீரன் நல்ல பெருங் கோட்டை தனை
ஏறிட்டுத்தான் பார்த்தார் யெல்லோரும் கெடிகலங்கி
கூடிக் கடல்போலக் கொக்கரித்து சேனையெல்லாம்
தாவிப் பரிவாரந் தளத்துடனே தான்கூட்டி

மானாமதுரை

வானர வீரன் மதுரைதனில் வந்திறங்கி
ஆற்றங்கரையு மடர்ந்த மரத்தடியும்
தேர்ப்பு மரமுஞ் சோலை யிடங்கொள்ளாமல்
மாலை பஞ்சுக்கு மந்த பாங்கான ஊருணியும்
மன்னன் புலிராமன் மனமகிழ்ந்து கொக்கரித்து
ஏரிக்கரைக்குள் இறங்கினான் பாளையமும்
எண்ணிக்கையே பிடிக்க யெல்லோரும் வந்துநிற்க
ஆனை அறுநூறு ஆறுயிரம் குதிரை
ஒட்டகை யெழுநூறு உபய தளத்துடனே
இந்திரன்போல் ராமய்யனும் ஏகாந்தக் கொலுவிருந்தான்.
அந்தநாள் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்

தூதுவன் காணல்

கங்குல் விடிந்து கதிரோனும் யெழுந்திருந்து
சடைக்கனிட தூதுவனும் தளத்தையெல்லாம் தான்பார்த்து
கெடிகலங்கியே பயந்து கெடிசடைக்கன் முன்னேவந்து
தெண்டனிட்டுத் தூதுவனும் செப்பினா னப்போது

சடைக்கனிடம் உரைத்தல்

"ஆண்டவனே யிப்போது அடியேன் பயந்து வந்தேன்"
என்று சொன்ன தூதுவனை யேறிட்டுத் தான்பார்த்து
"ஒன்றுக்கு மஞ்சாதே உரையடா தூதுவனே
கச்சித் திநமலேந்திரர்க்குக் கண்ணான ராமய்யனும்
காசனையில் வென்றதம்மை கம்பம்நட்டு செயித்தவராம்
வணங்காத பேரை வணங்கவைத்த ராமய்யனும்
மானா மதுரையிலே வளைந்தடித்தான் கூடாரம்
கோடிக்குறுவெள்ளம் கொண்டுவந்து விட்டாற்போல்
இந்தபெருஞ் சேனைவெள்ளம் யெங்கேயிருந்ததைய்யா
கண்டு பயந்து வந்தேன் கர்த்தாவே அய்யாவே"

சடைக்கன் சீற்றம்

பூண்ட மணிமார்பன் புகழ்சடை காணும்போது
சிறுவடிவாள் அசைத்துச் சினந்தான் சடைக்கனுந்தான்
எறிந்துவிட்டு பம்பரம்போல் யிங்கேநீ வோடிவந்தாய்
முன்னால் நம்மாலே முண்டு வந்த மன்னரெலாம்

பரம்பக்குடிக் கோட்டையிலே பட்டந் தரிப்பாரோ
துப்பாக்கி தன்னாலே சூறையிட்டேன் கண்டாயே
அறிந்திருந்தும் பார்ப்பான் அவன் படைதான்வந்ததென்றால்
இதற்குப்பயந்து வந்தாயே யென்னடா தூதுவனே
சூரப்பய்யனைத் துரத்தி சூறையிட்டேன் கண்டாயே
அருணுத்திரிதனையும் அவன் படைகளத்தனையும்
குழல்வாய்க் கிரையாக கொள்ளைகொண்ட தறியாயோ
சடைக்கனிட வலுவைதானு மறியானோ
அறிந்து மிருக்கிலையோ அவனுமிந்த சோலியிலே
யென்னை மெலிமிக்க யெவரால் முடியுமோடா
யெண்ணமல் வந்து யிறங்கு மந்தப் பார்ப்பானை
கண்ணைப் பிடுங்கிக் காட்டிலே யோட்டிடாமல்
என்பெயர்தான் சடைக்கனோ எடுத்ததுவு மாயுதமோ
பின்குடுமி தன்னில் பேருலகு தானறிய
தேங்காயைக் கட்டி சிதறஅடிக் காவிட்டால்
என்பேர் சடைக்கனோ எடுத்ததுவு மாயுதமோ
ராமநாதஸ்வாமி பூசைபண்ணு நல்லதொரு பண்டாரம்

வாள்கோட்டை ராயன் சொல்

வாள்கோட்டை ராயன் மதச்சடக்கன் முன்னே வந்து
உம்முடைய வாள்திறத்தை யுரைத்தீரே மன்னவரே
மன்னன் புலிராமன் வாள்திறமும் கைத்திறமும்
இப்போது நானும் நேரே இனி கேளும் மன்னவரே
பாளையக்காரரெல்லாம் பணிவரது பெறுமுன்னே
அரசர் படையோடே ஆண்மை செய்ய வேண்டாங்காண்.
கர்த்தன் பெரும்படைதான் கடலைப்போல் வந்ததென்றால்
சென்று வணங்கி திறையிட வேணுமென்றான்
கண்டதும் வணங்கிக் கப்பங்கட்ட வேணுமென்றான்.
பண்டாரஞ் சொன்னதற்பின் பாங்காய்ச் சடக்கனுந்தான்
செங்கமலக் கண்கள் சிவக்க விழித்துமவன்

சடைக்கன் சொல்.

சீறிவிடுவான் செயதீரன் சடைக்கனுந்தான்.
"பார்ப்பான் தனக்கு பயந்து மெள்ள நானுமினி
கப்பமுங் கட்டி கைகட்டி நிற்பேனோ
இளித்து மன்னவர்கள் என்னை நிந்திப்பார்கள்
மண்டலத்திலுள்ள மன்னர் நகைப்பார்கள்"
அவ்வார்த்தை கேட்டு ஆனதொரு பண்டாரம்
"என்வார்த்தை தன்னை யினிக் கேளாயாமாகில்
ஆசார வாச லரமனைக்குள் உள்ளதெல்லாம்
இடித்துப் பரவி ஏருக்கு விரைப்பார்காண்
பேய்த்தொண்டன்னவடி பிடரியிலே போகு" மென்றான்.

பண்டாரம் போதல்

அந்த மொழி கேட்டு ஆனதொரு பண்டாரம்
ஆமைத்திரங்கள் வேமென்று பண்டாரம்
கோவித் தெழுந்திருந்து கோவிலிலே போனான்காண்.

சடைக்கன் அழைப்பு

பண்டாரம் போனதற்பின் பாங்காக சடக்கனுந்தான்
"என் மருகாவன்னியரே யிப்புதுமை கேட்கலையோ
மதியானவர்களை வாவென்று தானழைத்து
மக்கத்திலானை யெனும் மதப்புலியை தானழைத்து
சின்னாண்டி பெரியாண்டி சென்று சமர்வென்றவனே
வெண்ணிமாலை குமரா வீரா நீ வாவென்று
சேதுக்கு வாய்த்த சேவகனே வாவென்றே
வாதுக்கெப்படி வரும் மதுரைவழி கண்டவனே
கொண்டையங் கோட்டை குறும்படிக்கு மன்னவனே
செம்பி நாட்டிலுள்ள சேர்ந்தபடை மன்னவரே
மங்கல நாட்டு வ்ணங்காத மன்னவரும்
கன்னன் கலியாணி காவலனே வாவெனவே
ராவுத்தமாரே நயமுடனே வாருமென்று
வீசுகொடை தேவா வீமனெவனெனவே
(குமாரன் அழகனையுங் கூப்பிட்டுக் கிட்டவைத்து)
வாது சொல்லி வெட்டி வரும் வணங்காமுடி வேந்து
மெத்தை யுடையான் போர் வேந்தன் வாருமென்று
(ராவுத்தன் நரைபடை காவாளும்)
பாளையக்காரர் பரிவார மத்தனையும்
வாவென்று தானழைத்து வரிசை மிகக் கொடுத்தான்.
மாப்பிள்ளை **வன்னியரே** வாவென்று கிட்டவைத்து
வேங்கைப் புலியாரே வீரப் பரிவாரங்களே
முன்னாளில் வந்த வினைமுடிய வெட்டி வென்றீரே
அன்னாளி லென்னை அரசியலை யிட்டீரே
இன்னாளில் வந்த வினை யியம்புகிறோம் கேளுமினி
கூத்தன் மகன் சேதுபதி வார்த்தை குறியாக
இராமப்பய னென்றொருவன் எம்பதியை நோக்கி
மானா மதுரையிலே வந்தே யிறங்கினான்"

மறவர் பதில்

மதுச்சடைக்கன் தானுரைக்க மறவருமங் கேதுரைப்பார்
வீசு கொடைதேவன் வேந்தன் முகம் பார்த்து
பார்ப்பான் படையெடுத்தால் பறுமென்று சொன்னீரே
வந்த **வடுகரெல்லாம்** மடிந்தார்களன்னாளில்
இந்தவிசை வாரான் யிவன் பிழைத்தும்போவானோ
வாரா படையத்தனையு மடியவே போரிடுவோம்
சூறையிட்டு சுத்தித் துணிபிடுங்கி வாரோமய்யா"
தீரன் **சடைக்கன்** செய்தியெல்லாங் கேட்டபின்பு

வன்னியர் சொல் மட்டுப்படாத வன்னியன் மதம் பொழிந்து கொக்கரித்து
"கெட்டானே பார்ப்பான் கீழ்திசையை நோக்கிவந்து,
பஞ்சாங்கஞ் சொல்லவேறு பாரிவிட மில்லையோ
பூசைபண்ணித்தான் பிழைக்க பிள்ளையார் தானில்லையோ
ஆசைகொண்டு வந்தானே அறியாமல் பார்ப்பானும்
முன்வந்து தெரிபட்ட முதலிமார் சொல்லையோ
வடுகர் பட்ட பாடெல்லாம் மறந்தார்கள் மன்னவர்கள்
பார்ப்பானு மிதுதேசம் படையெடுத்து வந்தானே
இங்கே படையெடுக்க யினிவெட்கந் தானில்லையோ
சாய்வாக வந்த தளத்தை முறியவெட்டி
பார்ப்பான் குடுமியிலே பாங்குடனே தேங்காயை
கட்டி யடிப்பே" னென்றான் கன்னன்புலி வன்னியன்றான்
"மார்பிலிடும் பூணூல் பறித்து மாட்டுவடம் போட்டிடுவேன்"
அண்ட ரெல்லாங் கொண்டாடும் அம்மானை யிப்போது
ஆண்பிள்ளை சிங்கம் வன்னி அம்மான் முகம்பார்த்து
"வேண்டாமறவர் விசாரமினி வேண்டாங்காண்"
கண்டு வணங்கி வன்னி கடுகியே தானெழுந்து
பொக்கிஷத்தை தான்திறந்து பூஷணங்கள் தானெடுத்து
ஆபரணமுள்ள தேசா யன்பாகத்தான் திறந்து
வங்காரமான வன்னி வாதுசொல்லி தாமெழுந்து

உலா செல்லுதல் சிங்காரமான வெகு சேனை தளத்துடனே
மதயானை தனிலேறி வந்தானே வீதியிலே
விதமான பெண்களெல்லாம் வேடிக்கைப் பார்க்கவந்தார்.
வெறுமை பிடித்தாற்போல் மெல்விரலை வாயில்வைத்து
அறுமறுக்க கொட்டைபோல் அங்கிசைந்த
[பெண்களெலாம்
தன்னியத்தை கையாலே தானமுக்கி நின்பாரும்
நின்று மயங்கி நெடுமூச் செறிவாரும்
உடுத்தகலை சோர உய்யாரக் குழல் சரிய
இப்படியே நின்றார்க ளேந்திழைமா ரெல்லோரும்
வன்னிதுரை யென்பாரும் மன்மதன் காணென்பாரும்
தேவேந்திரனே திருமாலோ வென்பாரும்
பூவேந்திர னென்பாரும் போசனிவ னென்பாரும்
இந்தப்புவியாளும் இராசன் காணென்பாரும்
என்று புலம்பி யேமாந்து நிற்பாரும்
செப்பமுடன் வன்னித்துரை தீரன் காணென்பாரும்
நடந்தான் பெருஞ்சேனை நாற்புறமுடன் கூடி
நாடுகலக்கி யெனும் நல்லதொரு வான்பரியை
கொண்டு வரச்சொன்னான் கோட்டையிடி வன்னியும்தான்.

ஏறினன் வான்பரிமே லியல்வேந்தர் சூழ்ந்துவர
ஆனை குதிரைபடை அன்பாகத் தானடக்க
ஆனைமேல் பேரிகை அதிர்ந்து முழங்கிவர
ஒட்டைமேல் பேரிகை ஒக்க முழங்கிவர
குதிரைமேல் சம்மேளங் கூட முழங்கிவர
துத்தியு மத்தளமும் சேர ஒருபுறமாய்
தத்தி நடனமிட தாதியர்கள் தானுடை
ஆனை திரள அடல்பரியு முன்னடக்க
சேனை மிகநெருங்க செந்தூள் மிகப்பறக்க
வானத்தின் மீன்போல மன்னர் குடைநெருங்க
வானப் பொறியுடனே வங்கார ஈட்டியராம்
அறிவிகட்டி அசுவங்கள் ஆர்ப்பரித்து முன்னடக்க
அம்பு வில்லி ஆட்காரர் அதிவீரர் சூழ்ந்துவர
கொடேரிகுளந்து வரும் குப்பக்குழல்களர
வீரப் பரிவார மேளம் வெகுதிரளாய் சூழ்ந்துவர
கட்டியக்காரர் கனவிருது கூறிவர
பஞ்சவர்ணப் பாவாடை கொஞ்சி மிகவெறிக்கக்
ஆலவட்டம்பிடிக்க அதிவீரர் முன்னடக்க
சந்திரகாவிடால் தளமெல்லாந் தானிலங்க
காவிக்குடை பிடிக்க கனவிருது கூறிவர
சாம்பிராணி தூபம் தளமெல்லாங் கமகமவென
வெஞ்சாமரம் வீசி விருது சின்னந்தானூத
நடந்தானே **வன்னிதுரை** நாவலர்கள் கொண்டாட
கடுக்க மூத்தரா கடந்து **காடந்தகுடி** கடந்து
வாய்த்ததொரு **காவனூர்** வழியாகத் தானடக்க
அந்தநாள் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்.

சேனை செல்கை மற்றைநாள் தானும் மன்னன் **புலி வன்னித்துரை**
மதியற்றழகனையு மன்னன் குமாரனையும்
சின்னயாளி யவுக்குச் சேர்ந்த படையத்தனையும்
அரியாணிபுறக் கோட்டைக்கு அதி சீக்கிரத்தில் போகச்
[சொன்னார்
புயத்தை யுடைவாள் போர்வேந்தன் தன்படையும்
வீசுகொண்ட தேவன் வீமன் பெரும்படையும்
புதுக்குடி கோட்டைக்கு போமென்று தாமுரைத்தார்.
மதுரை வழிகடை மத்ததேவன் தன்படையும்
கறுத்த உடையான் கன்னன் பெரும்படையும்
ருவுத்த காத்தன் நல்ல படைக்காவாளும்
போகலூர் கோட்டைக்கு போமென்று தாமுரைத்தார்.
வட்டாணந் தொண்டியிலே வையுந்தன் தானியத்தை

இளையாங்குடிக் கோட்டை யெச்சரிக்கை யென்றுரைத்தார்.
மற்றநாள் தான்தானும் மன்னன் **புலி வன்னியவன்**
அரியாணிபுறக் கோட்டையில் அதி சீக்கிரம் போயிறங்கி
கோட்டைபுகுந்து கொத்தளத்து மேலேறி
யெதிரி படையை யேறிட்டுத் தான்பார்த்து
'எங்கே யிருந்ததடா யிந்த பெரும்படைதான்
கோடங்கி வெள்ளமெனக் கொண்டுவந்து விட்டானே'
வீரியங்கள்பேசி வன்னி விதமுடனே ஆர்ப்பரித்து
பார்ப்பான் பெரும்படையை பார்முறிய வெட்டவென்று
இருந்த படைத்தலைவ ரெல்லோரையும் அழைத்து
அஞ்சாமல் **பார்ப்பான்** நெஞ்செதிரே வந்தானே
இறங்கின பாளையத்தை இளப்ப மென்று தான்துணிந்து
கோட்டைத் திறந்து புறப்பட்டார் மன்னவர்கள்.

முதல் நாள் சண்டை

பார்ப்பான் படைமேலே பாருலகு தானறிய
எறிந்தார் எரிவாணம் எல்லையற்ற சேனையின்மேல்
சுடரா குவைக்காரா சொல்லரிய மன்னரைத்தான்
குத்தி விரட்டிக் கூடாரங் கொள்ளையிட்டார்.
வெறுப்பட்டு குத்தி விரண்டோடிப் போவாரும்
அய்யோ சிவனேயென்று அலறி விழுவாரும்
குத்துண்டு போர்க்களத்தில் கொலவையிட்டு நிற்பாரும்
காலறுந்து வீழ்வாரும் கையறுந்து வீழ்வாரும்
குறைப் பிணமாய்நின்று கூத்தாடி நிற்பாரும்
வேலவனே யென்பாரும் விதிவச மென்பாரும்
மன்னன் புலிவன்னியவன் வாகாகவே திரும்பி
வெற்றிச் சங்கூதினர் **விருது சடைக்கனவன்**
பார்ப்பான் பெரும்படையில் பட்டார்கள் முன்னூறு
மறவர் அறுபதுபேர் மாண்டார்க ளக்களத்தில்.

இரண்டாம் நாள்

அந்தநாள் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்
மற்ற நாள்தானு மன்னன் புலி ராமய்யனும்
இந்தப் படைத்தலைவர் யெல்லோரையும் அழைத்து
"அஞ்சாமல்தான் மறவன் நெஞ்செதிரே வந்தானே
மாப்பிள்ளை **கொண்டய்யா** மன்னவனே வாருமென்று
திருமலை கொண்டப் பய்யா தீரனே வாருமென்று
சத்துருக்களய்யா தார்வேந்தே வாருமென்று
பொன்னமராயா போர் வேந்தே வாருமென்று

பாளையக்காரர்கள் அழைப்பு

மண்டூறு பாப்பயனே மன்னவனே வாருமென்று
நத்தத்து லிங்கையனும் நல்ல படையாளும்

கோடப்பனுயக்கன் கூட்டப் பெரும் படையும்
வீரமலை னுயக்கன் வேந்த பெரும் படையும்
எட்டப்ப னுயக்கன் யெல்லையற்ற காலாளும்
தொட்டப்ப னுயக்கனும் தோருத சேவகனும்
இருவப்ப னுயக்கன் யெதிரில்லா மன்னவனும்
பூச்சி னுயக்கன் போர்வேந்தன் தன்படையும்
முத்தய்ய னுயக்கன் மூவலூர் மன்னவனும்
தென்காஞ்சி மூக்கன் சிவிலி மாறன் படையும்
முருக்கு நாட்டு மூவரையன் தன்படையும்
சோத மறுடி கோத்த பெரும்படையும்
குற்ருல் தேவன் கூட்டப் பெரும்படையும்
தென்மலை வன்னியனும் சேவண பெருந்தளமும்
சின்னணஞ்சாத் தேவன் சேனை பெருந்தளமும்
கட்டபொம்ம னுயக்கன் கனத்த பெருஞ்சேனைகளும்
ஊற்று மலையானும் உகந்த பெருஞ்சேனைகளும்
கீழ்முகத்துத் தும்பிச்சி கீர்த்தியுள்ளான் தாவிடையும்
மேல் முகத்து தும்பிச்சி விருது புகழ்காலாளும்
ஏழு மடையிலி வைப்பன் தன்படையும்
கழுகு படையான கதித்த படை காவலாளும்
வென்னுயக்கனும் உற்ற புகழ் காலாளும்
போருக்கதிகாரி பொம்மனுயக்கன் படையும்
அப்பாச்சி கவண்டன் ஆனபெரும் படையும்
ஏழாயிரம் பண்ணை யெதிரில்லான் தான்படையும்
கணக்கதிகாரி கவண்டன் பெரும் படையும்
இரவும் பகலும் இவந்து பொரும் சேவகரும்
நரிக்கி விருந்தாக்கும் நல்லசிறு பொம்மணனும்
முட்டிவெட்டி சூறையிடும் முத்தப்ப நாயக்கன் படையும்
இருந்து மாந்து வெட்டும் இலப்பையூர் காமாட்சியையும்
பள்ளியில் சின்னையனும் பார்வேந்தன் தன்படையும்
ஆயக் குழக்கொண்டையனும் அவன் படைகளத்தனையும்
விருப்பாச்சினுயக்கனும் வேந்தன் பெரும்படையும்
கன்னிவாடினுயக்கனும் கதித்தபடை காலாளும்
லிங்கமனுயக்கன் நீதியுள்ளான் தன்படையும்
பெத்தணனுயக்கன் பெருஞ்சேனை யத்தனையும்
வாலப்பனுயக்கன் வலுவுள்ளான் தன்படையும்
வெங்கமனுயக்கன் விருதுபுகழ் காவலாளும்
தென்னம நாடு சேனை பெருந்தளமும்
வீசுங்க நாடு விருது புகழ் காவலாளும்
செல்வப்பொட்டினுயக்கன் சேனைப் பெருந்தளமும்
திருமலை பூச்சியனும் சேனை படையத்தனையும்



நாயக்கர்காலத்துப் பாளையப்பட்டுக்கள் தென்பகுதி


பாளையப்பட்டுக்கள்
வட பகுதி
By S.V. SAMY & CO. CBE.
சேலம்
கோவை ஜில்லா
திருச்சி
மதுரை
மலை நாடு
நீலகிரி
பவானி
ஈரோடு
கோயமுத்தூர்
கரூர்
குளித்தலை
திருச்சிராப்பள்ளி
வெள்ளாறு
வாலிகண்டபுரம்
பெரம்பலூர்
உடையார் பாளையம்
துறையூர்
குளத்தூர்
அரியலூர்
இராமகிரி
தோகைமலை
குமாரவாடி
மணப்பாறை
கடவூர்
இடையகோட்டை
விருப்பாட்சி
அமிலூர்
இலுப்பூர்
மருங்காபுரி
புதுக்கோட்டை
வடமதுரை
திண்டுக்கல்
கன்னிவாடி
இரட்டையம்பாடி
ஆய்க்குடி
பழனி
தளி
உமேலபேட்டை
மேட்ராத்தி
நெகமம்
புரவிப் பாளையம்
பொள்ளாச்சி
ஊற்றுக்குழி
சமத்தூர்
ஆனைமலைகள்
வராக மலை
பெருமாள் மலை
கோடைக்கானல்

சொக்கலிங்க நாயக்கன் சொல்தவருன் தன்படையும்
விசுவப்பனுயக்கன் வேந்தன் படையத்தனையும்
மணலூறுனுயக்கன் மன்னன் பெருந்தளமும்
வேலப்பனுயக்கன் வேந்தன் படையத்தனையும்
மருதப்ப தேவன் மன்னன் படையத்தனையும்
கோடங்கி ரெட்டிக் குலேகளுந்தானையும்
முனைச் சமரில் நின்று பொரும் மூங்கிலவனைப்பூசாரி
பட்டத்து நாயக்கன் பரிவார மத்தனையும்
தென்னமனுடு சேனை பெருந்தளமும்
இரந்து பறந்து வெட்டும் இலைப்பையூர் காமாட்சி
வங்காள முத்தய்யன் வலுவுரைத்தான் தன்படையும்
அரியலூராரும் அவன் படையத்தனையும்
மறுநாற்றுனுயக்கன் மன்னன் பெரும் தளமும் படையும்
வால சமுத்திரத்தின் மன்னன் படையத்தனையும்
குன்னத்து ரெட்டி குமாரன் படையத்தனையும்
நாஞ்சி நாட்டுத்துரையும் நல்ல படையத்தனையும்
திருநெல்வேலி சேர்ந்த படையத்தனையும்
(மறுனூத்துனுயக்கன் மன்னன் பெருந்தளமும்)
மலையாள ராஜாவும் மன்னன் பெரும்படையும்
கொளும்பினில் ராசாவும் கூட்டப் பெரும்படையும்
ஈரோடு தன்னில் யெண்ணவொண்ணு கொங்குமன்னர்
நல்மனுயக்கன் படையும் நாகமன் தன்படையும்
ஊற்றுமலையானும் ஊக்கமுடைப் போர்படையும்
கரட்டுமலேனுயக்கன் கனம் பெருந்தளமும்
கச்சைகட்டினுயக்கன் கனத்த பெருந்தளமும்
காங்கேயனுடன் கன்னப் பெருந்தளமும்
மூங்கில்முவனபூசாரி முனைச்சமரில் மன்னரெல்லாம்
காமாட்சினுயக்கன் கன்னம் பெரும் படையும்
காமயனுயக்கன் கதித்தபடை காலாளும்
நாகமனுயக்கனும் நல்ல படை காலாளும்
போருக்கதிகாரி பொம்மணன் தன்படையும்
செல்லாரை வென்ற சிங்கமலர்த்தாபிள்ளையும்
சிலுப் பெட்டினுயக்கனும் சேனைவெள்ள மத்தனையும்
கோதை மறுபாடி கூட்டுப் பெரும்படையும்
மனமது காணும் வாய்த்த புரவிகளும்
ஆசிறு பேய்க்கும் அஞ்சாப் புரவிகளும்
உச்சிமிய்யாவும் உகந்த பெருந்தளமும்
சவ்வாசுகானும் தன்மாவி அத்தனையும்
வாய்பூசகான் தளமும் வாய்த்த புரவிகளும்
வாவுகான் தன்படையும் வாய்த்த கரிகளுடன்

சின்ன ராவுத்தர் சேர்ந்த புரவிகளும்
முசெகான் குதிரையும் முத்து முதலியரும்
காதுறு சாயபு கன்னன் புரவிகளும்
சுரனு தாயத்தரூவுத்தன் தன்புரவி யத்தனையும்
மீரூசாயபும் வேந்தன் பெரும்படையும்
அதிரி சாயபும் அடர்ந்து வருஞ் சேனைகளும்
மகமது சாயபு மன்னன் புரவிகளும்
படெகான் கிலிசும் வாய்த்த புரவிகளும்
மகமதுகான் கிலிசும் வாய்த்த புரவிகளும்
யீசனுகான்தன் பரியும் வெகுமையாய் இன்றெழுந்து
எல்லோரும் வந்து யியல்பாகத் தானெழுந்து
உபய தளமெல்லாம் ஒருமித்துதான் திரண்டு
இன்றைக்கு இலக்காக எதிர்த்த மறவனையும்
சென்று பிடிக்கவென்று சீறி விடிவாளெடுத்து
மாப்பிள்ளை கொண்டய்யன் மதயானைப்போல் சீறி

சேனையை வகுத்தல்.

பாளையக்காரர் பலபேரை தானழைத்து
பதினெட்டு வகையாக பாங்குடனே தான்பிரித்து
எட்டப்பனுயக்கன் எதிரில்லான் தன்படையும்
எர்ரப்பனுயக்கன் யெல்லையற்ற காலாளும்
பூச்சியனுயக்கன் போர்வேந்தன் தன்படையும்
கட்டப்பொம்மனுய்க்கன் கன்னன் பெரும் படையும்

போர்.

நேரே பொருகையிலே நெருங்கி சமர் பொருதார்கள்
காமாட்சினுயக்கன் கன்னன் பெருந்தளமும்
தென் காஞ்சி மூக்கன் சிவிலிமாறன் படையும்
முருக்குநாட்டு மூவரையன் தன்படையும்
முத்தயனுயக்கன் மூவலூர் மன்னவனும்
கோதைமரெட்டி கூட்டப் பெரும் படையும்
குன்னத்தூர் ரெட்டி குமரன் பெரும்படையும்
தென்மலை வன்னியனும் சேனை பெருந்தளமும்
முட்டிவெட்டி சூறைகொள்ளும் முத்தையனுயக்கன் [படையும்
நரிக்கி விருந்தாக்கும் நல்ல சிறு பொம்மணனும்
கணக்கதி களத்து வண்டன் பெரும்படையும்
கொப்பக்கவண்டன் குறிக்கவண்டன் மெய்க்கவண்டன்
சின்ன ஞஞ்சாத்தேவன் சேனை பெருந்தளமும்
சிலப்பெட்டினுயக்கன் சேனைவெள்ள மத்தனையும்
சின்னமனுயக்கன் சேனை பெருந்தளமும்
வாலப்பனுயக்கன் வலுவுள்ளான் தன்படையும்

கோலக் கொண்டையான் கூட்டப் பெரும்படையும்
ஏழுமடையான் ஏறி சின்னன் தன்படையும்
ஈரோடுதன்னில் யெண்ணவொண்ணு கொங்கு மன்னர்
காங்கேய நாட்டில் கதித்த முனைக்கவண்டன்
தளவாயிலயக்கன் தார் வேந்தன் தன்படையும்
நத்தத்து லிங்கையனும் நல்ல பெருங்காலாளும்
நேரே பொருகையிலே நெருங்கி சமர்பொருதார்.
இந்த வகையெல்லாம் எல்லோருந்தான் துணிந்து
கோட்டைதனை வளைந்து கூடாரந் தானடித்தார்.
கோட்டையில் உள்ளிருந்து குறும்படித்த மறவனுந்தான்
சும்மாயிருந்தால் சிரிப்பார்கள் உலகிலுள்ளோர்
யென்று சொல்லி மறவர் யெல்லோருங் கச்சைகட்டி
பார்ப்பான் பெரும்படைதான் பாரமோ யென்றுசொல்லி
வந்தெதிர்த்த மன்னர் வலுவறிய வேணுமென்று
அரியாணிபுரக்கோட்டை விட்டு அன்பாய் வெளியில்வந்து

மறவன் சேனை வகுப்பு. அஞ்சு வகையாய்த்தான் பிரித்து அடர்ந்து பொருக்க [வென்று
கறுத்த உடைவாள் **கன்னன்** ஒரு கையிலே
வீசு கொடைத்தேவன் **வீமனொரு** கையிலே
பொத்தை யுடையான் போர்**வேந்தனொரு** கையிலே
மதுரை கடைவழி **மத்ததேவனொரு** கையிலே
ருவுத்தர் கூத்தன் நல்ல படையொரு கையிலே

போர். அஞ்சுவகையாய்தான் பிரித்து அடர்ந்து சமர் [பொருகையிலே
யெறிந்தா ரெரிவாணம் யெல்லையற்ற சேனையின்மேல்
சுட்டார் குழல்காரர் சொல்லறியா சேனையின்மேல்
வாளோடே வாள்முறிய மக்ஷம் பொருதார்கள்
அம்பு வில்லுகாரன் ஆர்ப்பரித்துத் தான்பொருதான்
ஆனைகுத்திச் சோர்ந்து அலறி விழுவாரும்
இருபடையு முன்னு மெதிர்த்து சமர் பொருதார்.
வாண மடிபட்டு மண்மேல் கிடப்பாரும்
குத்துண்டு போர்களத்தில் கொலவையிட்டு நிற்பாரும்
குறை பிணமாய் நின்று கூத்தாடி நிற்பாரும்
வேல் குத்துப்பட்டு விரண்டோடிப் போவாரும்
வேலவனே யென்பாரும் விதிவசமோ யென்பாரும்
காலற்று வீழ்வாரும் கையற்று வீழ்வாரும்
முட்டிப் பொருதார்கள் மூவுலகு தானறிய
கிட்டிப் பொருதார்கள் கீழுலகும் தீயெரிய
வலங்கையிலே நின்றபடை வளர்த்துப்போர் செய்தார்கள்

இடங்கையிலே நின்ற படை எதிர்த்துப் போர் செய்தார்கள்
தேக்கிலையில் நீரதுபோல் தியங்கிடவே தான் மறவன்
மன்னன் புலிராமன் மறித்தான் மறவரைத்தான்
மன்னன் புலிவன்னி வாகாகத்தான் திரும்பி
யெதிர்த்துப் போர்செய்தான் யெதிரில்லா வன்னியும்தான்
பார்ப்பான் பெரும்படையும் பறந்து கொலவையிட்டுக்
குத்தி விரட்டிக் கூடாரங் கொள்ளையிட்டு
மதச்சடைக்கன் தான் வளைத்த வன்னிக்கு வாய்த்ததென்று
ஊடுருவிச் சென்றான் உலகங் கிடுகிடென
வெட்டித்துரத்தி வன்னி விருதுகளுந் தான்பேசி
மன்னன் புலிராமன் படை மட்டில்லாச் சேனைவெள்ளம்
தட்டழிந்து கெட்டது போல் தலைகெட்ட நூலது போல்
மன்னன் புலிராமன் மட்டில்லாச் சேனையின்மேல்
மூவாயிரம் போர்முழுது மங்கேதான் மடிந்தார்கள்
மறவர் படையில் மடிந்தார்கள் முன்னூறு.
வெற்றிச் சங்கூதி விருதுகளும் பேசிவந்தார்
அந்தநாள் சென்று அலைகதிரோன் போய் மறைந்தான்
ஆழி நெடுந்தேரேறி அலைகதிரோன் வந்துதித்தான்
அன்று முறிந்து அடைந்தார்கள் பாளையத்தில்
மன்னன் புலி ராமன்படை மட்டில்லாச் சேனைவெள்ளம்
மறவனோ ஆண்பிள்ளை காண் மண்டலத்தி லுள்ளோரே
பெண்களோவென்று பெருமூச்சுத் தானெறிந்து
மாப்பிள்ளைக் கொண்டையன் மாகோபங் கொண்டெழுந்து
வெங்கிடகிஷ்ணய்யன் வீமனே வாருமென்று
இருந்த படைத்தலைவர் யெல்லோரை யும்அழைத்து
அஞ்சாமல் தான்மறவன் நெஞ்செதிரே வந்தான்காண்
இன்றைக்கு இலக்காக யெதிர்த்த மறவனைத்தான்
சென்று பிடித்து திசைநாலுங் கொள்ளையிட்டு
கைப்பிடியாய்த்தான்பிடித்து கட்டிக்கொண்டு வராட்டால்
என்பேரோ ராமன் எடுத்ததுவும் ஆயுதமோ.

மறுநாள் மற்றுநாள் தானும் மன்னன் புலிவன்னியவன்
மன்னன் சடைக்கனுக்கு மறுநிருபம் தானெழுதி
ஓட்டன் தனையழைத்து ஓலைதனைக் கொடுக்க
ஓட்டனவனோடி உற்றதொரு காற்றெனவே
வாள் கோட்டைராயன் மதச்சடைக்கன் முன்னேவைத்து

ஓட்டன் சொல் " ஆண்டவனே யிப்போ தடியேன்சொல் விண்ணப்பங்கேள்
மன்னன் புலிராமன் மட்டில்லாச் சேனை முன்னே
சென்று புகுந்து திசைநாலுங் கொள்ளையிட்டு

வெட்டித்துரத்தி விருதுகளுந் தான் பேசி
மன்னன் புலிராமன்படை மட்டில்லாச் சேனைவெள்ளம்
மூவாயிரம் பேர்முழுது மங்கேதான் மடிந்தார்கள்
மறவரிருனூறு வாகாகப் பட்டார்கள்
மற்றுநாள் போரிலும் முந்திபோல் வெற்றிகொண்டோம்
நாலாநாள் போரில் இராமனிட தன்படையில்
ஐநூறு பேர்கள் அங்கே மடிந்தார்கள்
மறவர் இருநூறு மடிந்தார்கள் அக்களத்தில்''
என்று சொல்லி ஓட்டன் இகமுடனே தானுரைத்தான்.
அப்போது சேதுபதி அந்த விசேஷங் கேட்டு

மதச்சடைக்கன் சொல்

'' இந்தவெற்றி போதாதா என்மருகா வன்னியனே
கூத்தன் மகன் சேதுபதி வார்த்தை குறியாக
நம்மை யெடுக்கவென்று நம்பதியை நோக்கிவந்து
மானா மதுரையிலே வந்தேகி அங்கிருந்து
மண்டலத்திலுள்ள மகாசேனை அத்தனையும்
கூட்டிவந்து ர்ாமய்யனும் கூடாரந் தானடித்தான்.
என்னை யெடுக்க ஏவரால் முடியுமோடா
இராமநாதர் பாதம் நமக் குதவியா யிருக்க
மலை வளர் காதலித்தாய் மங்கையுமை தானிருக்க
முக்கோடி தீர்த்தம் முழுது மங்கே தானிருக்க
வாமஞ் செகநாதர் வாய்த்த துணை யிங்கிருக்க
பார்ப்பா னொருபொருட்டோ பாருலகில் மன்னவனே
யெதிர்த்து வந்த பார்ப்பானை யினிவிடப் போறேமோ
நாளைப்பகல் பொழுதில் நாழிகைக்குள்ளாக
அம்மானைப் பந்தாடி அலைக்கழிவு பண்ணுட்டால்
என்பேரா சடைக்கன் எடுத்ததுமாயுதமோ
பார்ப்பானைக் கொன்றால் பாவம் வந்து சூழுமென்று
பின் குடுமிதன்னிலே பேருலகம் தானறிய
தேங்காயைக்கட்டி சிதற வடிப்பேனுன்
கண்ணைப் பிடுங்கி காட்டிலே ஓட்டிடுவோம்
என்றுசொல்லி ஓலையெழுது'' மென்றான் சடைக்கனுந்தான்.

ஓலை அனுப்பல்

ஓலையெழுதி ஓடவிட்டார் இராமயற்கு
ஓட்டனவனோடி உற்ற பெருங் காற்றெனவே
கோலாகல இராமன் கொலுவிலே யிருக்கையிலே
ஓலையைக் கொடுத்து ஒதுங்கி நின்றான் ஓட்டனுந்தான்.
வாசித்துப்பார்த்து மன்னன் புலி ராமய்யனும்
எரியும் நெருப்பில் எண்ணெய்தனை விட்டாற்போல்

இராமய்யன் சொல்

கண்சிவந்து சீறி கடுங்கோபங் கொண்டெழுந்து
"என் வார்த்தைதனை யினிக்கேளும் தூதுவனே
சதுரகிரி பருவதத்தைத் தான்பார்த்து நாய் குலைத்தால்
சேதமுண்டோ" வென்று சிரித்தான் புலிராமன்.
"சடக்கனிட பெண்சாதி தாலிதனை யறுத்து
அரமனை தோறும் ஆசார வாச லெல்லாம்
எருக்கு குருக்கு மினிவிரைப்பே"னென்று சொன்னர்
தூதுவனை தான்விளித்து துங்கமுடி ராமய்யனும்
"சொன்னதொரு வார்த்தைதனை சொல்லடா தூதுவனே"
அப்போது தூதுவனும் அவ்விவரந்தான் கேட்டு
ஓடினுன் தூதுவனும் உற்ற பெருங்காற்றெனவே
வாள் கோட்டைராயன் மதச்சடைக்கன் முன்னே வந்து
ஓலைதனைக்கொடுத்து ஒதுங்கி நின்ருன் தூதுவனும்
வாசித்துப்பார்த்து மதம் பொழிந்துக் கொக்கரித்து

ஓலை படித்து விட்டுச் சொன்னது

"என் மருகா வன்னி இவ்வசனங் கேட்கிலையோ
பாளையக்காரர் படைத்தலைவரை யழைத்து
பார்ப்பானகைத்து பகடி பண்ணி போய்விட்டான்
சும்மா யிருந்தால் சிரிப்பாருலகிலுள்ளோர்"
மதச்சடைக்கன் தான்வளர்த்த வன்னிக்கு வாய்த்ததென்று
போத்தை யுடையான் போர்வேந்த னெருகையிலே
வீசுகொண்டதேவன் வீமனெரு கையிலே
கறுத்த உடையான் கன்னன் றேவிகையிலே
மதுரைவழிகண்ட மத்ததேவன் ஒருகையிலே
ராவுத்த கூத்தன் நல்ல படையொரு கையிலே
மதச்சடைக்கன் தான்வளர்த்த வன்னி ஒருகையிலே
அறுகையாய் தான்பிரித்து அடர்ந்து போர்செய்யவென்று

போகலூர் வெளி சென்றது

போகலூர் வெளியில் புறப்பட்டா ரெல்லோரும்
மன்னன் புலிராமன் மட்டில்லாச் சேனைவெள்ளம்
பெண்டுகளோ வென்று பெருமூச்சு தானெரிந்து
வெங்கிட்டகிஷ்ணய்யன் வெகுளியாய்த் தானெழுந்து
மண்ணூறு பாப்பய்யனும் மாகோபங் கொண்டெழுந்து
சத்துரு கையன் தார்வேந்தன் தானெழுந்து
பாளையக்காரர் படைத்தலைவ ரெல்லோரும்
கச்சைகட்டி வேலெடுத்து கனத்த குழல் தானெடுத்து
போகலூர் வெளியில் (போருக்குவந்) தார்கள்.

போகலூர்ப் போர்

இருவர்படை முன் எதிர்த்துப் போர் செய்தார்கள்
வன்னி யொருபுறமாய் மார்க்கமாய் வந்து நின்று
மாபோகி யென்னுமொரு வான்பரிமேல் தானேறி

ஊடுருவிச் சென்ருன் உலகங் கிடுகிடென
இடசாரி வலசாரி யெய்யாமல் ஊடருத்தான்.
மன்னன் புலிராமன் மட்டில்லாச் சேனைவெள்ளம்
தட்டழிந்து கெட்டது காண் தலைகெட்ட நூலதுபோல்
மாப்பிள்ளை கொண்டய்யன் மதயானைப்போல் சீறி
யெதிர்த்த மறவனை யினிவிடப் போருேமோ
என்று சொல்லி அய்யன் எல்லோரையுஞ் சினந்து
தொட்டிய கம்பளத்தார் துடிகாரரையும் அழைத்து
பல்கடித்துச் சீறிவிழ பாருங் கிடுகிடென
எல்லாருந்தான் சினந்து ஏகினர் காணம்மானை.
மறவர் படைமேலே மண்டிப் பொருதார்கள்.
மறவர் வெருண்டோட வன்னியவன் தான்பார்த்து
புலியை நரிபாய்ந்து போகுமோவென்று சொல்லி
வலையிலகப்பட்ட மான்போல தான் மறவர்
தேக்கிலையிலகப்பட்ட தீர்த்தம் போலே மறவர்
அலண்டு சோர்ந்து அலறி வீழ்வாரும்
பாண மடிபட்டு மண்மேல் கிடப்பாரும்
குத்துண்டு போர்க்களத்தில் கொலவையிட்டு நிற்பாரும்
உண்டைபட்டு உருண்டு சோர்ந்து கிடப்பாரும்
வேல்குத்துப் பட்டு வெருண்டோடிப் போவாரும்
வேலவனே யென்போரும் விதிவசமோ யென்பாரும்
காலற்று வீழ்வாரும் கையற்று வீழ்வாரும்
குறைபிணமாய் நின்று கூத்தாடி நிற்பாரும்
வன்னியவர் துணிந்து மசைப்போர் செய்தார்கள்.
அரியாசை புரத்தார் அதிசீக்கிரம் வந்துதவ
காடந்தகுடி கோட்டையார் கடுகித்தான் வந்தார்கள்.
எல்லோரும் வந்து இனிவிடப் போருேமோ
என்று சொல்லி மறவர் எதிர்ந்து போர்செய்தார்கள்.
மன்னன் புலிராமன் மட்டில்லா சேனை வெள்ளம்
கட்டவிழ்த்த மான்போல கதறியே ஓடலுற்ருர்
எக்கடா யென்ன யென்று ஒளிப்பாரும்
அக்கடா ஒச்சையென்று அரண்டு திருண்டோடுவாரும்
காடி கொடுக்கு காலன் போல் வந்தானே
யென்ன செய்வோமென்று ஏங்கி முகம்வாடி
உண்டைபட்டு சோர்ந்து உருண்டு கிடப்பாரும்
வேல் குத்துபட்டு வெருண்டோடிப் போவாரும்
வாண மடிபட்டு மண்மேல் கிடப்பாரும்
குத்துண்டு போர்க்களத்தில் கொலவையிட்டு நிற்பாரும்
அம்புபட்டு அலறி சோர்ந்து விழுவாரும்
காலற்று விழ்வாரும் கையற்று வீழ்வாரும்

குறைப்பிணமாய் நின்று கூத்தாடி நிற்பாரும்
வேலவனே யென்பாரும் விதிவசமோ யென்பாரும்
அய்யோ சிவனேயென்று அலறி விழுவாரும்
அந்தரத்தில் தேவர்கள் அலங்காரமாய் பார்த்துநிற்க
இந்த வுலகி லெவருடைய திப்போரோ
வாலியிட போரோ மாயனிட தன்போரோ
என்றுதான் சொல்லி எல்லோரும் பார்த்துநிற்க
வெட்டிக் கருவறுத்தான் விருதுபுகழ் வன்னியுந்தான்.
குதிரை யிருநூறு குண்டுபட்டு தான்விழுந்து
ஆனையுமோ பத்து அம்புடனே தான்சோர்ந்து
கூடாரங் கொள்ளையிட்டு குடல் பிடுங்கி மாலையிட்டு
விருப்பாட்சிநயக்கன் விருது சொல்லி ஓடிவந்தான்.
காமாட்சிநயக்கன் கழுத்தை யறுக்கலுற்றான்
தொண்டமநயக்கன் தோள் சரிய வெட்டலுற்றான்
வெங்கமநயக்கனை வெட்டிப் பிளந்தெறிந்தான்
பாளையக்காரரை தான் பார்த்து கழுத்தறுத்தான்
ஆறு பாளையக்காரர் அடங்காத ராசரைத்தான்

வன்னி வெற்றி

தலையறுத்துக் கொள்ளையிட்டு தாரைசின்னந்தான் முழங்க
வெற்றிகொண்டு வன்னி வீரியங்கள் பேசிவந்தான்
கோட்டை புகுந்தான் கோட்டையிடி வன்னி யுந்தான்
மன்னன் புலிராமன் மட்டில்லாச் சேனை வெள்ளம்
என்று முறிந்து அடைந்தார்கள் பாளையத்தில்
மன்னன் புலிராமன் மட்டில்லாச் சேனையிலே
மூவாயிரம் பேர்முழுது மங்கேதான் மடிந்தார்கள்.
மறவரிட படையிலுமே மடிந்தார்கள் பலபேர்கள்
அந்தநாள் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்.

பரிசு தரல்

மற்றுநாள் தானும் மன்னன் புலி வன்னியுந்தான்
வெற்றிகொண்டமன்னரைத்தான் விரையவேதானழைத்து
பூஷணங்களெல்லாம் பூட்டி யலங்கரித்து
பச்சவடம் கொடுத்து பாங்கா யமுதளித்து
கெந்தபொடி சந்தணமும் கெர்வித்மாம் தான்பூசி
அடைக்காயும் வெள்ளிலையும் அன்புடனே தான்கொடுத்து
கோட்டைப் பதனமென்று கோலாகல வன்னியுந்தான்

வெற்றியுடன் திரும்பல்

சேதுவரை வாழும் தீரனிடம் போகவென்று
ஏறினான் தண்டிகைமேல் எல்லையற்ற சேனைமுன்னே
கட்டியக்காரன் கனவிருது கூறிவர
வெண்சாமரம் வீச விருதுபல முழங்க
பேரிகை டம்மாரம் பிறகே தொனிமுழங்க

சந்திரகாவிடால் நளமெலாந் தான்முழுங்க
நடந்தான்காண் வன்னியுந்தான் நல்லமுத்து மாலைகொஞ்ச
அத்தியுத்தி கோட்டையிலே அம்மானருகே வந்தான்.
வந்தானங்கு தெண்டனிட்டான் வாள்வீரன்வன்னியுந்தான்.
ஏந்தியெடுத்து பிருகண்ணிலே தானணைத்து

சாந்தி கழித்தல் ஆயிரம் ஆலாத்தி அடுக்கடுக்காய் தானெடுத்து
திட்டிக்கிடாய் வெட்டி தீரனவன் வன்னியற்கு
வேண்டும் வரிசையெல்லாம் விதமுடனே தான்கொடுத்து
"சேனைப் படைத்தலைவர் சேர விருந்தாலும்
கொஞ்ச திரவியங்கள் கொள்ளையிட்டுப் போனானும்
இந்தவெற்றி போதாதோ யென்மருகா வன்னியென்றார்
கேட்ட படைத்தலைவர் கெடிகலங்கிப் போவார்கள்
இனி இளப்பமில்லை யென்மருகா வன்னி"யென்றார்
ஐந்தாநாள் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்
மற்றாநாள் தானும் மன்னன் புலிராமன்

அரியாசை புர முற்றுகை அரியாசை புரக்கோட்டை அடுத்து வளைந்து கொண்டான்
கோட்டைக்குள்ளிருந்து குறும்படித்த மறவனுந்தான்
இனியிருந்தால் மோசமென்று யெல்லோரும் கிலேசமுற்று
போராது புகுந்தாற்போல் போகவென்று தான்துணிந்து
கச்சைகட்டி யெல்லோரும் கனத்தவெடி தானெடுத்து
காடந்தக் குடியிடையே கடுகியே ஓடிவந்தான்
மற்றாநாள் தானும் மன்னன் புலிராமன்
போனான் மறவனென்று பொருமி மிகச்சினந்து
வண்ட மறவன் மதிமயங்கிப் போனாலும்
காணிக்கை கொடுக்கு மகன் காணாமல் ஓடுவனோ
வண்ட மறக்கொடுக்கை வளைந்துபிடிக்க வென்று
தொடர்ந்து பிடிக்கவென்று சொல்லரிய மன்னரெல்லாம்
கூடாரத் தானெடுத்து கொலுவிட்டுத் தானடந்தான்.
காடந்த குடிக்கோட்டை கடந்துமிகக் கொக்கரித்து
வாழை படர்ந்திருக்கும் வைகை நதிகடந்து
ஆற்றங்கரை தனிலே அடித்தானே கூடாரம்.
அந்தநாள் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்

மற்றும் போர் மற்றாநாள்சென்று மன்னன் புலிராமன் மடைபடை
அத்தியுத்தி கோட்டையிலே அவனிருப்ப தறியாமல்
பாம்பாற்றங் கரைதனிலே பாங்காய்ப் போயிறங்கி
கூடாரந் தாண்டித்தான் கோலாகல ராமன்படை.
அந்த விஷயமறிந்து சடைக்கனுந்தான்

கடவை மறித்து கலந்து போர்செய்தான்காண்.
பாதை மறித்து பாங்காகக் கொள்ளையிட்டான்
இருவர் படைமூண்டு எரித்துப் புடைத்தார்கள்.
அப்போது சடைக்கன் ஆர்ப்பரித்துக் கொக்கரித்து
நாடு கலக்கியெனும் நல்லதொரு வான்பரிமேல்
ஏறிச் சடைக்கன் எல்லையற்ற சேனைமுன்னே
ஊடுருவிச் சென்றான் உலகங்கிடுகிடென
வாளோடு வாள்முறிய மசப்போர் செய்தார்கள்.
மன்னன் புலிராமன் மட்டில்லாச் சேனைவெள்ளம்
வந்துவளைந்துகொண்டார் மதச்சடைக்கன் சேனையின்மேல்
கோலக்கொண்டையான் கூட்டப் புரவிகளும்
ஆயிரம் புரவி ஆர்ப்பரித்து தான்பொருதார்
பட்டாணி வாளெடுத்து பருந்துபோலே பறந்து
ஊடுழக்க வெட்டினான் உலகங் கிடுகிடென
தீரன் சடைக்கனையும் திரமாக வெட்டலுற்றார்

சடைக்கனுக்கு காயம்

காயமது பட்டுக் கலங்கியே சடைக்கனுந்தான்
என்மருகா வன்னி யினிவந்து கூடுமென்றான்
அப்போது வன்னி அவ்வசனந் தான்கேட்டு
புலியை நரிபாய்ந்து போகுமோ வென்றுசொல்லி
வீசைமுருக்கி விருதுகள் தான்பேசி
வெட்டின பட்டாணியை விருதுசொல்லி தான்பிளந்தான்
பெட்டியுமூடியுமாய் பிளந்தெரிந்தான் வன்னியுந்தான்.
இடசாரி வலசாரி எதிர்த்துப் பொருதலுற்றார்
முன்னூறு பட்டாணி முழுதுமங்கே தான்மடிந்தார்
ஐயாயிரம் பேர் அக்களத்தில் தான்மடிந்தார்
கூடாரங் கொள்ளையிட்டு குடல்பிடுங்கி மாலையிட்டு
பட்டப் படுகளத்தைப் பார்க்க பயந்தோடுவார்
'மால்விரண்டு கொடுக்கு வஞ்சனையாய் வெட்டுவனோ'
என்றுசொல்லி ராமன் படையேங்கி முகம்வாடி
ஒன்றோடு ஒன்று உருண்டு கிடப்பாரும்
கழுகு பறந்து காகம் விருந்துண்டிடவே
மன்னன் புலிராமன் படைமட்டிலா சேனைவெள்ளம்
தட்டழிந்து கெட்டு தருக்காம லோடிவிட்டார்
விதிவசமோவென்று வெறிகொண்டு ஓடலுற்றார்.
மாமனுடன் மச்சினன் தான்மாண்டு கிடப்பாரும்
செகன்னதம் போனாலும் சேரப் பிழைப்போமோ
என்று புலம்பி யேமாந்து போவாரும்
அன்றுமுறிந்து அடர்ந்தார்கள் பாளையத்தில்
மற்றுநாள் தானும் மதச்சடைக்கன் வன்னியுந்தான்

அம்மான் முகம்பார்த்து அழுதமுகம் கலங்கி
காயமது கட்டிகலங்கி முகம்பார்த்து

வன்னி பேச்சு

"கோடி திரவியங்கள் கொள்ளைகொண்டு போனாலும்
விருது சடைக்கனையும் வெட்டுவனே பட்டாணி
கோட்டை விலைபோனாலும் கொத்தவர்கள் மாண்டாலும்
ஆனை குதிரை அளவற்று மாண்டாலும்
உள்ளேயே முடிந்தாலும் உகாந்தமாய் போனாலும்
நன்னகிரி கொள்ளையிட்டு நாடழிந்து போனாலும்
விருது சடைக்கனுக்கு வேதனையுந் தான்வருமோ"
என்று புலம்பிவன்னி எழுந்திருந்து போகலுற்றார்
மற்றநாள் தானும் மதச்சடைக்கன் வன்னியுந்தான்
இராமநாத சுவாமி நல்லதுணை யென்றுசொல்லி

இராமேசுவரம் தீவடைதல்

அம்மானே நீருப்போது ஆனைபரி யேறுமென்றார்
அத்திக்கோட்டைவிட்டு ஆன பெருந்தளந்தான்
பாம்பாற்றங் கரைதனிலே பாங்குடனே வந்திறங்கி
சோங்கு மறுமாவும் சோடினையாய் விரித்து
படைத் தலைவரெல்லோரும் படகிலே ஏறுமென்றார்
தண்டிகை பல்லாக்கு சகலமும் ஏற்றலுற்றார்
ஆனை குதிரை அடங்கலும் ஏத்துமென்றார்
பொக்கிஷங்கள் கூடாரம் பொருந்தியே ஏத்துமென்றார்
எல்லோரையுமனுப்பி எதிரில்லா வன்னியுந்தான்
பெண்டுறைச்சியெனும் பெரியதொரு வான்பரியும்
நாடு கலக்கியெனும் நல்லதொரு வான்பரியும்
தோணியிலே தானேற தோணதில்லை வான்பரிதான்
என்ன செய்வோமென்று வன்னியேங்கி முகம்வாடி
நானேறும் வான்பரியை இராமனே ஏறுவான்காண்
கண்ணைப்பிடுங்கி காட்டிலே வோட்டுமென்றார்
அப்போது படைத்தலைவர் அருகேநின்று என்னசொல்வார்
கட்டியே வான்பரியை கப்பலிலே ஏத்துமென்றார்
கப்பலிலே ஏத்தி கரைசேர்த்தார் வான்பரியை
கப்பலிலே தானேறி கர்த்தச் சடைக்கனுந்தான்
இராமநாத சுவாமி நல்லதுணை என்றுசொல்லி
"உன்பாதம் நம்பிவந்தேன் உலகளந்த மாயவனே
மன்னன் புலிவன்னி மாதுக்கப்பட்டு நின்று
என்னசெய்வோ"மென்று வன்னி இருந்து கிலேசமுடன்
போனான் மறவனென்று பொருமி மிகச்சினந்து
எங்கேதான் போனாலும் இனிவிடப் போறோமோ
கடலேறி போனானென்று கனவிருது கூறினான்

வீரவாள் கைபிடித்து வீரியங்கள் பேசினனும்
என் வலுவுமவன் வலுவுமினியல்லோ பார்க்கவென்று
என்றுசொல்லி அவன் இருகண் மிகச்சிவக்க
அப்போது படைத்தலைவர் அருகேநின்று என்சொல்வார்
சேதுக்கரை வாளுந்தீரன் அரசிருப்பும்

இராமய்யன் அத்திபுத்திக் கோட்டையில்

அத்திபுத்திக் கோட்டை அவனிருந்து போனதல்லோ.
பள்ளியறை மாளிகையும் மெத்த உண்டாம்
படைத்தலைவர் திறந்திருக்கும் பண்ணகசாலை யுண்டாம்
என்று படைத்தலைவர் எல்லோனுந் தாமுரைத்தார்
அப்போது ராமய்யனும் அந்தவளங்கெட்டு
அத்தியுத்திக் கோட்டை அரண்மனையில் வந்திருந்தார்
இருந்தானே ராமய்யனும் இருபதுநாள ரமனையில்
கோலாகல ராமன் கொலுவி லிருக்கையிலே
மதுரைதனிலிருந்து வந்தானே ஓட்டனுந்தான்

இராயர் ஓலை வரல்

இராயரிட காயிதமும் நலமுடனே தானெழுதி
முகிலருடன் பாட்சா முப்பதினா யிரங்குதிரை
கணவாயை வந்துகட்டிக் கொண்டா ரென்றுசொல்லி
கோலக்கொண்ட யாம்குதிரை கூட்டப் பெருந்தளமும்
இராயரிட சீமையெல்லாம் நாலுதிக்குங் கொள்ளையிட்டு
விசையாபுரமும் வேலூருங் கொள்ளையிட்டு
கணவாய்க் கோட்டையெலாம் கட்டிக்கொண்டானென்று
இங்குவர பயணமா யிருக்கிரு னென்றுசொல்லி
இராயரிட காயிதமும் நமக்குவந்த தென்றுசொல்லி
மன்னன் புலிராமனையும் வரவழைக்க வேண்டுமென்று
கர்த்தனிட காயிதமும் கடுகியே தான் கொடுத்து
காயிதத்தைக் கொண்டு கடுகியே ஓடிவந்தான்.
மன்னன் புலிராமய்யனை வந்துகண்டான் ஓட்டனுந்தான்.
காயிதத்தைக் கொடுத்து கைகட்டி நிற்கலுற்றான்
வாசித்துப்பார்த்து மன்னன் புலிராமய்யனும்
துலுக்காண மொருபொருட்டாய் சொல்லி அனுப்பினரோ
துலுக்கர் படையெல்லாம் தூளிபடவே துரத்தி
குதிரை தளமெல்லாம் கொள்ளையிட வேணுமென்று [சொல்லி
மாப்பிள்ளை கொண்டைய்யன் மன்னன்தனை யழைத்து
வெங்கிட கிருஷ்ணய்யன் வீமன்தனை யழைத்து
மட்டூறு பாப்பய்யனே வாருமென்று தானழைத்து
பாளையக்காரர் பலபேரை தானழைத்து
எல்லோரையு மழைத்து இதமாகப் புத்திசொல்லி

இன்று முதலோடே யிங்கே வருவானென்று
ஆற்றங்கரையும் ஆன துறைமுகமும்
புகழ் பெரிய போகலூர் கோட்டைப் பதனமென்று

இராமய்யன் மதுரை செல்லல்

என்று சொல்லி இராமய்யனும் ஏறினான் தண்டிகைமேல்
மன்னர் படைசூழ மந்திரிமார் சூழ்ந்துவர
ஆனைகுதிரை ஆர்ப்பரித்து முன்னடக்க
பேரிகை டம்மாரம் பிறகே முழங்கிவர
வெண்சாமரம் வீச விருது பலமுழங்க
கட்டியக்காரர் கனவிருது கூறிவர
கவிவாணர் கொண்டாட காரியப்பேர் முன்னடக்க
பதினெட்டு மேளவகை பண்பாக முழங்கிவர
ஆனைமேல் பேரிகை அதிர்ந்து முழங்கிவர
வந்தே யிறங்கினார் மானு மதுரையிலே.
கங்குல் விடிந்து கதிரோ னெழுந்தபின்பு
தேவர்கள் போற்றி செய்யுந் திருப்பூவணங் கடந்து
மதுரை தெரு வீதியிலே வந்தார்காண் ராமயனும்
அந்நேரந்தனில் அரமனையில் வந்திருந்து
மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்

நாய்க்கரைக் காணல்

மன்னன் திருமலேந்திரனை வந்துகண்டு சந்தித்து
"ஆண்டவனே யிப்போது அழைத்த பணிவிடை" யென,
"என்வார்த்தைதனை யினிக்கேளும் ராமாநீ
கோலக் கொண்டையானும் குதிரை பெருந்தளமும்
கணவாயின் கோட்டையெலாம் கட்டிக்கொண்டாரென்று [சொல்லி
விசையாபுரமும் வேலூருங் கொள்ளையிட்டு
யிங்குவர பயணமாயிருக்கிறா னென்றுசொல்லி
இயாதாத்து நமக்கெழுதி வந்துதுகாண்
அதுகண்டு நாமள் படித்தோம் ராமய்யனே"
"இதுவோ சிலபாரமென்று யெண்ணி யுரைப்பார்கள்
குதிரை தளமெல்லாம் கொள்ளையிட்டு வாரேனையா
வெட்டித்துரத்தி விருதுகளுந் தான்பறித்து
கணவாயின் கோட்டையெலாம் கலங்கவே தானடித்து
ஆறுகடக்க அலைகுலையத்தான் துரத்தி
வெட்டித்துரத்தி வேலூரைக் கைப்பிடித்து
ஆயிரம் குதிரை அன்பாகத் தான்சேர்த்து
வாரேனைய்யா" யென்றுசொல்லினான் மன்னன் புலி [ராமய்யனும்.
மன்னன் திருமலை யேந்திரன் மனமகிழ்ந்து கொண்டாடி
கன்னன் புலிராமய்யனும் கைகட்டி வாய்புதைத்து

"போய்வாரேனைய்யா பொருந்தி விடைதாரு" மென்றான்.
நின்றனுப்பிக்கொண்டு நீதியுடன் கையேந்தி
"போய் வாராய் ராம" வென்று பொருந்தி விடை
[கொடுத்தார்.
நடந்தான் புலிராமன் நல்லமுத்து மாலைகொஞ்ச
துவரிமான் தன்னில் வந்தான் துங்கமுடி ராமய்யனும்.

இராமய்யன் வடக்கு செல்லல்

மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
வடமதுரை தன்னில் வளமுடன் சென்றிறங்கி
திண்டுக்கல்லும் கடந்து தேக்கமலை தன்னில்வந்து
மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
மணப்பாரை தன்னில் மன்னவனும் சென்றிறங்கி
காட்டு மலைவழியாய் கடந்தார்களெல்லோரும்.
திருச்சிறைப்பள்ளி கடந்து சீரங்கம் தன்னில் வந்து
மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
சமயபுரம் கண்ணனூர் தன்னிலே வந்திரங்கி
ஊட்டத்தூர் தன்னிலொரு நொடியில் போயிறங்கி
மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
வாலிகண்டபுரத்தில் வந்திருந்தா ரெல்லோரும்.
கங்குல் விடிந்து கதிரோ னெழுந்தபின்பு
ஆயினையான் வீரதிவக்கும் ஆரணியுந்தான் கடங்கி
வெங்களூர் தன்னில் விரையவே சென்றிறங்கி
கங்குல் விடிந்து கதிரோனெழுந்தற்பின்

இராயரைக் காணல்

இராயனுட சமூகந்தனை நன்றாக வந்து கண்டு
"ஆண்டவனே யிப்போ அழைத்த பணிவிடை" யென
ராமப்பயனுரைக் கேட்டு ராயருந்தானேது சொல்வார்
"துலுக்கர் பெரும்படைதான் தொலையாத வான் பரியும்
கணவாய் வழியில் வந்து கடல்போல் வந்ததுகாண்
சீமையழித்துத் தீக்கொழுத்தி விட்டார் காண்.
அதுகண்டு நாமும் அழைப்பித்தோம் ராமய்யனே"
மன்ன னுரைத்ததெலாம் மனமகிழ்ந்து கேட்டு நின்று
"ஆண்டவனே யிப்போதடியேன் சொல்விண்ணப்பங்கேள்
துலுக்கா படையை மேய்ப்பாய் சொன்னீரே ஆண்டவனே
இதுவோ சிலபார"மென்று யெழுந்திருந்தான் ராமய்யனும்
குதிரை தளத்தைவென்று குஞ்சரமுங் கொள்ளைகொண்டு
வெட்டி விரட்டி விருதுகளுந் தான்பறித்து
வெற்றிகொண்டு வாரேனென்று விண்ணப்பஞ் சொல்ல
[லுற்றான்.
அடைக்காயும் வெற்றிலையும் அன்பாகத் தான்கொடுத்து
வெற்றிகொண்டு வாவென்று விருதுகளுந்தான் கொடுத்து

போய்வாருமென்று பொருந்தி மனமகிழ்ந்தார்.
நடந்தான் புலிராமன் நல்லபெருஞ் சேனையுடன்
வெங்களூர் தன்னிலே விடுதியாய் வந்திருந்தார்.
மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
இக்கரை வெங்கிடகிஷ்டனுக்கு எழுதினார் ஓலைதன்னை
ஓலைதனை வாங்கி ஓடினான் ஓட்டனுந்தான்
ஓலைதனைக்கொடுத்து ஒதுங்கிநின்றான் ஓட்டனுந்தான்.
வாசித்துப்பார்த்து மனமகிழ்ந்து கொண்டாட
மன்னன் புலிராமய்யனை வந்துகண்டே யந்நேரம்
துலுக்கர் பெரும்படையும் தோறாத வான்படையும்
கணவாயை வந்து கட்டிக்கொண்டா ரென்றுசொல்லி
இராயரதற்கு நமக்கோலை வர விடுத்தார்
துலுக்கர் பெரும்படையை தூளிபடவே துரத்தி
ஆறு கடக்க அலைகுலையத் தான்துரத்தி
யிக்கரை வெங்கிடகிருஷ்ணய்யா எழுந்திரு வென்று [சொல்லி
யெல்லாரும் போய் எதிர்த்துப் போர்செய்தார்கள்.
இக்கரை வெங்கடகிஷ்ணய்யன் எதிர்த்துத் துரத்திவிட்டான்
மன்னன் புலிராமன் மசப்போர் செய்யலுற்றான்.

போர் மன்னன் புலிராமன் மட்டில்லாச் சேனையுந்தான்
துலுக்கர் பெரும்படையைச் சூறையிட்டுத்தான்விரட்டி
ஆறு கடக்க அலைகுலையத் தான்துறத்தி
வெட்டி விருதறுத்தான் வேந்தன் புலிராமய்யனும்
வெற்றிகொண்டு ராமய்யனும் வீரியங்கள் பேசிவந்தான்.
ஆயிரம் குதிரை அன்பாகத்தான் மடிந்து
ஆறுறு குஞ்சரமும் ஐம்பது ஒட்டகமும்
ஆயிரங்குதிரையும் அன்பாகத்தான் சேர்த்து
பிடித்து அனுப்பினார் போர்வீரன் ராமய்யனும்.

வெற்றி வெங்கிட கிஷ்ணய்யனே வீமனே வாருமென்று
கணவாய் பதனமென்று கன்னன் புலிராமய்யனும்
தான்வைத்த தனதான்யம் தன்னுரிமை முற்றும்
வேண்டும் வரிசைகளும் வெற்றிகொண்ட குஞ்சரமும்
வெற்றிகொண்டாரவனுக்கு வெகு வரிசைதான் கொடுத்து
இராயரிட சமூகத்தில் நன்மையுடன் வந்துகண்டான்.
வந்துகண்ட ராமய்யனை மார்போடே தானணைத்து
வெற்றிகொண்ட ராமய்யனுக்கு வெகுவரிசை பண்ணுவித்து
பூஷணங்க ளுள்ளதெல்லாம் பூட்டி யலங்கரித்து
"என்னருகே ராமய்யனே யிரு" மென்று தானுரைத்தார்.

அவ்வார்த்தை கேட்டு அன்புடனே ராமய்யனும்
" கச்சித்திருமலை யேந்திரனை காணுமல் நானிருந்தால்
கண்கள் புகையாகு மைய்யா கர்த்தனே"யென்றுரைத்தான்
" எங்கே யிருந்தாலும் எப்போதும் நான் வருவேன்
வந்துதவி பண்ணுவிப்பேன் மன்னவர்கள் மெச்சிடவே"
வருஷ மொருதரந்தான் வந்து போமென்றுரைத்தார்.
மனமகிழ்ந்து ராயரையும் மன்னன் புலிராமய்யனும்
நின்றனுப்பிக்கொண்டு நீதியுடன் கைதொழுது
நடந்தான் புலிராமன் நல்லபெருஞ் சேனையுடன்.

பரிசுடன் திரும்புதல்

ஆயிரம் வான்பரியும் அறுபது குஞ்சரமும்
எண்பது ஒட்டகமும் எதிரில்லாச் சேனைகளும்
அய்யனிட பாளையத்தில் அதிவிரைவாய் வந்ததுகாண்.
வெங்களூர் தன்னில் விடுதியாய் வந்திறங்கி
மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
வேலூர் விட்டு விசையாபுரத்தில் வந்து
ஆனைகுந்தி தான்கடந்து அதிவீர ராமய்யனும்
ஊட்டத்தூர் தன்னில் ஒருநொடியில் வந்தான்காண்.
மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
வாலிகொண்டாபுரத்தில் வந்தே யிறங்கலுற்றான்.
மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
தென்னவர்கள் கொண்டாடும் சீரங்கம்தனில் வந்தான்.
சீரங்கத்தவருக்கு சிறப்பு மிக கொடுத்தான்.
மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
திருச்சினப்பள்ளித் தெருவில் வருகையிலே
இவருந்தானவென்று இயல்பான பெண்களெல்லாம்
மன்மதன்காண் என்பாரும் மதிச்சந்திரன்காணென்பாரும்
இராஜனிவ னென்பாரும் இராமய்யன் காணென்பாரும்
துலுக்கர் துரைமக்களைத்தான் துரத்திவந்த சேவகன்காண்.
மையலான பெண்களெல்லாம் மதிலெட்டிப் பார்ப்பாரும்
இப்படியே பார்த்துநின்றார் ஏந்திழைமா ரெல்லோரும்.
மற்றுநாள்தானு மதிவீர ராமய்யனும்
மணப்பாறைதன்னில் வந்தே யிறங்கினன்காண்.
கங்குல் விடிந்து கதிரோனும் வந்தபின்பு
தேக்கமலை கடந்து திண்டுக்கல் தான்கடந்து
சோழவந்தான் தன்னில் சூழ்ந்தடித்தான் கூடாரம்
கங்குல் விடிந்து கதிரோனுதித்த பின்பு
தோகைமலைதன்னில் வந்தார் துங்கமுடி ராமைய்யனும்
பிள்ளைப் பாளையத்தில் போயே யிறங்கினன்காண்

நாயக்கரைக் காணல்

வேந்தன் புலிராமய்யனும் வெற்றிகொண்டு வந்தேனென்று
மன்னன் திருமலேந்திரன் மனமகிழ்ந்து கொண்டாடிக்
கானபுலி ராமயற்கு கலைதானஞ் சொரிய
வயித்திஅய்யன் தன்னை வரவழைக்கச் சொன்னான்காண்.
இப்போதே இராமய்யனை யிங்கேவர அழையுமென்றான்
சொன்ன உடனே தோற்றமுள்ள வயித்திஅய்யன்
மன்னவரும் மந்திரியும் வாய்த்த வயித்தி அய்யன்
அந்நேரந்தன்னில் அதி வீரமாய் நடந்து
வந்து கண்டு இராமய்யனை வாகாய் மிகத்தழுவி
கர்த்தனென்னு மிராசன் கச்சித் திருமலேந்திரன்
கனகந்தான் சொரியக் கடுக அழைக்கச்சொன்னார்.
சொன்ன உடனே தோற்றமுள்ள ராமய்யனும்
"என்ன வெற்றிகண்டேன் எனக்கு கனகஞ்சொரிய
சேதுமறவனைத்தான் சென்று பிடித்து வந்தால்
கனகமுடனே அப்போது கருதலாம் தானமெலாம்"

மீண்டும் சேது நாடு செல்லல்

என்று சொல்லி இராமய்யனு மெழுந்திருந்து [போகலுற்றான்.
குஞ்சரமும் வான்பரியும் கோவேறி முன்னடக்க
செந்தூள் மிகப்பறக்க செங்கதிரோன் தான்மறைய
தேவர்கள் போற்றி செய்யும் திருப்பூவணத்தில் வந்தான்.
கங்குல் விடிந்து கதிரோனெழுந்த பின்பு
வாய்த்த மடம் பார்த்தார் வந்து கண்டே அந்நேரம்.
"ஆண்டவனே யிப்போது அடியேம்சொல் விண்ணப்பம் [கேள்
கள்ளர் உபத்திரமும் காவலனே யாற்றாமல்
மாடுகன்று ஆடு வாய்த்த பணங்காசு முதல்
சீலை துணி மங்கிலியம் சேரப் பறிகொடுத்தோம்"
என்று சொன்னபோது இருகண் மிகச்சிவந்து
(மற்றஞ்சிறு) குடியில் மன்னவனுஞ் சென்றிரங்கி
நாடழித்து தீக்கொழுத்தி நன்னகர் பாழாக்கி
வெட்டிச்சிறை பிடித்து விரட்டியே தான்துரத்தி
இப்படியே அய்யன் அன்பாய் அழிக்கையிலே,
மற்றஞ் சிறுகுடியார் மதுரையிலே போயிருந்து
கர்த்தனெனு மிராசன் கச்சித் திருமலேந்திரற்கு
அய்யன் நடத்தினதை அன்பாய் கேட்கலுற்றார்
அவர் கருத்தைக் கேட்டு அன்பாய் திருமலேந்திரன்
'கள்ளர் வண்டார் மக்களையும் கருவறுக்கவே அடங்கான்
கள்ளர் பத்து நாடென்று கனமாய் இருக்கட்டுங்காண்'
என்று சொல்லி ராமய்யற்கு யெழுதிவிட்டார் ஓலைதனை.
வாசித்துப்பார்த்து மன்னன் புலிராமய்யனும்

சிறுகுடி விட்டகன்றான் தீரன் புலிராமய்யனும்.
அந்நேரந்தன்னில் அலைகதிரோன் போய்மறைந்தான்
கங்குல் விடிந்து கதிரோ னெழுந்தபின்பு
தேவர்கள் போற்றி செய்யும் திருப்பூவணத்தில் வந்தான்.
மற்றுநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
இராஜன் போருமை எசவழிதான் கடந்து
கிளியோ வளமாடும் கிருங்காதான் கடந்து
வானவீர மதுரைதன்னில் வந்திறங்கி

போகலூர் முற்றுகை

மற்றுநாள் தானும் மதி போசன் ராமய்யனும்
'போகலூர் கோட்டை வளைந்திருக்கு மன்னவனை
செஞ்சித்திருமலை ஸ்ரீரங்கங் கோட்டையல்ல
மண் கோட்டைதன்னை வளைந்திருக்குஞ் சேவகரே
இத்தனைநாளிக் கோட்டை வாங்காதிருப்பானே
நாளைப் பகல் நாலு நாழிகைக்குள்ளாக
கோட்டைதனை வாங்காட்டால் கொன்றிடுவே னுங்களையும்
வைகைக் கரைதீரம் வாகாய்க் கழுவில் வைப்பேன்'
என்று சொல்லி ஓலையெழுதிவிட்டார் ராணுவத்திற்கு.
வாசித்துப்பார்த்து வயிறெரிந்து மன்னவர்கள்
அங்கேபோய் சாகிறது இங்கே மடிவோமென்று
நாலுதிக்கும் ஏணிவைத்து ராணுவத்தா ரெல்லோரும்
கோட்டையும் கொத்தளமும் கோம்பையு மிடித்தார்கள்.
குஞ்சரத்தை விட்டு கோட்டைத் தகர்த்திட்டு
கோட்டைதனைப் பிடித்தார் கொடுங்கோபங் கொண்
[டெழுந்து.
கோட்டைக்குள்ளிருந்து குறும்படித்த மறவனுந்தான்
வெட்டி விரட்டி வென்று வீரியங்கள் தான்பேசி
குமார னழகனும் கூட்டப் பெரும் படையும்
குத்தி விரட்டி கொலவையிட்டு உள்ளியத்தார்
மன்னன் புலிராமன் படை மட்டில்லாச் சேனைவெள்ளம்
குமாரனழகனையும் கூட்டப்படை யத்தனையும்
கைப்பிடியாய்த் தான்பிடித்து கட்டி இறுக்கலுற்றார்.
வெற்றி கொண்டு அய்யன் படை வீரியங்கள் தான்பேசி
மதியனழகனையும் மன்னன் குமாரனையும்

குமாரன் அழகன் பிடிபடல்

கொண்டுவந்து விட்டார்கள் கோலாகல ராமன்முன்னே.
பெண்ணைச்சிறை பிடித்து ஆணை அறிந்துவெட்டி
ஐந்நூறு பெண்சிறையும் அந்நேரங் கூட்டிவந்தார்.
மெய்க்காவலாக விடுதி விட்டு வைக்கச்சொன்னார்.
குமாரனழகனையும் கூப்பிட்டு முன்னே விட்டு
'என்னோடே நீயும் எதிர்த்துப் போர் செய்வாயாடா'

என்று சொல்லி அய்யன் இருகண்ணும் நெருப்பென்ன
காமுட்டி சாத்தனைக் கடுக அழைக்கச்சொன்னான்
கட்டி அடித்தார்கள் கனகோபங் கொண்டெழுந்து.
தச்சனை அழைக்கச்சொன்னான் தார்வேந்தன் ராமய்யனும்
கூட்டிவந்து விட்டார்கள் கோலாகலன் கொலுவில்.

தண்டனை மதியானழகனையும் மன்னன் குமாரனையும்
குப்புரவேதான்கிடத்தி கூறி மன்னர் பார்த்து இறுக்கி
முதுகு தோல்தன்னை முரமுரவே செதுக்கச்சொன்னான்.
அந்தப்படியே ஆனதொரு ஆசாரி
தோலையறுத்தான் துடித்து துடித்து விழ
செதுக்கினான் ஆசாரி தியங்கியங்கேதான் விழுந்தான்.
(மதியாரழகனையும் மன்னன் குமாரனையும்
கூட்டி வரச்சொன்னான் கோலா கலராமன்
கூட்டி வந்துவிட்டார்கள் கோலாகலன் கொலுவில்
முட்டுமுட்டாக முழுயெலும்பை வாங்கச் சொன்னான்
அந்தப்படியே ஆனதொரு ஆசாரி
முட்டுமுட்டாக முழுயெலும்பை தான் தரித்தான்)
தரிச்ச உடலையெல்லாந் தான்வாரிக் கூடையிலே
மதியா னழகன்றேவி மன்னன் குமாரன்தேவி
கூட்டி வரச்சொன்னான் கோலாகல ராமய்யனும்.
கூட்டி வந்து விட்டார்கள் கோலாகலன் கொலுவில்.
இருவர் தலையிலேயும் எடுத்துவை என்றான் கூடைதனை
பாளையத்தைச் சுற்றி பறையடித்து வரச்சொன்னான்காண்.
படைத்தலைவரை பார்த்து பாருமென் றானேவீரன்
மதியாரழகன் மனையாட்டி தன்னையுந்தான்
குமாரனழகனுடைய தேவியைக் கூட்டிவந்து

பெண் வீரம் சட்டைக்காரரை விட்டு கையை பிடிக்கச்சொன்னான்.
மறவன் பிடிப்பானோ வென்றுபார்த்தந்த மென்கொடியாள்
விடுத்தாளவளுயிரை விண்ணுலகம் போய்ச் சேர்ந்தாள்.
மன்னன் புலிராமய்யற்கு வந்துசொன்ன னந்நேரம்
அவ்வார்த்தை கேட்டு அய்யனுந்தான் அப்போது
வாய்த்ததொரு பெண்கொடியை மனமகிழ்ந்து கொண்டாடி
பச்சை வடங்கொடுத்து பாங்குடனே அடக்கச்சொன்னான்.
அந்தப்படியே ஆனதொரு பெண்கொடியை
யெடுத்தடுக்கச் சொன்னார்கள் எல்லோரும் கொண்டாட.
அந்நேரந்தன்னில் அலைகதிரோன் போய்மறைந்தான்.

இராமய்யன் சினம் ஆழி நெடுந்தேரேறி அலைகதிரோன் வந்து குதித்தான்.
போனான் மறவனென்று பொருமி மிகச்சினந்து
'எங்கேதான் போனாலும் இனி விடப்போறேனோ

கடல் கடந்து போனாலும் கடலைத் துளைப்பே'னென்றான்
மன்னன் புலிராமன் மதம் பொழிந்து கொக்கரித்து
கடல் கடந்து தீவுதனில் காணாமல் போனானென்று
ஆற்றங்கரை கோட்டைக்கு அருகே கடுகிவந்து
கூடாரந்தானடித்தார் கொற்றவர்க ளெல்லோரும்.
இன்று மறவன் ஏகாந்தமாயிருந்தான்.
அன்னேரந்தன்னிலலே கதிரவன் போய் மறைந்தான்.

முன் செல்லல்

கங்குல் விடிந்து கதிரோ னெழுந்தபின்பு
கூடாரந்தான் பிடுங்கி கொற்றவர்களெல்லோரும்
வேதாளந்தன்னில் வந்து விரைந்தடித்தார் கூடாரம்.
மன்னன் புலிராமய்யனும் வாகாய்க் கொலுவிருந்தான்.
மற்றநாள் தானும் மன்னன் புலிராமய்யனும்
பாம்பாற்றங் கரைதனிலே பார்வேந்தன் ராமய்யனும்
வந்தே யிறங்கினான் மன்னன் படையத்தனையும்
அந்நேரந்தன்னில் அதிவீர ராமய்யனும்
ஓடத்துறை தோணித்துறை உகந்தே கெடித்தலங்காண்
பாம்பன்துறைக் கோட்டை பார்த்துப் புலிராமய்யனும்
இந்தயிலங் கண்டல்லவோ எதிர்த்தான் மறவனுந்தான்

அணை கட்ட ஆணையிடல்

வாய்த்த துறைமுகத்தில் வந்துநின்று ராமய்யனும்
அயோத்தி ராமர் அடைத்த திருவணைதான்
ஏதடாவென்றான் எல்லோருங் கெடிகலங்கி
இந்தத் திருவணைதான் என்றார்க ளெல்லோரும்.
செப்பமா யெல்லோரும் சேரயிங்கே வாருமென்ன
இராசாதி ராசரெல்லாம் நியாயமுடன் வந்தார்கள்.
பாளையக்காரர்கள் பைந்தலைவரே கேளும்
திருவணையை தானடைக்க தீரன் புலிராமய்யனும்
நல்லதிரு வணையை நாமடைக்க வேணுமென்று
நாள்நட்சத்திரம் நன்றாகத் தான்பார்த்து
தேங்காயுடைத்தார்கள் தென்னவர்கள் மன்னர் முன்னே.
கல்லெடுங் கோவென்ன கரியமால் ராமய்யனும்
அரசன் மக்கள் ராசாக்கள் ஆனபடை மன்னரெல்லாம்
ராவுத்தர் பாடிநல்ல பெரும் படையும்
மல்லர்கள் பொந்தலியர் நல்லபெரும் படையும்
எல்லோருங்கூடி இருகை கொட்டித் தான்சிரித்து
எல்லையற்ற சேனைதளம் எல்லோருந் தான்கூடி

படைகள் தடை கூறல்

"மலைமுறிந்து வீழ்ந்தாலும் மண்ணிலுள்ளோர் வந்தாலும்
ஆக்க முடியுமோடா ஆழச் சமுத்திரத்தை.
காவேரியாறுமல்ல கை வாய்க்கால் தானுமல்ல

பூவேரி தானுமல்ல பொன்னீர் மடுவுமல்ல
ஆழச்சமுத்திரத்தை அடைக்க வென்றுதான் துலரிதல்
இந்நாட்டில் கண்டதில்லை யிவ்வுலகில் கேட்டதில்லை
பிழைத்த பிள்ளையெல்லாம் பிள்ளையாச்சோ மன்னவரே ''
பார்ப்பான்போய் கண்டார்காண் 'பார்வேந்தாமன்னவரே'
என்றுசொல்லி மன்னரெல்லாம் ஏங்கி முகம்வாடி
நின்றவிடமெல்லாம் நினைந்து நினைந்தேயுருகி
சென்றவிடமெல்லாம் சேர கிலேசப்பட்டு
என்று சலித்தார் எல்லோரும் வாய்வரண்டு.
நின்று மெள்ளப்பார்த்தான் நெடியமால் ராமய்யனும்.

இராமனே கல் சுமத்தல்

தார்கொண்ட ராமனப்போ தலைப்பாகையில் கல்லைவைத்து
சீர்கொண்டு தானடைந்தான் செங்கண்மால் ராமய்யனும்.
எல்லோரும் நின்றவர்க ளிதுபுதுமை யென்றுசொல்லி
அரசன் மக்களான அதிவீர ரெல்லோரும்
ராவுத்தர் பாடிநல்ல படைவீர ரெல்லோரும்
மல்லையர் பொந்திலியர் மன்னர்படை வீரரெல்லாம்
துலுக்கர் பரிவாரம் தோருத சேவகரும்
உபயதள ராணுவமெல்லாம் ஒருமிக்கச் சேகரமாய்
எல்லோருஞ் சேகரமாய் எல்லையற்ற மன்னரெல்லாம்
'இராமனே கல்சுமந்தால் நாமெடுக்க லாகாதோ'
என்றுசொல்லி மன்னரெல்லாரும் தான் கூடி
ஏலோலம் மிகப்பாடி எடுத்தார்கள் கல்லதனையும்.

ஏனையோர் கல் சுமத்தல்

ஆளுக் கொருகல்லு அக்கணமே தான் எடுத்தார்
தாளில் வணங்காத தார்வேந்தர் ராசாக்கள்
வேலுக்கு மொப்பாய் விசாரமிட்டு நின்றார்கள்.
அப்போது இராமய்யனும் அங்கவரை தான்பார்த்து
என்னுடைய பூணூலுக் குங்கள் நூல் ஏற்றமோதான்
அப்போது ராசாக்கள் அரிகரி என்றுசொல்லி
திருவணைக்குக் கல்லைத் திறமாகத் தானெடுத்தார்.
'இராசாக்கள் கல்சுமந்தால் நாமிருக்கலாகாது'
என்றுசொல்லி மன்னரெல்லோருங் கல்சுமந்தார்.
இராசாக்கள் கல்சுமந்து நடந்து வருகையிலே

வேசி சிரித்தது

வேசைமகளொருத்தி விதமாகத் தான்பார்த்து
'நீண்ட புகைசுருட்டும் நெற்றியிலே நாமமுமாய்
பூண்ட சரப்பணியும் பூணநூல் தலைப்பாகும்
உல்லாசவல்ல வெட்டு மொருகை சுருளுமெங்கே
பக்கசமூதாடுமெங்கே பாரித்த வாங்குமெங்கே
கவிக்கத்து கத்தி எங்கே கவிஞரே ராசாவே

கல்லேற்றி விட்டாளே கன்னன் புலிராமய்யனும்'
சொல்லிச் சிரித்தார்கள் துங்கமுடி தாசியர்கள்.
'வேசையர்கள் தான்சிரிக்க விட்டீரே' என்றுசொல்லி
அம்புபட்ட மான்போலே அவதி வந்ததென்றுசொல்லி
வெம்பி மனம்தளர்ந்து வேசித்துக் கண்சிவந்து
மன்னன் புலிராமய்யனை வந்து கண்டு ராசாக்கள்
'வேசை சிரிக்கவிட்டீரே மன்னவரே
கத்தியிலே பாய்வோ'மென்றார் கன்னன் புலிராசாக்கள்,
அவ்வார்த்தை கேட்டு அதிவீர ராமய்யனும்
இராசாக்க ளெல்லார்க்கும் நல்லவசனந் தானுரைத்து
அடைக்காயும் வெள்ளிலையும் அன்பாகத் தான்கொடுத்து
பச்சை வடம்கொடுத்தார் படைத்தலைவர் கொண்டாட.
பாளையத்திலுள்ள பல ஸ்தீரிய ரத்தனையும்
கூட்டிவரச் சொன்னார் கோலாகல ராமய்யனும்.

வேசையர் மண் சுமந்தது

எள்ளாயிரம் வேசை இயல்பாக கூட்டிவந்தார்
ஆளுக்கு ஏழுகல்லு அடைவாக எடுக்கச்சொன்னான்
ஏலேலோ பாடி எடுத்தார்கள் வேசியர்கள்.
ஒருத்தி கெடுத்தாளே உலகிலுள்ள மாதரெல்லாம்
என்றுசொல்லி வேசையர்களெல்லோரும் கிலேசமுடன்
வேசையர்களெல்லோரும் விடுதிவந்து சேர்ந்தார்கள்.
அப்போது செட்டிமகனவனை வழிமறித்து
சிங்கியடித்து சிரித்தான்காண் முன்னின்று
"பச்சை மஞ்சள் பூச்செங்கே பாங்கான வீச்சுமெங்கே
கடைவீதி தன்னில் கடுகி நடப்பீரே
கையில் வளைகளெல்லாம் மோதிரங்களெங்கே
வங்கணக்காருடன் வந்து பேசிச் சிரிப்பீரே
கொங்கைகள் குலுங்க கூடை மண்ணை தானெடுத்து
கோபுரக்கழு தைகள்போல் கொண்டுவந்து போடுவீரே
மாப்பிள்ளைமாரைக் கண்டால் வலுபேசி நிற்பீரே"
செட்டி சிரிக்க சிரிப்பாக குடம்பெடுத்தோம்
என்றுசொல்லி வேசைமக்கள் எல்லோரும் விடுதிவந்து
மற்றுநாள் தானும் மன்னன் புலி ராமய்யனும்
தாசியர்கள் எல்லோரும் தலைப்பட்டார் நீலியர்போல்
தாங்தோமென்று செட்டிக்காரி மிகஉமிழ்ந்தான்
வேசையர்கள் சொன்ன கனவிருது புகழ் அய்யனும்
பாளையத்திலுள்ள பலசரக்கு செட்டிமுதல்
கூட்டி வரச்சொன்னான் கோலாகல ராமய்யனும்
கூட்டி வந்துவிட்டார்கள் கோலாகலன் கொலுவில்.
செட்டிகளெண்ணாயிரம் சேரவே வந்தார்கள்.

மன்னன் புலிராமய்யனும் வணிகர் குலத்தாரே
தாசியர் கல்சுமந்தால் தான்சிரிக்கக் காரியமேன்.
திருமாலடைத்த திருவணையை தானடைக்க
ஆளுக்குப் பத்துக்கல்லு ஆடவர்க ளெடுங்கோளென்றான்

செட்டி மண் சுமந்தது

ஏலேலோ பாடியெடுத்தார்கள் செட்டியெல்லாம்
செட்டியர்கள் கல்சுமக்க சித்தாசை பயலொருவன்
சிங்கியடித்து சிரித்தான்காண் செட்டியரை
" பிச்சைக்கு வந்தாலும் பின்னேவா என்பீரே
அப்பிச்சி என்றாலும் அரைக்காசு மீயீரே
சிற்றப்பா வென்றாலும் செருப்பா லடிப்பீரே
சாகிறேனென்றாலும் சாப்பாடும் போடீரே
காசு கணக்கிட்ட தெல்லாம் கைமேல் பலித்துதென்று
பண்ணியபாவம் பலித்ததே செட்டியரே"
புத்திகெட்ட ஆணைசொல்லப் பூராவாய் செட்டியரும்
வெற்றியுள்ள ராமய்யன்முன் விழுந்தாரே செட்டியரும்
" மானங்கெட்டுப் போனோமே மன்னவனே அய்யாவே
நாவுதான்போமோ நாங்களெல்லாஞ் சாவோமோ
ஆசைடிப்பயல் சொன்னதெல்லாம் அரிக்குதே எங்களுக்கு
வேசையர்கள் சொன்னதெல்லாம் வேகுதே எங்களுக்கு
ஆண்டவனே இதனை அரைக்கணமும் தாங்கோ" மென்றார்
வணிகர் குலத்தாரே வாருங்கோ வென்றுசொல்லி
அடைக்காயும் வெள்ளிலையும் அன்பாகத்தான்கொடுத்தான்.
பாளையக்காரர் பலபேரை தானழைத்து
அயோத்திராமர் அடைந்த திருவணைக்கு
கல்சுமக்க வேண்டுமென்றார் கன்னன் புலிராமய்யனும்.
வானரங்கள் கூடி மலைபிடுங்கி வந்தாற்போல்
அன்றுமுதல் மன்னவரும் அரசர்மக்கள் தான்கூடி
கொண்டு வந்துகலக்கு மிந்தகுன்று மலைபோலே
பாளையத்திலுள்ள பரதேசி யத்தனையும்
கூட்டிவாவென்றார் கோலாகல ராமய்யனும்
கூட்டிவந்து விட்டார்கள் கோலாகலன் கொலுவில்
அயோத்திராமர் அடைத்த திருவணைகள்
கூடை மண்ணைவெட்டி கொட்டுங்கோ திருவணைக்கு

பரதேசிகள் மண் சுமந்தது

அந்தப்படியே அவர்களெல்லாம் மண்சுமந்தார்
திருவணையில் ராமய்யனும் தானாக வந்திருந்து
அயோத்திராமர் அடைந்த திருவணைமேல்
கல்லை எடுக்கச்சொன்னார் கரியமால் ராமய்யனும்

மீன்கள் குதித்தல்

கல்லைப் பரப்பி கனத்த திருவணைமேல்
வாளைக் குதிப்பார் வருக்கை திருக்கையுடன்
ஓளுமீன் வாளைமீன் உற்ற புகழ் நெய்தலையும்
ஓங்கு திமிதமுடன் உள்ளான் சுரு மீனும்
பிள்ளைகொல்லி நெயமீனும் பெறு குதிப்பு சாளையுடன்
சுரு மீன் பனை மீன் துலங்கு கடல் கறும்பை
மடவை சுரு மீனும் வங்கு நெத்துருவை
ஆனைமீன் குதிரைமீன் ஆனைமேல் தவ்வி விழ
சமுத்திர மீன் எல்லாம் தாசைக் குதித்துவிழ
வாளை குதிபாய மன்னவனும் பார்த்திருந்தான்.

அணை கட்டி முடித்தல்

திருவணையை தானடைத்தான் தீரன் புலி ராமய்யனும்
இலங்கை முழுதாண்ட இராவணன் காணென்பாரும்
சந்திரருஞ் சூரியருந் தானவரும் மெச்சிடவே
இந்திரன்போல் ராமய்யனும் ஏழுநாள் தானடைத்தான்.
அய்யன் கடலை அன்றே அடைக்கையிலே
பூலோகராமன் புகழ் சடைக்கனைப்பிடிக்க
திருவணை தானடைந்தான் தீரன் புலிராமய்யனும்.
சடைக்கன் மருகன் வன்னிதானிந்த சொல்கேட்டு
அயோத்தி ராமர் அடைத்த திருவணைமேல்
திறமாயடைத்து செலுத்துவனோ ராமனுந்தான்
பார்ப்பான் படைப்போரும் பாருலகில் நம்முடனே
இருவரிடப் போரும் இனி தெரியும் மன்னவனே
பெண்டுகளுச்சி யெனும் பெரியதொரு கப்பலைத்தான்
கொண்டுவரச் சொன்னான் கோட்டையிடி வன்னியன்
பார்ப்பானைப் பார்த்து பல் கடித்துப் பாஷை சொல்லி
தீரன் புலி வன்னி தீரமுடனே வந்து நின்று
இராமர் லக்ஷ்மணர் நல்ல பெருங்குழலை
கப்பலில் தானேற்றிக் கடுகியே கொண்டுவந்தான்

அணைப் போர்

திருவணையை தானமுக்கி சென்றே பொருதினார்காண்.
சுட்டார் குழல்கார் துங்கமுடி மன்னரையும்
எரிந்தார் எரிவாணம் எல்லையற்ற சேனையின்மேல்
வாணம் பிறப்பட்டு மயங்கி கடலில் விழ
உண்டைபட்டு சோர்ந்து உருண்டு கடலில் விழ
பட்டார்கள் ராமன் படை பாற்கடலிற் தானிறைந்தார்
காலற்று வீழ்வாரும் கையற்று வீழ்வாரும்
அய்யோ சிவனே என்று அலறி மிக மயங்கி
ஆனைவிட்டு சேனைவிட்டு ஆத்திரமோடே வரும்
வேசையர்கள் செட்டியர்கள் வெருண்டு வெருண்டோட

பாளையத்திலுள்ள படைத்தலைவ ரெல்லோரும்
வன்னியிட கோபங்கண்டு மயங்கி வரும்
பாளையங்களெல்லாம் பலதிக்கும் தானேடி
நிர்த்தூளியாக்கி நின்ருனே வன்னியுந்தான்.
அந்தநாள் சென்று அலைகதிரோன் போய் மறைந்தான்.

மறுநாள் ஆழி நெடுந்தேரேறி அலைகதிரோன் வந்துதித்தான்
மற்ருநாள் சென்றுமன்னன் புலிராமய்யனும்
மாப்பிள்ளைக் கொண்டப்பையன் வாருமென்று
[தானழைத்து
பாளையக்காரர் பலபேரை தானழைத்து
திருவணையில் சென்று சண்டைபறந்து போச்சுதென்று
தீவிலிருந்துகொண்டு சேரெயிறைக் கடித்தான்
எதிர்த்துப்போர் செய்தவனை யினிவிடப்போறேனே
வாய்மதங்கள் பேசி வன்னியே வெற்றிகொண்டான்
பாற்கடலினூடெ படைப்பொருத வந்தானே
அன்று அவன் வலுவு கண்டீரோ மன்னவரே
இன்றைக்கு என்வலுவு எல்லோரும் பாருமென்று
மாப்பிள்ளை கொண்டப்பய்யன் வாருமென்று தானழைத்து

பறங்கிகளுக்கு ஓலை ஈழத்து ராசாவுக்கு எழுதுமென்றே காகிதத்தை
சிங்களத்து பறங்கிகளை சேர அழையுமென்ருன்
கொழும்பு பறங்கிகளை கூட்டி யழையுமென்ருன்
மன்ஞர் பறங்கிகளை வாகா யழையுமென்ருன்
கக்ஷப் பறங்கிகளை கடுக அழையுமென்ருன்
தீவுப் பறங்கிகளைச் சேர அழையுமென்ருன்
கொச்சிப் பறங்கிகளைகூட அழையுமென்ருன்
இலங்கை பறங்கிகளை யிங்கு அழையுமென்ருன்
துலுக்காணத்துள்ள சோங்கு நறுமாவும்
தோணில் படகிலுள்ள சோங்கு பறங்கியெல்லாம்
எல்லா பறங்கிகளை இங்கே அழையுமென்ருன்
அந்தப்படிக்கு அனுப்பினன் காகிதம்
வாசித்துப் பார்த்து மனமகிழ்ந்து கொண்டாடி
எல்லோரும் வந்து இறங்கிஞர் பாளையத்தில்.
சோங்கு மருமாவும் சொருடனே பாளையமும்
கப்பலுஞ் சோங்குங் கடுகியே பாய்விரித்தார்கள்.
அட்டசமுத்திரத்தில் அலைகடலில் கப்பல்விட்டு
இராமனதை சுவாமி நல்லபெருந் தீவை
வந்து வளைந்து மலங்கப்போர் செய்தார்கள்.
தீவுப் பறங்கிகளும் சென்றே வளைத்தார்கள்
நாலுதிக்குங் கப்பல்விட்டு நாடிச்சமர் பொருதார்கள்.

பறங்கியர் தானபதி பாங்குடனே அப்போது
மன்னன் புலிராமனையும் வந்துகண்டா ரந்நேரம்
அப்போது ராமய்யன் அன்பாய் மனமகிழ்ந்து
பறங்கியர்கள் தானபதி தனக்கு பச்சைவடந்
[தான்கொடுத்தான்

பறங்கிகளுக்கு பரிசு வாக்களிப்பு

ஆண்டவனே இப்போது அடியேன் சொல்விண்ணப்கேள்
வாள்சேோட்டை ராயன் மதச்சடைக்கன் கெட்டியென்றால்
எங்களிட கப்பலென்றால் இந்தவழி போகவொட்டான்
தீவுப்பறங்கியர்கள் சேரநடுங் குவர்காண்
கப்பமுங்கட்டி கைதொழுது நிற்பார்கள்
இடுக்கப்பட்டு நாங்கள் இருந்தோம் பெருந்தீவில்
எங்கள் இடுக்கம் யினித்தீரும் ஆண்டவனே
என்றுசொல்லி அப்போது எதிரில்லா ராமய்யனும்
தீவிலொளிந்திருக்கும் தீரன் சடைக்கனைத்தான்
சென்று பிடித்து வந்தால் தீவுதனை யுங்களுக்கு
அறுதியாய்த் தந்து ஆதரித்து கொள்வோமென்றான்
பறங்கிகள் தானபதிக்கு பாங்குடனே வெகுமதியும்
பாக்கு மிளகு பல சம்பாரங் கொடுத்து
வரிசை மிகக்கொடுத்தான் வாய்த்த பறங்கியற்கு
பறங்கி தானபதியும் பாங்குடனே தீவில் சொன்னான்
மன்னன் புலிராமன் வாகா யுரைத்ததெல்லாம்
பறங்கியற்கு சொன்னபின்பு பாங்காய் மனமகிழ்ந்து
அந்தக்கணமே அதிவேகத்துடன் வந்து
கப்பலு சோங்கு கடுகவே பாய்விரித்து
அட்ட சமுத்திரத்தில் அலைகடலில் கப்பல் விட்டு
ஏழு சமுத்திரத்தில் இடமறவே பாய்விரித்து
பறங்கிகளெல்லோரும் பாசை சொல்லி பல்கடித்து
இராமனுதை சுவாமி நல்ல பெருந்தீவை
வந்து வளைத்துக்கொண்டார் வாய்த்த பறங்கியர்கள்

பறங்கியர் போர்

சடைக்கன் மருகன் வன்னிதானிந்த சேதிகேட்டு
பார்ப்பான் சொல்கேட்டுப் பறங்கி படையெடுத்து
வந்தானே பறங்கியென்று வாது சொல்லி பல்கடித்து
பறங்கியும் பார்ப்பானும் பாரமோவென்று சொல்லி
வீரியங்கள் பேசி வன்னி வீரவாள் கைப்பிடித்து
என் வலுவு முன் வலுவுமினி அறியவேணுமென்று
ஏறியே கப்பல் எல்லையற்ற படையையெல்லாம்
குப்புரவே தள்ளி குடலைப் பிடுங்காட்டால்
என்பேரோ வன்னி எடுத்ததும் ஆயுதமோ
மதச்சடைக்கன் தான் வளர்த்த வன்னிக்கு வந்தெதிரே

நாடுகலக்கி என்று நல்லதொரு கப்பலையும்
வன்னி போருக்கு வருதல் கொண்டுவரச் சொன்னான் கோடையிடி வன்னியுந்தான்
இராமலக்ஷ்மணரென்ற பெருங்குழலை
கப்பலிலே தானேற்றி கடுகியே பாய்விரித்து

கப்பற் போர் அஞ்சுபடகும் அடவாகப் பாய் விரித்து
ஏறினான் கப்பலிலே எதுரது விரட்டவென்று
தீவுப்பறங்கிகள்மேல் சினந்தே மிகப்பொருதான்.
கொழும்பு பறங்கிகளை குப்புறவே தான்கவிழ்த்து
மன்னார் பறங்கிகளை மருண்டோட தான்விரட்டி
கக்ஷப் பறங்கிகளை கலங்கவே தான்விரட்டி
ஆறு படகும் அடகுடனே தான்பிடித்தான்.
படகிலிருந்த பறங்கிகளை தான்பிடித்து
துலுக்காணத்து சோங்கு மறுமாவும்
எதிர்த்துவரும் பறங்கியர்கள் எல்லாரும் போயொளிந்தார்.
வன்னியிட பேரைக் கண்டு மன்னரெல்லாங் கொண்டாடி
வன்னியிட அதட்டு மானங்குமுறுதுபோல்
தட்டழிந்து கெட்டு தலைகெட்டு போராடினோர்கள்
கண்ணுக்கு எட்டாமல் கருங்கடலி லோடினர்காண்.

வன்னி வெற்றி வெற்றிகொண்டு வன்னி வீரியங்கள் பேசிவந்தான்
தெத்து பதனமென்று திரும்பினான் வன்னியுந்தான்
மன்னன் புலிவன்னி மறவனையும் வந்து கண்டு
வெட்டிக் குறையிட்டு வந்தேனே ஆண்டவனே
ஆறு படத்தை அடவுடனே தான்விரித்து
படகிலிருந்த பறங்கிகளைக் கொன்றுழக்கப்
பறங்கிகள் கூட்டமெல்லாம் பார்க்கடலில் போய்விழுந்தார்.
வன்னியுரைக்க மதச்சடைக்கன் மனமகிழ்ந்து
பூரித் திருபுயமும் போய் முருக்கி விட்டாற்போல்
திட்டிக் கிடாய் வெட்டி தீரன் புலி வன்னியற்கு.
மூன்னூறு ஆலத்தி முறைமுறையாய்த் தானெடுத்தார்
"என்மருகா வன்னியரே இந்த வெற்றி போதாதோ
இராமனாதசுவாமி நமக்குத் துணையிருக்க
பார்ப்பான் ஒருபொருட்டோ பார்வேந்த மன்னவரே"
அந்த நாள் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்

மறு நாள் போர் கங்குல் விடிந்து கதிரோ னெழுந்தபின்பு
முறிந்த பறங்கியெல்லாம் மூர்க்கமாய் தானோடி
பால்கடற் குள்ளே பறங்கியெல்லாந்தான் கூடி
துலுக்காணத்துச் சோங்கு மறுமாவும்
கண்டப் பறங்கியெவ்லாங் கனகோபங் கொண்டெழுந்து

கொழும்புப் பறங்கியெல்லாம் கோபித்து கண்சிவந்து
சிங்கணத்துப் பறங்கியெல்லாஞ் சினந்து மிகவெழுந்து
தூத்துக்குடி பறங்கி சொன்னகாரப்பட்டணமும்
இறுக்கு பறங்கியர்கள் எல்லோருந்தான் கூடி
இராமனுதசுவாமி நல்ல பெருந்தீவை
வந்து வளைத்தார்கள் வாய்த்த பறங்கியெல்லாம்
தெத்திலே அய்யன் படை சினந்து போர்செய்தார்கள்
படகில் பறங்கியெல்லாம் பறந்து போர்செய்தார்கள்
வந்து திரை கொள்ள வென்றுவந்தார் பறங்கியெல்லாம்
தீவை வளைத்துக்கொண்டு திறமாகப் பொருதினர்காண்
மறவர் படையெல்லாம் மகூப்பொருதார்கள்
தேக்கிலையில் நீரதுபோல் தியங்கி மறவரெல்லாம்
நின்று மயங்கி நெடுமூச்சுக் கொண்டார்கள்
வலையிலகப்பட்ட மானதுபோல் தொன்மறவர்
என்ன செய்வோமென்று யெதிர்க்கத் திறமில்லாமல்
அந்த விதனமறிந்து சடைக்கனுந்தான்
"என் மருகா வன்னியரே யினிவந்து கூடு" மென்றார்
"ஆண்டவனே யிப்போது அடியேனையுந்தான்
பார்ப்பானும் பறங்கியும் பாரமோ யெந்தனுக்கு
எண்ணிலங்கைதனை அனுமாரழித்தாற்போல்
வென்று பறங்கியர்கள் விண்ணிலகில் தான்பார்த்து
வெட்டித் துரத்தி விரட்டி விடுவேன்காண்
வெற்றிகொண்டு வாரே" னென்று மேகூியமேல் தானேறி
சற்றுஞ் சலியாமல் சங்கரனை தான்தொழுது

வன்னி போர் செய்தல்

வெங்கண் சிவந்து வன்னி வீரியவாள் கைப்பிடித்து
ஏவினன் வான்பரியை எதிர்த்தவரை வெல்லவென்று

இராமய்யன் சேனை

மாப்பிள்ளை கொண்டடப்பையன் வாருமென்று தானழைத்து
வெங்கடகிஷ்ணய்யா வீமனே வாருமென்று
சத்துருக்கையனே தார்வேந்தே வாருமென்று
பொன்னம்மராயா போர்வேந்தா வாருமென்று
மன்னவர்கள் கொண்டாடும் மண்டுருப் பாப்பய்யனும்
பட்டத்து நானும் பரிவார மத்தனையும்
தார்வேந்தர் கொண்டாடும் சாமி நாய்க்கனும்
நத்தத்து லிங்கையனும் நல்லபடை காலாளும்
திருமலை பூச்சியனும் சேர்ந்த படையத்தனையும்
விருது சொல்லி வெட்டிவரும் வெங்கணய்க்கனும்
போர்க்களத்தில் நின்று போம் பொம்மணய்க்கனும்
கூத்தன் மகன் சேதுபதி வாய்த்தபடையத்தனையும்
தேர்வானைத்தோண்டு தேர்மக்களத்தனையும்

பாஷையர்கள் மெச்சும் பாவுறு மன்னவனும்
விருதணிந்து வெட்டிவரும் வெட்டாபுறந் தளவாயும்
தென்காஞ்சிமூக்கன் சேர்ந்த படையத்தனையும்
கோட்டத்து ரெட்டி குமரான் பெருந்தளமும்
பாளையக்காரர் படைத்தலைவ ரெல்லோரும்
"வேளையத்தில் வென்றுவரும் வீரப்பரிவாரங்களும்
பெண்டுகளோ வென்று பெருமூச்சு தானெறிந்து
நாளைப்பகல் பொழுது நாழிகைக்குள்ளாக
நீவைப் பிடியாட்டால் சேரவே கொன்றுழக்கி
இன்று மறவனைத்தான் சேரப் பிடியாட்டால்
வைப்பேன் கடற்கரையில் வாகாய் கழுவதனில்"

கடும் போர் வெட்டினான் பரங்கியர் வேந்தனைத்தான் துணித்தான்
இரு படையும் மூண்டு எதிர்த்துப் போர் செய்தார்கள்.
கோவித்து வெட்டினன் கொடுங்கால வன்னியுந்தான்
தெத்திலே வந்து திறமாம வந்தான்காண்
பறங்கி பெரும்படையை பார்த்து நீதுரைத்தீர்
என்று சொன்னபோதே எதிரில்லா வன்னியுந்தான்
வாதுப்போர் செய்யும் மறவன் வலுக்காரன்
பறங்கிகளெல்லோரும் பாசை சொல்லி பல்கடித்து
எதிர்த்துப் போர் செய்தார்கள் மறவர் படையெல்லாரும்
பறங்கிகள் தன்போரைப் பார்த்துதான் பணிந்து
இராமனுதசுவாமி நல்ல துணையென்று சொல்லி
நாடு கலக்கிவிடும் நல்லதொரு வான் பரியை
கொண்டுவரச் சொன்னான் கோட்டையிடி வன்னியுந்தான்
ஏறினன் வான்பரிமேல் எதிரில்லா வன்னியுந்தான்
பேரிகை டம்மாரம் பிறகே தொனி முழங்க
பட்டார் பரங்கியெல்லாம் பறந்து கழுகாய்
தப்பின பறங்கியெல்லாம் சமுத்திரத்தில் போய் விழுந்தார்
கண்ட பறங்கியெல்லாம் கப்பலிலே ஏறினர்காண்
கப்பலிலே பார்த்து கவிலனவே சுட்டார்கள்
கடலிலே கப்பல் கவிழ்ந்தது காணம்மானை
தெத்திலே வன்னித் திறமாகப் போருமிட்டு
செயங்கொண்டு வன்னியுந்தான் சேர்ந்தான் காணம்மானை.

மறுநாள் போர் அந்நேரந்தன்னில் அலைகதிரோன் போய்மறைந்தான்
மற்றுநாள்தானும் மன்னன் புலிராமன்
மறவனே ஆண்பிள்ளைகாண் மண்டலத்தி லுள்ளோரில்
என்றுசொன்னபோதே எல்லாருங் கெடிகலங்கி
மாப்பிள்ளை கொண்டப்பையன் மன்னவனு மப்போது
(கப்பலுஞ் சேர்வதுக் குகவே தானகளைத்தார்

ஐநூறு கப்பலிருகாகப் பாய்விரித்து
எள்ளளவு மிளகாமலிடமிடவே பாய்விரித்து
மாப்பிள்ளைக் கொண்டபய்யன் மன்னனுடபடையும்)
வெங்கிட கிஷ்ணய்யன் வீமனுடன் படையும்
சத்துருக்கையன் தாமன்ன தன்படையும்
பொன்னமராயன் போர்வேந்தன் தன்படையும்
மன்னர்கள் கொண்டாடும் மண்டுரு பாப்பய்யனும்
விருது சொல்லிவெட்டி வரும் வெங்கமனுயக்கன் படையும்
போர்களத்தில் நின்ற பொரும்பூட்டு ராசாவும்
தார்வேந்தர் கொண்டாடும் சாமினுதன் படையும்
பட்டத்து னுய்க்கன பார்வேந்தன் தன்படையும்
நத்தத்து விங்கையனும் நல்லபடை காலாளும்
திருமலைப் பூச்சியனும் சேர்ந்த படையத்தனையும்
பாசையர்கள் மெச்சும் பாவுறு மன்னவரும்
தேர்வாளத் தொண்டு துரைமக்க ளத்தனையும்
கூத்தன்மகன் சேதுபதி வாய்த்த படையத்தனையும்
எல்லோரும் வாருமென்று எதிரில்லா ராமம்யனும்
கப்பலிலே ஏறுமென்றான் கன்னன் புலிராமய்யனும்
பாய்கடலினூடே பாய்மரத்தை தான்விரித்து
தீவை சார்ந்துகொண்டு திறமாகப் பொருதினர்காண்
ஒட்டிலே சண்டை தீப்பாய்ந்து போகுதய்யாண்
வாள்கோட்டை ராயன்மதச் சடைக்கன் முன்னேவந்து
மன்னன் புலிராமன் மட்டில்லாச் சேனைவள்ளம்.
பாற்கடலினூடே பார்த்து படகுவிட்டு
தீவைப் பிடிக்கச்சொன்னான் தீரன் புலிராமய்யனும்
பறங்கிகளெல்லோம் பாசைசொல்லி பாய்விரித்து
ராமனிட படையும் நாலுதிக்கும் கப்பலின்மேல்
துணிந்துபோர் செய்தார்கள் சூதரன் தீவுதன்னில்
வளைந்து பிடிக்கவென்று வந்துபோர் செய்தார்கள்
கண்டு பயந்துவந்தேன் கர்த்தனே யென்றுரைத்தான்
மன்னன் சடைக்கன் மாகோபங் கொண்டெழுந்து
வானத்தை தீயெரிக்கும் வன்னியரே வாருமென்று
ஏன்மருகா வன்னியரே யிப்புதுமை கேட்கிலையோ
ஓட்டனுந்தான் ஓடிவந்தான் உள்ளபெருங் காற்றெனவே
இராமன் படையெல்லாம் நடுக்கடலில் பாய்விரித்து
இராமனுத சுவாமிநல்ல பெருந்தீவை
வளைந்து பிடிக்கவந்து போர்மன்னன் சொன்னான்
நம்மைப் பிடிக்கச்சொல்லி நாலுதிக்கும் பாய்விரித்து
சுற்றி வளைந்துகொண்டான் சூதரன் தீவுதனை
தெத்திலேயுஞ் சண்டை தீப்பாய்ந்து போகுதென்றான்

மறவன் சொல் மறவனுந்தான் சொல்ல "மன்னன் புவிராமய்யனும்
பார்ப்பான் பெரும்படையும் பாரமென்று சொன்னீரே
ஆற்றும லப்பார்ப்பா னலையுரு னய்யாவே
வெட்டி துரத்தி விரட்டிவிட்டு வாரேனய்யா
பரங்கிகள் எல்லோரும் பாரமோ எந்தனுக்கு
பார்த்த விவனூடே பரந்து படகையிட்டு
எதிர்த்த பரங்கிகளை இனிவிடத்தான் போறேனோ
அம்மானே நீர்தானும் அற்பமென்று எண்ணாதே
கிலேசங்கள் வேண்டாங்காண் கீர்த்தி கொண்டவனே
இராமனதைசுவாமி நல்ல துணையிருக்க
மறவரை காதலித்தாய் மங்கையுமை தான்விடுக்க
சேதுவந்த மாகாளிதேவி யுமை தானிருக்க
காவல்விரவனும் காத்து நம்மை தானிருக்க
முக்கோடி தீர்த்தம் முழுதுமங்கே தானிருக்க
என்னை எடுக்க எவரால் முடியுமய்யா"
என்று சொல்லி வன்னி எதிர்த்தவரைத் துரத்தி
மீசை முருக்கி விருது பல பேசி
படைத்தலைவர் தன்னை பாங்காகத் தானழைத்து
எதிர்த்து வந்த பார்ப்பானை யினிவிடப்போகாது
வெட்டித் துரத்தி விருது பரிப்பேனென்று
வென்றரசு கொண்ட வீமனே வாருமென்று
வீசுகொண்ட தேவா வீமனே வாருமென்று
தார்வேந்தர் கொண்டாடும் தர்மனே வாருமென்று
குங்குமத்தேவா குமரனே வாருமென்று
கூட்டுக்கால் வெட்டிவரும் கொலைக்கார மூடனையும்
மன்னனைப்போல் நின்று பொரும்வகொன கூத்தனையும்
கன்னன் கலியாணி காவலனர் தன்படையும்
மொத்தையுடையானைப் போர்வேந்தே வாருமென்று
கருத்தயுடையானே கன்னனே வாருமென்று
ரூவுத்த கூத்தா ரணவீரா வாருமென்று
மன்னவரை காத்தானையும் வாகாக தானழைத்து
பார்ப்பான் படை பொறுக்கிப் படகேறி வந்தாளும்
வருத்தரை கொள்ளவென்று வந்ததுகாண் ராமன்படை
பார்ப்பான் படைபோரும் பாருலகில் நம் போரும்
மூவருடைய போரும் யினித்தெ[illegible]மென்றுசொல்லி
மதியாரழகனையும் மன்னன் குமாரனையும்
கெட்ட பழி வாங்கவென்று கொற்றவர்க்கு தாமுரைக்க
செங்கண் மிகச்சிவந்து சீர வடிவாளெடுத்து
நாடுகலக்கியெனும் நல்லதொரு வான்பரியை

கொண்டுவரச்சொன்னான்காண்கோலமுள்ள வன்னியுந்
[தான்

வன்னி பொருதல்

பரியை அலங்கரித்து பண்பாகவே தானும்
கொண்டுவந்து விட்டார்கள் கோலாகலன் கொலுவில்.
வானப்பரியைப் பார்த்து வன்னி மனமகிழ்ந்து
மன்னவரும் வன்னியரும் வாருமென்று தானடந்தார்
செந்தூள் மிகப்பறக்க செங்கதிரோன் தான் மறைய
படைத்தலைவரெல்லோரும் பாசை சொல்லி பல்கடித்து
தெத்திலே சென்றார்கள் திறமாக மன்னரெல்லாம்
வாள்கோட்டைராயன் மதச்சடைக்கன் தன் மருகன்.
மன்னன் புலிராமன் மட்டுப்படா சேனையின்மேல்
ஊடுருவப் பாய்ந்தான் உலகங் கிடுகிடென
சென்று பொருதான் சேனை வெள்ளத்துக்கு முன்னே
முட்டிப் பொருதான் மூவுலகும் தானதிர
வளைந்துப் பொருதான் வாள்வீரன் வன்னியுந்தான்
நெருங்கிப் பொருதான் நெடிய அனுமனைப்போல்
மன்னன் புலிராமன்படை மசப் பொருதார்கள்
இருபடையு மூண்டு எதிர்த்துப் பொருதார்கள்.
அப்போது ராமய்யனும் ஆயிரம்பேரை
கொன்றுதானந்த கொலைக்களத்தில் நிற்கலுற்றான்.
வாள்கோட்டைராயன் மதச்சடைக்கன் தன் படைதான்
போர்க்களம் விட்டு புறம்காட்டி ஓடியதே.
மறவர் முறிந்தோடினதை வன்னியவன் தான்பார்த்து
மீசை முருக்கியே தொண்டு சினத்துடனே
புலியை நரி பாய்ந்து போருதோவென்று சொல்லி
மன்னன் புலிராமன் மாசேனை தன்மேலே
யேவினான் வான்பரியை எல்லையற்ற சேனையின்மேல்
வெட்டினான் வன்னி வேந்தர்களைத் தான்துணித்தான்.

அலங்கோலம்

பட்டார்கள் ராமன்படை பருந்துகளும் காய்ந்திடவே
காலற்று வீழ்வாரும் கையற்று வீழ்வாரும்
துண்ட துண்டமாக துணிக்கப்பட்டு வீழ்வாரும்
சென்னியற்று வீழ்வாரும் தெரிப்பட்டு வீழ்வாரும்
குறைபிணமாய் நின்று கூத்தாடி நிற்பாரும்
அய்யோ சிவனேயென்று அலறியே வீழ்வாரும்
வாணமடிபட்டு மண் மேல் கிடப்பாரும்
குத்துண்டு போர்க்களத்தில் கொலவையிட்டு நிற்பாரும்
அம்புபட்டு சோர்ந்து அலறியே வீழ்வாரும்
வேலவனே என்பாரும் விதிவசமோ என்பாரும்
மெய் துணிந்து வீழ்வாரும் மெய்கலங்கி வீழ்வாரும்

பட்டப்படுகளத்தைப் பார்த்து பயந்தோடுவாரும்.

இராமய்யன் படை ஓடல்

மன்னன் புலிராமன் படை வாகாய் முறிந்தோடியதே.
கட்டறுத்த மான் போல் கலங்கியே சேனை வெள்ளம்
தட்டழிந்து கெட்டதுகாண் தலைகெட்ட நூலதுபோல்.
பிடித்த முகத்தை விட்டு பின்வாங்கி மெய்யவே
கடலிலே போய் விழுந்து கப்பலிலே தானேறி
அணைக்கரையைத் தான்கடந்து ஆற்றோரம் ஓடியதே.
எழுபதுபேர் பட்டார்கள் எண்ணவொண்ணு ராசாக்கள்
ஆயிரம்பேர்கள் அக்கணத்தே மடிந்தார்கள்.
பட்டத்து நாய்க்கனும் பாங்காய் வடுகரொத்த
தொட்டிய கம்பளத்தார் துடிகாரர் பட்டார்கள்.
பட்டாரணக்களத்தில் பரராசர் கொண்டாட
கடலிலிருந்த பறங்கிக ளெல்லோரும்
கடலைக் கடந்து காணும லோடினரே
வன்னியிட போரைக்கண்டு மறுதீவி லோடினரே.
வன்னியிட பீரங்கி வானங் குமுறுதப்போ(து)
கோடையிடிபோலக் குமுறி கொடியாடவைஎல்லாம்
சுட்டுக்கவிழ்த்தான் துங்கமுடி வன்னியுந்தான்
வெற்றிகொண்டு வன்னி வீரவாள் கைகொடுத்து
தெத்துப் பதனமென்று திரும்பினான் வன்னியுந்தான்
அம்மானிடத்தில் வந்தான் அதிவீர வன்னியுந்தான்.
'வெற்றி கொண்டு வந்தேன் வீரனே உன்னருளால்'
மன்னன் சடைக்கன் மனமகிழ்ந்து கொண்டாடிப்
பூரித்திருபுறமும் பொன்னுருக்கி விட்டாற்போல்
'இந்த வெற்றி போதாதோ என்மருகா வன்னியரே'
திட்டிக் கிடாய்வெட்டி திறமாக திட்டிசுற்றி
ஆலத்தி தானெடுத்தார் அன்பாக பெண்களெல்லாம்
அரண்மனையில் போய்புகுந்தான் அதிவீர வன்னியுந்தான்.

மறுநாள் இராமய்யன் கோபித்தல்

கங்குல் விடிந்து கதிரோ னெழுந்தபின்பு
மன்னன் புலிராமன் மாகோபங் கொண்டெழுந்து
'இன்று மறவனைத்தா னிதமாய்ப் பிடியாவிட்டால்
படைத்தலைவர் தங்களைத்தான் பார் கழுவிலேற்றிடுவேன்
வன்னியெனும் மறவன் மதியாமல் வெட்டுவனேல்
நலியாய் பயந்துவிழ வன்னி யிராவணனோ?
என்னை வணங்காமல் எதிர்த்துப் போர்செய்தானே
என்படைகள் சேனைகள் எல்லாம் மறவனுக்கிரையாச்சே
(எம் படை எழுவத்திரெண்டி லிவனொருவனானே)
துலுக்கர் படையையெல்லாம் துரத்தி வெட்டிவந்தேன்.
என் சீவனுள்ளமட்டும் அவனை விடப்போறேனோ?

மறகர்வைதானம் மற்றேபறே னென்றால்
மார்பிலிடும் பூணூல் மாட்டுவடம் தானலவே.
(.........படைகள் பட்டபணி கேளாமல் போகேனே
.........துடை சேரமடிய வைப்பேன்)
சடைக்கன் வன்னியைப்பிடித்து சதைசதையா
[யரியாட்டால்
என்பேரோயிராமன் யான்எடுத்தது மாயுதமோ
வன்னிக்கு நானிளைத்தால் மறுமன்னர் சிரித்திடுவார்
மறவற்கு நானிளைத்தால் மன்னவர்க்கு மேறுதே
சொக்கலிங்க மீனாட்சி துணையென்று நம்பிவந்தேன்'
என்றுசொல்லி ராமய்யனு மெல்லோரையு மழைத்து
சேனை வளைந்துகொண்டு சினந்துபோர் செயச்சொன்னான்
தெத்துலே வந்து திறமாய் பொருதுமென்றான்.
சிரவணையில்லாச் சண்டை செய்யுங்கோ ளென்றுசொல்லி
கப்பலுஞ் சோங்குங் கடுகவே வரவழைத்து

போர் வாதகடலினூடே வந்து போர்செய்தார்கள்.
"மாப்பிள்ளை கொண்டப்பையன் மதிமயக்கம் போனீரோ
வெங்கிடகிஷ்ணய்யா வெகுமயக்கங் கொண்டீரோ
சத்துருக்கய்யா சதிமயக்கங் கொண்டீரோ
பொன்னமராயா போர்மயக்கங் கொண்டீரோ
தொட்டிய கம்பளத்தார் துணிந்து போர் செய்யலையோ
வடுகத்துரை மக்களெல்லாம் வாய்வறண்டு போனீரோ
எல்லோரையுமழைத்து இதவாகப் புத்திசொல்லி
தீவையடைத்துக்கொண்டு சென்று போர் செய்யாட்டால்
பாங்காய்க் கடற்கரையில் பார் கழுவேற்றிடுவேன்
வெட்டியரிந்து வெயிலில்காயப் போட்டிடுவேன்
என்பேரில் குற்றமில்லை ஏழைப்பதி போனவர்கள்
அன்றி லங்கைதன்னை அனுமா னழித்தாற்போல்
தீவிலுள்ள மறக்குலத்தை சேரவதை பண்ணு" மென்றான்
அந்த விஷயமறிந்து சடைக்கனுந்தான்
பாளையக்காரர் படைத்தலைவர் தன்னையெல்லாம்
வாவென்று தானழைத்து வரிசை மிகக்கொடுத்து
'என்மருகா வன்னியரே எங்கிருந்தாய்' எனக்கேட்டான்.

வன்னிக்கு நோய் காணல் 'என்னையறியாமல் என்னுடம்பு நோகுதய்யா
எள்போட்டால் எள்ளெரியும் என்னுடம்புதன்னிலே'
'மாபாவி ராமன் வஞ்சனை செய்தானே
என்மருகன் வன்னியற்கு இந்தவிதி வந்ததென்ன
கண்ணுன தம்பியற்கு காய்ச்சல்வரக் காரியமேன்'
கேட்டவுடன் சடைக்கன் கெடிகலங்கி தான்பயந்து
இடறி விழுந்தாற்போல் ஏங்கி சடைக்கனுந்தான்

சடைக்கன் தெய்வம் தொழுதல்

'இராமனுதசுவாமி நல்லதுணை யென்றிருந்தேன்
காட்டிக்கொடுத்து கடக்கப் போய்விட்டீரோ
காட்டிக் கொடுக்காதே கடக்கப்போய் நிற்காதே
மன்னுப்பு தாருமய்யா மாயவரே உன்பாதம்
நம்பிவந்தேன் உன்பாதங் நடுக்கடலில் தள்ளர்தே
உன்பாதம் தஞ்சமென்று உன்னைநம்பி வந்தேனே
பார்ப்பானே தன்னவனுய் பைய்ய அங்கே சென்றீரோ'
நின்று மயங்கி நெடுமூச்சு தானெறிந்தான்
சன்னிதியில் தீர்த்தம்தான் வாங்கித்தான் கொடுத்தான்
இராமனுக்கும் அம்மனுக்கும் நன்ருகத்தானேர்ந்து
சிறப்பு மிகக்கொடுத்தார் தீரன் சடைக்கனுக்கு

மறுநாள் வைசூரி காணல்

மற்ருநாள் தானும் வன்னியர் தமக்கு
மேலே வைசூரி விசிரியதே அம்மானை.
மாயவரை நம்புவரோ மண்டலத்தி லுள்ளவர்கள்
துர்க்கை பிடாரி சூலி கபாலி அம்மன்
சேது வந்த காளிக்கு சிறப்புமிகக் கொடுத்தான்.
'என்மருகன் வன்னியற்கு ராமனெமனுக வந்தான்
பார்ப்பானல் வந்தவினை பாங்காய் பலித்ததுகாண்.
வன்னிதனைக் கொல்லவென்று வாகாய் நின்றெடுத்து
யாகமவதைதான் ஆனதொரு வன்னியற்கு
கொல்லவென்று பார்ப்பான் கூற்றுவனுய்த் தான் [பிறந்தான்
என்றுசொல்லி சடைக்கன் இடைந்து பரிதவித்தான்.

மறவன் தேவி புலம்பல்

சடைக்கனுடைய தேவி தார்குழலாள் வந்துநின்று
என்மருகன் வன்னியற்கு இந்தவினை வந்ததென்று
என்றுசொல்லி தானழுது இருந்தாளே கொம்பனையாள்.
வஞ்சனை செய்த மாபாவி ராமனுக்கு
வேதியரை தானழைத்து வெகுமதிகள் தான்கொடுத்து

யாகம் வளர்த்தி பிளவை ஏவுதல்

யாகம் வளர்க்கச்சொன்னுன் நல்ல சடைக்கனுந்தான்
யாகம் வளர்த்த நாலாநாள் இராமனுக்கு
முதுகில்பிளவை முடறு வலுக் கொண்டதுகாண்
காலில் பிளவைவந்து கடுகி வலிக்கொண்டதுகாண்
சுத்த மற்றப்பிளவை வலுகொண்டு வந்ததுகாண்
வேகமாயெழுந்து மன்னனைதா னெடுக்கி
உள்ளிருக்கும் நோவை ஒருவர்க்குஞ் சொல்லாமல்
மன்னன் புலிராமய்யனை வாகாயடக்கியதே.
அந்தநாள் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்
மற்ருநாள்தானும் மன்னன் புலிராமய்யனும்

கோபித்துக் கண்சிவந்து கடுங்கோபங் கொண்டெழுந்து
சஞ்சலப்பட்டிருந்த தளமெல்லாம் தானழைத்து

பாம்பன் துறைப் போர்

பாம்பன் துறைவாடியிலே பாரிட்ட சண்டையிட்டான்
பார்கடலினூடே பறந்து போர் பண்ணச்சொன்னான்
தெத்துலே சண்டை தீப்பறந்து போருதென்றான்.
அந்நேரந்தன்னில் அதிவீரன் சடைக்கனுந்தான்
கூத்தன் தளவாயும் கோமான்யாவருமாய்
சாத்திய வல்லபங்கள் தானெடுத்து ஓடுவராம்
ஓடியங்கேதானும் உலம்பல் பண்ணு மந்நேரம்
சோபமுடன் கிடந்த தோற்ற வன்னியற்கு
பாம்பன் துறைவாடியிலே பாரிட்ட சண்டையென்றான்
ஆவலுடன் வன்னி ஆர்ப்பரித்து தான் எழுந்து
'என் சீவனிருக்கையிலே எதிர்த்துப் போர்செய்தானே
பார்ப்பானும் பறங்கியும் பாரமோ எந்தனுக்கு
ஆள்திறங்களறியாமல் ஆண்மை செய்தான் பார்ப்பானும்'

நோய் பட்ட வன்னி போருக்குச் செல்லல்

நாடுகலக்கியெனும் நல்லதொரு வான்பரியை
கொண்டுவரச் சொன்னான் கோட்டையிடி வன்னியுந்தான்
முத்தாலே மூக்குத்தி முகப்பட்டம தானணிந்து
நாலுகால் வீரதண்டை நற்கீதந் தான்பாட
தங்கக்கலணை வைத்து சதிகார விருதுகட்டி
கொண்டுவந்து விட்டார்கள் கோட்டையிடி வன்னிமுன்னே.
வான்பரியை தான்பார்த்து மனமகிழ்ந்து கொண்டாடி
என்னையெடுத்து இதமாக வையுமென்றான்.
கல்லணைமேலே கயிறுகொண்டு தானிறுக்கி
ஆபரணமெல்லாம் அன்பாகத் தானணிந்து
சிங்காணி வில்லம்பு சீராவும் தான்சேர்த்து
பட்டாவுங் கைபூட்டி பாங்குடனே நடக்கலுற்றான்.
கொற்றக் குடைபிடிக்க கொத்தவர்கள் முன்னடக்க
காவிக் குடைபிடிக்க கன்னன்துரை வன்னியற்கு
நீலக் குடைபிடிக்க நிசாரக்கார் முன்னடக்க
பஞ்சவர்ண குட்டைகள் பக்கத்தில் அசைந்துவர
வெஞ்சாமரம் வீச விருதுபல முழங்க
பதினெட்டு மேளவகை பண்பாகத் தான்முழங்க
பேரிகை டம்மாரம் பிறகே தொனிமுழங்க
அம்பு வில்லுக்காரர் அருகே சிறந்துவர
அரிவாகட்டி வளையங்கள் ஆர்ப்பரித்து முன்னடக்க
வானப்பரிசகாரர் வகையாக முன்னடக்க
வெள்ளிகட்டி துப்பாக்கி விதவிதமாய்ச் சூழ்ந்துவர
குப்பகரைக்காரர் கொலவையிட்டு சூழ்ந்துவர

பாளையக்காரர் படைத்தலைவர் சூழ்ந்துவர
கட்டியக்காரர் கனவிருது கூறிவர
முப்பது குஞ்சரமும் பாங்காக முன்னடக்க
வெற்றிகொள்ள வேணுமென்று வேலவரைக் கைதொழுது
சற்றுஞ்சலியாமல் சங்கரனைக் கைதொழுது
இராமனுதைசுவாமி நல்லதுணை யென்றுசொல்லி
நடந்தான்காண் வன்னித்துரை எல்லோர்கள் கொண்டாட.

சடக்கன் போகாதே என்றல்

நோவோடே போகாதே முகுந்தனே என்மருகா
என்றுசொன்ன அம்மானை ஏறிட்டுத் தான்பார்த்து
தெத்திலே வந்தான்காண் தீரன் புலி வன்னியுந்தான்
தெத்திலிருந்தபடை சேரவே வந்து கண்டார்
வந்துகண்டு தெண்டனிட்டார் வாள்வீர வன்னியுந்தான்
எல்லோரும் வந்து இதமுடனே ஆர்ப்பரித்து
மன்னன் புலிராமன்படை மட்டில்லாச் சேனையின்மேல்
எரிந்தாரெரிவாணம் எல்லையற்ற சேனையின்மேல்
இராமன் படையத்தனையும் நடுங்கி மிகப்பயந்து
காலனிவனென்று கலங்கியே ராமன்படை
வன்னியிட கையாலே மன்னவர்கள் மடியவென்று
சொப்பனங்கள் கண்டு துணுக்கென்றெழுந்திருந்தான்.

தீச்சகுனங்கள்

கூகைக் குளரிடவே கூப்பிட்டு ஓடிகளும்
காகங் கதரிடவே கரிகள் கன்னியந்திடவே
இடதுதோள் துடித்திடவே இருகச்சி மூடிடவே
அடர்ந்த கதிரோனை அரவம்வந்து தீண்டதுபோல
அந்நேரந்தன்னில் ஆசையுற்று வன்னியுந்தான்
வாகாய கெருடன்வந்து வட்டமிட்டு சுற்றியதே.
கண்குழந்தை தான்பார்த்து கண்ணமுதான் வன்னியுந்தான்

வன்னி செய்த போர்

மன்னன் புலிராமன் மாசேனையில் புகுந்து
ஆனைதிரளில் ஆண்சிங்கம் புகுந்தாப்போல
ஊடுருவச் சென்றான் உலகங் கிடுகிடென
வெட்டினான் வன்னி வேந்தர்களைத் தான்துணித்து
சுட்டார் கொலைக்காரர் சொல்லரிய மன்னரைத்தான்
வாணப் பொதியுடனே வவகார ஈட்டிகளும்
சுட்டார் குழல்காரர் சொல்லரிய மன்னரெல்லாம்
எரித்தார் எரிவாணம் எல்லையற்ற சேனையிலே
தீரன் புலிராமன் சேனைவெள்ள மத்தனையும்
கூகூ எனவே கொடையெறியே பொருதார்
அப்போது வன்னி யருமந்த விஷயங்கேட்டு
ஏறினான் வான்பரிமேல் எல்லையற்ற சேனைமுன்னே

ஊடுருவச் சென்ருன் உலகங் கிடுகிடென
வந்து வளைந்துகொண்டார் மகாராமன் தன்படையை
இடசாரி வலசாரி எதிர்த்துப் பொருதலுற்ருன்
அப்போது வன்னியனும் ஆர்ப்பரித்துக் கொக்கரித்து
முன்கைகடித்து முகத்தில் ரத்தம் சிதறிவிழ
மீசை முறுக்கி விருதுபல பேசி
வாளோடு வாள்முறிய மகூப்போர் செய்யலுற்ருன்
விருப்பாச்சி நாய்க்கனை விருதுசொல்லி வெட்டலுற்ருன்
பொம்மண நாய்க்கனை புளந்தா னிருதுண்டாய்
தொட்ட நாய்க்கனையும் தோளைப் பிழிந்திரைந்தான்
அந்தரத்தில் தேவர்களும் அலங்காரம் பார்த்திருக்க
இந்த உலகில் எவருடைய தான்போரோ
வாலியிடபோரு மாயனிட தன்போரும்
என்று சொல்லி தேவர்களும் எல்லோரும் பார்த்திருந்தார்
வெட்டினன் வன்னியனும் விருது களத்தில்
மாப்பிள்ளை கொண்டப்பய்யன் மதம்பொழிந்து [வந்தெனவே
அன்று அச்சைங்யக்காரரை அடக்கமுடியா சடைக்கன்
விருது சொல்லும் வேந்தரையும் வெண்போரிலே தடித்து
பெட்டியும் மூடியும் சுவாமி பிளந்தெரிந்தான் வன்னியுந் [தான்
உண்டைபட்டு சோர்ந்து உருண்டு கிடப்பாரும்
வாணமடித்து மண்மேல் கிடப்பாரும்
குத்துண்டு போர்க்களத்தில் கொலவையிட்டு நிற்பாரும்
ஆனைகுத்தி சோர்ந்து அலறி வீழ்வாரும்
காகம் பருந்து கழுகு மிருந்துண்டிடவே
வெட்டி விழுந்தகுத்து விருதுபுகழ் வன்னியுந்தான்
மன்னன் புலிராமன் மட்டுபடாச் சேனைவெள்ளம்
ஆருயிரம் பேரும் அத்தலத்திலே மடிந்தார்கள்
குதிரை அன்பதுதான் கோடெரி யெத்தடித்தார்
அஞ்சனை கூடாரம் ஆர்ப்பரித்துக் கொள்ளையிட்டு
வெட்டித் துரத்தி விருதுகளுந் தான்பிடித்து
மன்னன் புலிராமன் மட்டுபடா சேனைவெள்ளம்
ஒக்க இருந்ததுகாண் உலகிலுள்ளோர் கொண்டாட.

வெற்றி வெற்றிச் சங்கூதி விருதுகளுந் தான்பறித்து
தீரனவன் வன்னியனும் திறமாகவே நிறுத்தி
வீரியங்கள் பேசிமிக உடனே ஆர்ப்பரித்து
பட்டத்து யானைமேல் பாங்கான அவுதாவை
வேண்டிய ஆபரணம் விதமுடனே தான்பூட்டி
கொம்புக் கத்தியுடனே குறுநெத்தி லட்சுமியும்

வீச்சல்லி கட்டி விதமானப் போதலையும்
நாலுகால் தன்டை நவமணி யாபரணம்
வேண்டு வரிசை விதமுடனே தான்பூட்டி
ஏறினான் யானையின்மேல் எல்லையற்ற சேனைமுன்னே.
தேவர்க ளெல்லோருந் திடுக்கிட்டுப் பார்த்திருக்க
பஞ்சவர்ணப் பாவாடை கொஞ்சி மிகவெறிய
கட்டியக்காரர் கனவிருது கூறிவர
கொற்றக் கொடைபிடிக்க கொடிதளஞ் சூழ்ந்துவர
சங்கீதமேளம் சமுத்திரம்போலே முழங்க

வெற்றியுடன் வன்னி திரும்பியது

பேரிகை டம்மாரம் பிறகே முழங்கிவர
நடந்தானே வன்னியனும் நல்லமுத்து மாலைசிந்த
சேதுக்கரை வாழுந் தீரனையும் வந்துகண்டான்
வந்துகண்ட வன்னியனை வாரி யெடுத்துமெள்ள
ஏந்தியெடுத்து இருகண்ணோடே தானணைத்து
திட்டிக்கிடாய் சுற்றித்தீரன் வன்னியற்கு
பள்ளியறை மாளிகையில் பாங்காகக் கூட்டிவந்து
வென்னீரை விட்டு விருதர்கள் பட்டாவை
அப்போது வன்னியனும் அம்மான் முகம்பார்த்து

அம்மானுக்கு வன்னி சொன்ன மதி

கட்டினகச்சை அவிழ்க்குமுன்னே என்சொல்லுறான்
"என்வார்த்தை தன்னை யினிகேளும் மன்னவனே
படைத்தலைவர் தன்னையும் பாங்காக நம்பாதே
ஆனை குதிரை அடங்கலும் நம்பாதே
உற்றார் உறமுறையார் ஒன்றும் நம்பாதே
தெய்வத்தை நம்பாதே தீர்க்கமாய் சொல்லுகிறேன்
மன்னன் புலிராமனுக்கு வாகாக ஓலைதனை
கண்டுவணங்கக் காகிதமும் தானெழுதும்
அவன்தமையன் வைத்தியனார் அவர்மேல் ஆணையிட்டு
நம்பிக்கைஓலை நமக்குவர வேணுமென்றான்
கோடிதிரவியங்கள் கொண்டுபோய் தான்கொடுத்து
கண்டுவணங்கி கலங்காமல் தானிருங்கள்"
என்றுசொல்லி வன்னியனும் இதமுடனே தானுரைத்து
மெய்கலக்கமாக வருகுதென்றான் வன்னியனும்
கட்டினகச்சை அவிழானே வன்னியனும்
மெத்தையிலே சாய்ந்தான் மெய்க்கலக்கமாகத் தோள்
எமனும் வந்து எதிர்க்க மாட்டாமல்
கிட்டவரப் பயந்து கிடிகலங்கி போய்விடுமாம்.

வன்னியன் இறந்தது

தீரனவன் வன்னியவன் சிவலோகந் தான்சேர்ந்தான்.
அப்போது சேதுபதி அடித்துமிக விழுந்தழுது
நின்றுமயங்கி நெடுமூச்சு தானெறிந்து

சடைக்கன் புலம்பல்

" என்மருகா வன்னியனே என்னைக் கெடுத்தாயே
இந்திரசித்து என்றிருந்தேன் என்மருகா உன்னை
காட்டிக் கொடுத்து கடக்கப்போய் நின்ருயோ
நாளைப் படைப்போரில் நலமுடஞர் ஆர்ப்பரிப்பார்
நாளைப் படைப்போரில் நீசாக கோடிகள்தான்
நேற்றுப் படைப்போரில் நீசாய்த்த கோடிகள்தான்
வான்பரியின் மேலேறி மண்டிப் பொருகையாலே
படைத்தலைவர் கண்ணுக்கு பாங்காய் பலித்ததல்லோ
தேவர்கள் கண்ணும் திறமாய் பலித்ததுபோல்
மன்னன் புலிராமன் வஞ்சனைகள் செய்ததுபோல்
பட்டத்து யானையின்மேல் பாங்காகத் தானேறி
ஆபரண மாலையிட்டு அலங்கரித்து தான்வரையில்
இருதோளும் பூரித்து இதமுடனே நான்பார்த்து
பார்த்தகண்ணுமிப்போ(து) பாங்காய் பலித்ததுகாண்
என்னைக் கெடுத்தாயே என்மருகா வன்னியனே "
முகத்தி லறைந்தழுது மூச்செறிந்தான் சடைக்கன்.

தேவி புலம்பல்

சடைக்கனிட தேவி தார்குழலாள் வந்துநின்று
மருகன் சவத்தை வாரி யெரிக்கலுற்ருள்
கலக்கட்டும் மோதிரங்கள் கதற அறையலுற்ருள்
முத்துமணியின் யதுவின் மூடிப் புரண்டழுதாள்
" என்மருகா வன்னியனே என்னை எடுத்தாயே
சேதுகரை வாழுந்தீரன் தன்னை என்றிருந்தோம்
வான்பரியின் மேலேறி வரும்போது பார்த்திருந்து
என்மகளும் நானும் இருதோளும் பூரித்து
முகத்தி லறைந்தழுது மூச்செறிந்து தானடங்காள்
சடைக்கனிட தேவி தார்குழலாள் வந்துநின்று
திட்டிக்கிடா யாலத்தி திரமாய் எடுப்போமோ
என்மகளோ உன்னையின்னம் எதிர்பார்க்க பூமியிலே
பூமிதனிலிருக்க பொறுக்குமோ என்மருகா
நாளைப் படைப்போரில் நல்ல சமர்க்களத்தில்
யார்போய் பொருவார்கள் அதிவீர ராமருடனே
சீனிச் சரப்பளியும் சிருங்காரமுத்து தாவடமும்
மார்பில் பிரடகைய மாரிபோலே முழங்க
வீதிவரக் காண்பேனே வேந்தனே யென்மருகா
என்மருகா வன்னியனே யிந்தவிதி வந்ததென்ன "
என்றுசொல்லி மறவருமே ஏங்கியழுகலுற்ருர்
படைத்தலைவ ரெல்லோரும் பாங்காகத் தாமலறி
எல்லோரையு மழைத்தான் எதிரில்லா சேதுபதி

அவன் தேவி தீப் பாய்ந்தது

வன்னியிடதேவி மனங்கலங்கி கிலேசமுற்று
நீராடிக் குழல்முடித்து நீலவர்ணப் பட்டுடுத்தி
கொட்டு முழக்குடனே குதித்தாளே அக்கினியில்
துக்கந் தெளிந்தனர்காண் தோருத வரசர்கட்கு
அந்தநாள்சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்
மற்றுநாள் கதைக்ஷமன்னன் புலிராமய்யனும்
கொலுவிலிருக்கையில் கொக்கரித்து தூதுவர்கள்
ஓடிவந்து ராசருடன் ஒதுங்கியே வாய்புதைத்து
வன்னி யிறந்தானென்று மகிழ்ச்சியுடன் சொல்லுவராம்.
குலுங்க நகைத்து கொய்யஉடன் தான்பார்த்து
வன்னியு மாண்டானென் மன்னவரே கேட்டீரோ
என்றுசொல்லி ராமய்யனும் இருபுயமும் தான்குலுங்க
நகைத்து இருக்கையில் நன்றாகவே தூதன்
சடைக்கன் மிகயெண்ணி தாங்குதறி யில்லையென்று

அடைக்கல ஓலை

மன்னன் புலிராமய்யற்கு வாகாக ஓலைதனை
தமையன் வயித்தி யினார்மேல் ஆணையிட்டு
நம்பிக்கையாக நான் வருவேனென்று சொல்லி
ஓலைதனையெழுதி ஓடவிட்டான் தூதுவனை
ஓட்டமாயோடி எற்ற போறங்காந் தெனவே
கோலாகலராமன் கொலுவி லிருக்கையிலே
ஓலைதனைக் கொடுத்து ஒதுங்கிநின்றான் தூதுவனும்.
வாசித்துப்பார்த்து மன்னன் புலிராமய்யனும்
போற்றிப் புறமும் பொன்னுறுக்கி விட்டாற்போல்
வந்ததொரு தூதுவர்க்கு வரிசை மிகக்கொடுத்து
ராமய்யன் தன்னிருபம் நன்றாகவே யெழுதி
ஓட்டரிடம் கொடுத்து உற்ற தானபதியும்
இருபேரையுமனுப்பி ஏகினர் காணம்மானை.
வாள்கோட்டைராயன் மதச்சடைக்கன் வந்துகண்டு
வந்த தானபதியை வரிசையுடனே அழைத்து
நிருபந்தனையெடுத்து நீட்டினான் தூதுவனும்
வாசித்து கண்ணிலொத்தி வாகாகவே சடைக்கன்
இந்த உறுதி யெந்தனுக்குப் போதுமென்று

அடைக்கலம் அடையச் சொல்லல்

வெள்ளியுடன் பொற்பூவும் விதமுடனே தட்டில்வைத்து
ஆபரணமெல்லாம் அன்புடனே தானணிந்து
வேண்டும் வரிசையெல்லாம் விதமுடனே தானெடுத்து
இராமனாதசுவாமி நல்லதுணையென்று சொல்லி
ஏறினான் தண்டிகைமேல் எல்லையற்ற சேனைமுன்னே
தானபதிக்கு தனித்துமொரு தண்டிகைமேல்

ஏறவே சோளி ஏகி யிருபேரும்
பாளையக்காரர் பலபேருஞ் சூழ்ந்துவர
குப்பைக் குழல்காரர் கொடிமன்னன் சூழ்ந்துவர
ஆறு அகப்படி வல்லயங்கள் அருகே நிறைந்துவர
பஞ்சவர்ணப் பாவாடை கொஞ்சிமிக வெறிய
கட்டியக்காரர் கனவிருது கூறிவர
சங்கீத மேளஞ் சமுத்திரம்போல் முழங்க
பேரிகை டம்மாரம் பிறகே தொனிமுழங்க
கோலாகல ராமன் கொலுவிலே வந்திருந்து
தண்டிகை விட்டிறங்கி தான்வந்து சேதுபதி
வேண்டும் வரிசை விதமுடனே முன்னே வைத்து
பூவைக்குவித்து புதுமையுடன் தெண்டனிட்டு
அப்போது ராமய்யனும் ஆர்ப்பரித்துக் கோபமதாய்
தலைப்பாகை தான்கழற்றி தட்டிக் குடுமிதனை
'கட்டின தேங்காயை கடுக எடடா சடைக்கா'
என்று புலிராமய்யனும் இவ்வசனந் தானுரைத்தான்
தெண்டனிட்டு சேதுபதி திண்ணமுடன் ஏதுரைப்பான்.
"உந்தனிடத்தில் உருகியே வந்தேனென்று
இந்த வசனம் எடுத்துரைத்தாய் மன்னவனே
என்மருகன் வன்னி இருந்தானேயாமாகில்
தேவசபையை கட்டி சிதற வடிப்பானே"
என்று சடைக்கன் யிவ்வசனந் தானுரைக்க
அப்போது ராமய்யனும் ஆர்ப்பரித்து கோபமீறி
"உந்தன் அடைக்கலம்போல் ஒருக்காலு மில்லையென்று
எந்தன் அடியிணையை ஏற்றிப் பணியாமல்
இந்த மறவனுக்கு யிடும்பை தன்நகைத்து
தீரன் சடைக்கனைத்தான் திறமாகக் கட்டு" மென்றான்

சிறை செய்து செல்லல்

கட்டுமென்றபோதே காவலர்கள் தான்கூடி
மாறுகட்டாய்க் கட்டி மன்னன் சடைக்கனைத்தான்
குஞ்சரத்தின் மேலேற்றி கோலாகல ராமன்
கூடாரந் தான்பிடிங்கி கொக்கரித்து ஏதுரைப்பான்.
மறவன் சடைக்கன் வந்தானே மனமகிழ்ந்து

ஊர் திரும்புதல்

பாளையக்காரர் பலபேர் முன்னடக்க
வெற்றிக்குள்ளச் சுட்டு விருதுகளுந் தான்கூடி
பூமியதிர புகழ்கதிரோன் தான்மறைய
சங்கீதமேளம் சமுத்திரம்போலே முழங்க
வீரணம் நாகசின்னம் வெங்கலக் கொம்பூதிவர
பேரிகை டம்மாரம் பிறகே தொனிமுழங்க

நடந்துவந்தான் ராமய்யனும் நாகலோகமரதி
மானுமதுரையிலே வந்தடித்தான் கூடாரம்
கூடாரந் தானடித்தான் கொடிய புலிராமய்யனும்
சடைக்கன் தளமென்று தலங்காவலரை யெல்லாம்
பதன பதனமென்று பறையறைந்தா ரம்மானை
அந்தநாள் சென்று அலைகதிரோன் போய்மறைந்தான்.
மற்றுநாள் சென்று மன்னன் புலிராமய்யனும்
தேவர்கள் பூசைபண்ணும் திருப்பூவணத்தில்வந்தான்.
திருப்பூ வணங்கடந்து தீரன் புலிராமய்யனும்
கூடலதனை நோக்கி கொற்ற புலிராமய்யனும்
பூமியதிர புகழ் கதிரோன் தானதிர

திருமலை முன்னால்

கச்சித்திரும லேந்திரனுர் கண்காற்றின் மேலிருந்து
படைகளைக் கொண்டுவந்தேனென்று தன்கையை
[ஏந்தலுற்றார்
இராமய்யனைக்கண்டு நலமாகத் தான்மகிழ்ந்து
வாருமென்று சொல்லிபின் மறவனைப்பார்த்தே துரைப்பார்
"ஏண்டா சடைக்கா மறவனு முண்டோ
என்னை வணங்காமல் என்பாதம் காணுமல்"
என்று சொல்லுங் கச்சித்திருக்கனது சொல்வான்
"ஆண்டவனேயிப்போ அடியேன்சொல் விண்ணப்பங்கேள்
என்மருகன் வன்னி யிருந்தானே யாமாகில்
தேவரீர் பாதம் தெரிசிக்க மாட்டேனுன்"
என்றுசொல்லி சேதுபதி திறமுடனே தானுரைக்க
முத்துவீரப்பன் துணைவன் கச்சித்திரும லேந்திரற்கு
கோபமிகுந்து கொடிய சடைக்கனுந்தான்.

சிறைக்கூடம்

"ஆரைக்கோட்டை தன்னில் அடைத்து விலங்குதைத்து
கரையில்லாப் பேரைகாவல் வையு" மென்றுரைத்தார்.
மகராஜன் சொல்கேட்டு வாகான ராமய்யனும்
அந்தப்படியே அடைத்து விலங்குதைத்து
காவலோரை அழைத்து காருமென்று வைத்தனராம்.

இராமய்யனுக்கு பரிசு வழங்கல்

அப்போது ராமய்யற்கு ஆனதிரு மலேந்திரனும்
மெய்ப்பாக்கலை தானும் விதமாய்க் கொடுக்கவென்று
ஆபரணம் மாலை ஆன பீதாம்பரமும்
முத்துக் கடுக்கன் முன்கை வளை மோதிரம்
வயிர பதக்கங்கள் வாய்த்த சரப்பளியும்
பூட்டியலங்கரித்து பொம்மண்ணன் ராமய்யனை
வாகனத்தின் மேல் ஏற்றி

பவனி வரல்

வானத்தின் மேல் வாகாய் பவனி வந்தான்
பவனி வரும்போது பாங்கான நாதசரம்
சங்கீத ராகம் தவில் முரசு தான்முழங்க
எக்காளம் ஊத அடிமுரசு தான்முழங்க
பேரிகை மத்தளமும் பேசுங் கிடிபிடியும்
மேளத்தொனி முழங்க வெண்சாமரம் வீசிவர
கட்டியக்காரர் கனவிருது கூறிவர
வரும்பவனி கண்டு மடவார் குழலெல்லாரும்
ஆலத்தியேந்தி அருகே நிறைந்துவர
தாளத் திருவிளக்கும் சமயத்தில் நின்றிலங்க
கோலாகலராமன் கொலுவீதி தான் நடக்க
வரும்போது பட்டணத்து வகையர்கள் எல்லோரும்
கண்டு மிகவே காதல் மிகப் பெருகி
மன்மதன் காணென்பாரும் விசயன் காணென்பாரும்
சொல்லுக் கரிச்சந்திரன்காண் துரைராச னென்பாரும்
மல்லுக்கரிய மகராஜ னென்பாரும்
என்று மடவார்கள் ஏற்றகலை கைசோர
நிற்கிறதைக்கண்டு நீதியுள்ள ராமய்யனும்
கண்டு சிரித்து கடுக பவனி வந்தான்.
விண்டு புகழ் ராமய்யனும் வேழமதை விட்டிறங்கி
வருமதுரை கண்டு வாகாய்த் திருமலேந்திரரும்
சமூகந்தன்னில் நிறுத்தி சந்தோஷமா யிருந்தான்.

சடைக்கன் மனக்கவலை

இருக்குந் தருவாயில் ஏற்ற சடைக்கனுக்கு
மனக்கவலையாகியதை மன்னன் மிக அறிந்து .
சடைக்கனிட இக்கட்டுதான் தவிர்க்க வேணுமென்று

தெய்வக் காட்சி

அப்போது மாயன் அன்னேரம் வந்து நின்று
காட்சி கொடுத்தார் கன்னன் சடைக்கனுக்கு
காலில் விலங்கு கலீரென தான்தெரித்து
போனதவைக்கண்டு புகழ்ந்து சடைக்கனுந்தான்
மாயனுக்கு சித்தம் வந்ததுகா ணென்றிருந்தான்.
இருக்குந்தருவாயில் ஏற்றதொரு காவலர்கள்
திருமலேந்திரன்முன் திறமாக வந்துநின்று
சடைக்கனுட கால்விலங்குதான் தெரித்ததென்றுரைத்தார்.
என்றபொழுதே யிதவாய் மனமகிழ்ந்து
சடைக்கனுக்கு ராமர்தானுதவி என்றுசொல்லி
கூட்டிவரச் சொன்னார் கொடியதொரு ராமய்யன்முன்
அப்போ சடைக்கனைத்தான் அருகே வரவழைத்து
கச்சித்திரும லேந்திரனார் களிகூரத்தான் மகிழ்ந்து
சடைக்கனைப்பார்த்து தானுரைப்பார் அம்மானை.

விடுதலை

மாயன் கடாட்சம் மகிமையுண்டு உந்தனுக்கு
ஆனதினால் சடைக்கன் ஆலோசனை வேண்டாம்
எந்தனுரைக்கேட்டு இதவாக நீரிருங்காண்
இருமென்ற சொல்கேட்டு ஏற்ற சடைக்கனுந்தான்
வணங்கி நமஸ்கரித்து வாகாக ஏதுரைப்பான்
மாதா பிதா நீரே வாய்த்ததுணை நீரேகாண்
சுவாமி அடியேனுன் தாசன்கா ணென்றுரைத்தான்
அந்த மொழிகேட்டு ஆனை திருமலையும்

ஆதரித்து வழி அனுப்பல்

சந்தோஷமாகியவர் தன்னருகே தானழைத்து
ஆடை வெகுபூஷணமும் அன்பாகத்தான் கொடுத்து
வேந்தன் சடைக்கனுக்கு விருதுகளுந் தான்கொடுத்து
இராமனாதசுவாமி நல்ல பெருந் தீவில்
சென்றிரும்காணென்று தீரன் விடைகொடுத்தார்.
விடைகொண்டு தான் சடைக்கன் வேகமுடன் கைதொழுது
சொக்கலிங்கம் மீனாட்சி துணையென்றுதான் மறவன்
நின்றனுப்பிக்கொண்டு நீதியுடன் தெண்டனிட்டு
ஏறினான் தண்டிகையில் எல்லையற்ற சேனையுடன்

மீண்டும் ஆட்சி

சேனைத் தளஞ்சூழ சென்றேகியே போனான்
இராமநாத நல்ல பெரும் பட்டணத்தில்
செங்கோல் செலுத்தி சேவடியைக் கைதொழுது
மாயனருளால் மண்டலத்தை யாண்டிருந்தான்.

வாழ்த்து

கேட்டவர்களெல்லோரும் கிளை கோத்திரம் தழைக்க
படித்தோர்க ளெல்லோரும் பாக்கியங்களுண்டாக
மன்னன் கச்சித் திருமலேந்திரனார் மண்டலத்தை ஆண்ட [கதை
கேட்டவர்க ளெல்லோரும் சிறப்பாக வாழ்ந்திருக்க
வாழி மிக வாழி மங்காமல் வாழியவே
சொக்கலிங்கம் மீனாட்சி துணைபெற்று வாழியவே
ஈசனருள் பெற்று எல்லோரும் வாழியவே
இராமப்பய்யன் அம்மானை பாடி முற்றிற்று.

மீனாட்சிஅம்மன் சுந்தரேசுவாமி துணை.

சிவமயம்.

அருஞ்சொல் விளக்கம்.

இராமப்பையன் அம்மானை.

பக்கம் 1.

இராமப்பையன் என்ற படைத் தலைவன் சடைக்கத்தேவன் என்ற சேது மன்னன்மீது படை எடுத்து வென்ற வரலாற்றை கூறும் அம்மானை என்ற ஒருவகை நாட்டுப் பாடல்.

இராமன் — இராமப்பையன், இராமையன் — மதுரையில் நாயக்கர் வம்சத்தில் 1623—'59 ஆண்ட திருமலை நாயக்கருடைய முதல் அமைச்சனும் தளவாயும் (படைத் தலைவன்) ஆக இருந்தவன். மதுரைக்கு அருகில் கூத்தியார் குண்டில் பிறந்து வளர்ந்தவன். அங்கொரு சிவாலயம் கட்டி உள்ளான். அதன் தூண் ஒன்றில் அவனுடைய உருவம் இருக்கிறது. நாயக்கருக்காக மைசூருடனும் சேதுபதியுடனும் போர் புரிந்தான்.

சடைக்கன் — சடைக்கத்தேவன் (1635—1646) தளவாய் சேதுபதி என்றும் பெயர். கூத்தன் சேதுபதியின் மகன். 'தம்பி' யினால் சதி செய்யப்பட்டு இராமப்பையனால் சிறை பிடிக்கப்பட்டான். மீண்டும் அரசு பெற்றும் தம்பியினால் கொலை புரியப்பட்டான்.

ஆலவாய் — மதுரை.

சொக்கன் — அழகன். மதுரையில் உள்ள மூலஸ்தான மூர்த்தியின் பெயர்.

திருமலேந்திரன் — மதுரைத் திருமலை நாயக்கன். மிகுந்த வல்லமையுள்ளவன். பல கட்டடங்களைக் கட்டினவன். விஜயநகரத்தின் அடிமைத்தனத்தை நீக்கி தனி அரசு பெற்றவன்.

கலி — துன்பம்.

மாதவர்கள் — துறவிகள்.

காசினியோர் — நிலத்திலுள்ளோர்.

ஐங்கரன் — விநாயகன்.

கைம்மான் மழுவுடைய கண்ணுதலோன் — கையில் மானும் மழுவும் தரித்து நெற்றிக்கண் உடைய சிவபெருமான்.

வெண்டாமரையாள் — கலைமகள்.

தண் தாமரை மார்பன் — குளிர்ந்த தாமரை மாலை அணிந்த மார்பு உடையவன்.

வாரணம் — யானை.
தார் ஆரும் — மாலை அணிந்த.
தையல் — மங்கை.
சங்கை — மதிப்பு.
துங்க — தூய உயர்ந்த.
அகிரன் போஜன் — நாக அம்சத்தினனான போஜ மகாராஜன்.
திக்கடங்க — திசைகள் பணிய.

பக்கம் **2.**

தஞ்சாவூர்க் கோட்டை — சோழரால் கட்டப்பட்டு பின்னர் நாய்க்கர்களால் பலப்படுத்தப்பட்ட தஞ்சைக் கோட்டை.
பிரவலம் — பிரமாதம்.
செஞ்சி ராயன் — செஞ்சிக் கோட்டையில் இருந்த ராயன்.
ஒட்டியர் — ஒரிசா நாட்டார்.
சிங்களியர் — இலங்கைத் தீவினர்
முனைசமர் — போர்முனை

பக்கம் **3.**

குஞ்சரம் — யானை.
ஆங்காரியம் — ஆகும் காரியம்.
ஈழம் — இலங்கை. யாழ்ப்பாணம் — அதில் வடக்கில் உள்ள தமிழர் தலைநகர்.
கோழை — பயங்காளி.

பக்கம் **4.**

வெள்ளிலை — வெற்றிலை.
அடைக்காய் — பாக்கு.
தோருத — தோல்வி அடையாத.
வாசகன் — பேச்சு உடையவன்.
பகுதி — நிலத்து வரி.
ஆறுசடைச் சொக்கர் — கங்கையைத் தலையில் தரித்த சொக்கநாதர்.

பக்கம் **5.**

திருப்பூவணம் — மதுரைக்கு கிழக்கே வைகைநதி மீதுள்ள ஒரு தலம்.

பாளையக்காரர் — குறுநில மன்னர். நாயக்கர் வம்சத்தை தாபித்த விசுவநாத நாயக்கன், தன் ராஜ்ஜியத்தை 72 பாளையங்களாகப் பிரித்து ஒவ்வொரு பாளையத்திற்கும் ஒவ்வொரு பாளையக்காரரை ஏற்படுத்தினான். அவர்கள் ஒரு குறிப்பிட்ட படையை வைத்திருக்க வேண்டும். அரசன் அழைக்கும்போது அப்படையுடன் சென்று போர்

புரிய உதவி செய்யவேண்டும். அதற்காக அவர்களுக்கு விடப்பட்ட பாளையப்பட்டில் வசூலாகும் வரிகளில் ஒரு பகுதி அரசனுக்கு கொடுத்து மீதியை தாங்கள் எடுத்துக்கொள்ளலாம். இந்த ஏற்பாடு திருமலை நாயக்கன் காலத்திலும் இருந்தது. இந்தப்பக்கத்தில் அக்காலத்திலிருந்த பாளையக்காரர்களின் பெயர்களும் அவர்களின் ஊர்களும் சொல்லப் பட்டிருக்கின்றன.

பக்கம். **6.**

அலைகதிரோன் — சூரியன்.
வானவீரன் மதுரை — மானாமதுரை.
ஊருணி — நன்னீர்க்குட்டை.

பக்கம். **7.**

பரம்பைக்குடி — பரமக்குடி.

பக்கம். **8.**

இதில் எட்டுகுடிமுதலிய பல ஊர் பெயர்கள் வருகின்றன.

பக்கம். **9.**

இதிலும் பல ஊர் பெயர்கள் வருகின்றன.

பக்கம் **10.**

கர்த்தன் — சிவபெருமான்.
காரானை மேனியன் — கரிய யானை உடலினன்.
தையல் நல்லாள் — பார்வதி தேவியார்.
போதம் — அறிவு.
தென்கூடல் — மதுரை.
வாகாக — நன்றாக.
கண்ணுதலோன் — சிவபெருமான்.
மாற்றலர்கள் — எதிரிகள்.
திரை — கப்பம்.

பக்கம் **11.**

வண்ட — கெட்ட.
குழல்வாய் — பீரங்கிவாய்.
வலுக்காரன் — பலமுள்ளவன்.
வடுகர் — தெலுங்கர்.
தஞ்சம் — அடைக்கலம்.

பக்கம் 12.

முனைவடுகர் — போர்புரியும் வடுகர்.

பக்கம் 13.

அத்தக்கடையம் — கைக்கடையம்.
அங்கயற்கண் — அழகிய மீன்போன்ற கண் உடைய
செப்பம் — செவ்வையாக

பக்கம் 15.

வேணது — வேண்டியது.
பதனமாய் — பத்திரமாய்.

பக்கம் 16.

ஆதித்தன் — சூரியன்.

பக்கம் 17.

பஞ்சவர்க்கு — பாண்டவர்களுக்கு.

பக்கம் 18.

வானரவீரன் மதுரை — மானாமதுரை.
ஏகாந்தம் — தனியாக.
கங்குல் — இரவு.

பக்கம் 20.

வெண்ணிமாலை — வெற்றிமாலை அணிந்த

பக்கம் 22.

மீன் — நட்சத்திரம்.

பக்கம் 27.

குலவை இட்டு — நா அசைத்துக் கீச்சு என்று சத்தித்து.

பக்கம் 28.

ஓட்டன் — ஓடிச்சென்று செய்தியை தெரிவிப்பவன்.

பக்கம் 31.

எக்கடா — எங்கே. (தெலுங்கு)
அக்கடா ஒச்சை — அந்தோ வந்தது. (தெலுங்கு)
காடி கொடுக்கு — விதவை மகன். (தெலுங்கு)

பக்கம் **36.**

முகிலருடன் பாட்சா — முகலாய அரசன்.

பக்கம் **37.**

இயாதாத்து — உத்தரவு. (உருது).

பக்கம் **40.**

எந்திழைமார் — பெண்கள்.

துங்கமுடி — உயர்ந்த முடி.

பக்கம் **45.**

மல்லையர் பொந்திலியர் — ஒருவித வகுப்பினர். போர் செய்ய வல்லவர். ஏலோலம் — வேலை செய்யும்போது ஆயாசம் தீர பல்லவியோடு பாடும் ஒருவகைப் பாட்டு — கப்பல் பாட்டில் தொடங்கி மற்ற வேலைகளுக்கும் தொடர்ந்துவிட்டது.

பக்கம் **46.**

அவதி — துன்பம்.

பக்கம் **47.**

கரியமால் — திருமால் போன்ற.

பக்கம் **48.**

பெண்டுகணைச்சி — கப்பலின் பெயர்.

பாசை சொல்லி — வைது.

இராமர் லக்ஷமணர் — பெருங்குழலின் பெயர்கள்.

மீன் வகைகள் :

வாளை, வறுக்கை, திறுக்கை, ஓழுமீன், நெய்தலை, திமிதம், உள்ளான், சுறுமீன், பிள்ளைகொல்லி, நெய்மீன், சாளை, பனைமீன், கறும்பை, மடவை, வங்கு, நேத்து, ஆனைமீன், குதிரைமீன் முதலியன இங்கே கூறப்பட்டுள்ளன.

பக்கம் **49.**

எயிறைக் கடித்தான் — பல்லைக் கடித்தான்.

பறங்கியர் — வகைகள் — சிங்களம், கொழும்பு, மன்னார், கக்ஷ, தீவு, கொச்சி, இலங்கை, துலுக்காணம், சோங்கு.

பக்கம் **50.**

தாணுபதி — படைத்தலைவன்.

சம்பாரம் — சரக்கு.

பக்கம் **51.**

நாடுகலக்கி — கப்பலின் பெயர்.
கிடாய் வெட்டி — சாந்தி கழிக்க ஆடு வெட்டுதல்.

பக்கம் **52.**

விதனம் — செய்தி.

பக்கம் **57.**

குமுறுதல் — கர்ச்சித்தல்.

பக்கம் **58.**

தெத்து — திண்ணை ; திடல்.
சோங்கு — பாய் மரம்.
வாத — காற்று.

பக்கம் **59.**

மன்னுப்பு — மன்னிப்பு.
பைய — மெல்ல.

பக்கம் **60.**

உலம்பல் — புலம்பல்.
கலனை — ஜீனி.

பக்கம் **62.**

அவுதா — யானை அம்பாரி.

பக்கம் **67.**

விலங்கு தைத்து — விலங்கிட்டு.
பொம்மன் — பிராமணன்.

பக்கம் **68.**

தெரித்து — அறுந்து சிதறி.

அகரவரிசைப் பொருளடக்கம்.

	பக்கம்.
அஞ்சுகோட்டை	8
அடைக்கல ஓலை எழுதினது	65
அடைக்கலம் அடைந்தது	66
அடைக்காய் வெள்ளிலை	4, 47
அணை கட்டல்	48
அணைப் போர்	48
அதிரி சாயபு	25
அத்திபுத்திக் கோட்டை	33
அப்பாச்சி கவுண்டன்	24
அம்மைய நாயக்கன்	5
அரியாணிபுரக் கோட்டை	23
,, போர்	27
,, முற்றுகை	33
அரியலூரார்	25
,, மழவராயன்	5
அருணாத்திரி	3, 7, 12, 19
ஆகிரன் போசன்	10
ஆசிறுபேய்	25
ஆண்டுகொண்டான் வன்னி	5
ஆய்க்குடிக் கொண்டையன்	24
ஆனைகுந்தி	40
இராமப்பையன் வரலாறு-தொடக்கம்	1
,, நாய்க்கரிடம் பேச்சு	2, 3, 10
,, போருக்குப் புறப்பாடு	5, 15
,, கொலுவும் உலாவும்	5, 14, 16, 21
,, போர் புரிதல்	26
,, வடக்கு செல்லல்	38
,, மீண்டும் போருக்குச் செல்லல்	41
,, அணை கட்டினது	44
,, வெற்றி	62
,, ஊர் திரும்பினது	67
,, பவனி	68
இராமாயண மேற்கோள்கள்	3, 13, 48
இராமேசுவரத் தீவு	35

	பக்கம்.
இராயர் ஓலை	36
,, பரிசுகள்	39
,, போர்	39
இருவப்ப நாயக்கன்	24
இலப்பையூர் காமாட்சி	24, 25
இலிங்கம நாயக்கன்	24
இளையான்குடிக் கோட்டை	23
இளையான் நாயக்கன்	5
இறுதி வாழ்த்து	60
ஈசனுகான்	26
ஈரோடு கெட்டி	5
ஈரோடு கொங்குமன்னர்	25
ஈரோடு கொடிமன்னர்	9
ஈழத்து ராஜாக்கள்	8
ஈழம் யாழ்பாணம்	3
உச்சிமியா	25
ஊட்டத்தூர்	40
உவமைகள்: வேங்கை கண்ட மான்	6
,, எண்ணைக் குடத்தை எறும்பு சூழுதல் ...	16
,, தலைகெட்ட நூலதுபோல்	28
,, தேக்கிலையில் நீரதுபோல்	28
,, புலியை நரி பாய்ந்துபோமோ	31
ஊற்றுமலையான்	29
எட்டப்ப நாயக்கன்	5, 24, 26
எட்டுகுடி இருவாட்சி	8
எர்ரப்ப நாயக்கன்	26
ஏழுமடையான்	5
,, ஏறிச்சின்னன்	27
ஏழாயிரம் பண்ணை	24
ஒட்டியர், மராட்டியர்	2, 3
ஓட்டன் தூது	7
,, செல்லல்	29
கச்சைகட்டி நாயக்கன்	25
கடவுள் வாழ்த்து	1, 10
கட்டபொம்ம நாயக்கன்	5, 24, 26
கணக்கதிகாரிக் கவுண்டன்	24
கணக்கது களத்துவண்டார்	26
கணவாய்	37

				பக்கம்.
கண்டி ராஜா	...	...	...	8
கப்பற் போர்	...	...	...	51
கரட்டுமலை நாயக்கன்	...	...	...	25
கலங்காத கவுண்டன்	...	...	...	5
கல் சுமந்தது மன்னர்	...	...	...	45
,, வேசிகள்	...	...	...	46
,, பரதேசிகள்	...	...	...	47
கழுகுமடையான்	...	...	...	24
களவண்டார்	...	...	...	6
கன்னிவாடி நாயக்கன்	...	...	...	24
காங்கேய கதித்தமுனைக் கவுண்டன்	...	...	...	27
காங்கேய நாடன்	...	...	...	25
காங்கேய மன்றாடி	...	...	...	9
காடக்தகுடி	...	...	...	22
காதிறு சாயபு	...	...	...	25
காமய நாயக்கன்	...	...	...	25
காமாட்சி நாயக்கன்	...	...	...	25
காவனூர்	...	...	...	22
கிருங்காதிரி கோட்டை	...	...	...	6, 17
கீழ்முகத்து தம்பிச்சி	...	...	...	24
குடுமியில் தேங்காய் கட்டல்	...	...	...	29
குண்டையன் கோட்டை	...	...	...	8
குதிரைகள் பெயர்கள்: மாயோகி	...	...	...	13
நாடுகலக்கி	...	...	...	21
பெண்டுநாச்சி		...	...	35
குத்தி	...	...	...	9
குமாரன் அழகன்	...	...	...	20
,, பிடிபடல்	...	...	...	42
,, தண்டனை	...	...	...	43
குறிக்கொண்டப்ப நாயக்கன்	...	...	...	6
குற்றால தேவன்	...	...	...	24
குன்னத்தூர் ரெட்டி	...	...	...	25, 26
கூடாரம்	...	...	...	6, 16
கூளப்ப நாயக்கன்	...	...	...	5
கொங்கு	...	...	...	12
கொட்டத்து ரெட்டி	...	...	...	5
கொண்டையன் கோட்டை	...	...	...	20
கொண்டப்பையன்	...	...	...	4, 5

பக்கம்.

கொப்ப நாயக்கன் 5
கொலுவு இருக்கை 14
கொழும்பு ராஜா 25
கோடங்கி ரெட்டி 25
கோடப்ப நாயக்கன் 24
கோதை மறுவாடி 25
கோலகொண்டராயன் 8, 27
கோவிலடிக் கோட்டை 11
சடைக்கத் தேவன் வரலாறு 1
அழைப்பு 20
சேனை வகுப்பு 27
வெற்றிப் பேச்சு 29
காயம் அடைதல் 34
வன்னி நோய்கண்டு தொழுதல், யாகம், உத்தரவு ... 58
புலம்பல் 64
அடைக்கல ஓலை 65
அடைக்கலம் அடைந்தது 66
சிறைவாசம் 67
சிறை மீட்சி 68
அரசு 69
சத்திர வீரய்யன் 4
சாந்தி கழித்தல் 33
சிங்கமலர்த்தா பிள்ளை 25
சிங்கம் சிலத்தான் 5
சிங்களியர் 2
சிலுப்பெட்டி நாயக்கன் 25
சிறைக்கூடம் 67
சின்னணைஞ்சாத் தேவன் 24
சின்னராவுத்தர் பாளையம் 25
சீரங்கம் 40
சுரணுதாயத்த ராவுத்தர் 25
சூரப்பையன் 12, 19
செஞ்சிக்கோட்டை 2, 3
செல்லபொட்டி நாயக்கன் 24
சேது அணை கட்டல் 44
சேதுக்கரை 3, 11
சேனை வகுப்பு 27
சேஷாத்திரி 3

பக்கம்.

சொக்கலிங்க நாயக்கன்	25
சோழவந்தான்	40
தஞ்சாவூர்க் கோட்டை	2, 11
தளவாய் நாயக்கன்	27
திருக்கோயில் வணக்கம்	14
திருச்சிறுப்பள்ளி	40
திருநெல்வேலி	25
திருப்பூவணம்	5
கூடாரம்	6, 17, 41
திருமலை நாயக்கன் வரலாறு	1
இராமன் பேச்சு	2
மறுத்தது	2
போருக்கு உத்தரவு	4
பேச்சுக்கள்	11
எச்சரிக்கை	13
ஓலை அனுப்பியது	36
இராமனைக் காணல்	37
வடக்கே செல்ல உத்தரவு	38
பரிசு தர உத்தரவு, சேது நாடு செல்ல உத்தரவிடல் ...	41
சேதுபதி அடைக்கலம், சிறையிடல், பரிசு வழங்கல் ...	67
சேதுபதியை விடுதலை செய்தல்	69
திருமலைப்பூச்சி	5, 24
திருவரங்கோடு	9
தீச்சகுனங்கள்	61
துலுக்காணம் (தலசோங்கு ஆறுமா)	8
துப்பாக்கி	3
தும்பிச்சி நாயக்கன்	5
தெய்வக் காட்சி	68
தென்காஞ்சி மூங்கன்	5, 24
தென்மலை வன்னியன்	26
தென்னம நாயக்கன்	24, 25
தேக்கமலை	40
தேவி தீப்பாய்ந்தது	64
தொட்டப்ப நாயக்கன்	5, 24
தொட்டியர் கம்பளத்தார்	12
தோகைமலை	40
தோவூர்	2
நத்தத்து லிங்கையன்	5, 27

	பக்கம்.
நல்லசிறு பொம்மண்ணன்	24
நல்லம நாயக்கன்	6, 25
நாகம நாயக்கன்	4, 25
நாகமன்	25
நாஞ்சிநாட்டு துரை	25
நாசிநாடு	9
நாடுகலக்கி (குதிரை)	34
படேகான்கிலுசு	26
பட்டத்து நாயக்கன்	5, 35
பண்டாரம் (இராமநாத சுவாமி)	7
பரம்பக்குடி	7
பரிசுகள் வழங்கள்	3, 13, 32, 67
பல நாட்டுப் பறங்கிகள்	49, 8, 50, 49
பள்ளியில் சின்னய்யன்	24
பாம்பன் துறை	33, 60
பாரத மேற்கோள்கள்	13
பாவலி மூக்கை	5
பாளையக்காரர் வரிசை	24, 25
பிளவை காணல்	59
பிள்ளைப்பாளையம்	40
புலம்பல் (சடக்கனும் தேவியும்)	64
புதுக்குடி	22
பூச்சி நாய்க்கன்	24 ,26
பெண்டு நாச்சி	35
பெண் வீரம்	43
பெத்த நாயக்கன்	24
பெருங்கோட்டை	18
பொம்ம நாயக்கன்	24, 25
போகலூர்க் கோட்டை	22, 30
போர்கள்: முதல்	23
,, இரண்டாம்	26
,, மூன்றும்	27
,, போகலூர்	30
,, அரியாசை	33
,, வடநாடு	39
,, அணைப்போர்	48
,, பறங்கியர் போர்	50
,, கப்பற் போர்	51

பக்கம்.

கடும்போர் 53
பாம்பன் போர் 60
வன்னிப் போர் 61
மகமதுகான் 25, 26
மணப்பாறை 40
மணலூர் நாயக்கன் 25
மண்டுறு பாப்பையன் 4
மதுரை நகர் (தென் கூடல்) 2, 4, 10
மத்தன் சிறுகுடி (மற்றஞ் சிறுகுடி) 6, 41, 42
மருதப்பத் தேவன் 25
மலையாளம் 9, 12
மலையாள ராஜா 25
மறுநூற்று நாயக்கன் 25
மாதவ ராஜா 5
மாம்பூண்டி லக்கையன் 5
மாவலிவாணன் 18
மானு மதுரை 6, 18
மீண்ட சேதுபதி 41
மீரு சாயவு 25
மீன் வகைகள் 48
முசேகான் 25
முத்தைய நாயக்கன் 24
முருக்குநாடு மூவரய்யன் 5, 24
முள்ளிப்பாடி முத்தையன் 5
மூக்கில் அணை பூசாரி 5
மூங்கில் அணை பூசாரி 25
மூவலூர் மன்னன் 24
மேல்முகத்தும்பிச்சி 5
மைசூர் கோட்டை 12
வங்கார முத்தையன் 25
வங்காளம் 12
வடுகன் 11
,, (முனை வடுகர்) 12
வட்டாணம் தொண்டி 8
வண்டியூர் கோட்டை 16
வயித்தி அய்யன் 14
வன்னி வரலாறு — உலா 21
போர் செய்தது 22

	பக்கம்.
மற்றும் போர்கள்	23 முதல் 32 வரை
அணைப்போர்	48
வன்னி வெற்றி	51
கடும்போர்	53
வன்னி போர்	56
வன்னிக்கு நோய்	58
பாம்பன் போர்	60
நோயுடன் போர்	61
வெற்றி	62
அடைக்கலம் புகச்சொன்னது	63
இறந்தது	63
தேவி தீப்பாய்ந்தது	65
வாத்தியங்கள் வகை	6
வாலசமுத்திர மன்னன்	25
வாலப்ப நாயக்கன்	24
வாலிகொண்டபுரம்	40
வாள்கோட்டை ராயன்	6, 19
வாய்பூசுகான்	25
வாலூகான்	25
விசுவப்ப நாயக்கன்	25
விசையாபுரம் — வேலூர்	37
விருப்பாச்சி நாயக்கன்	24
வீசுங்க நாயக்கன்	24
வீரமலை நாயக்கன்	24
வெங்கம நாயக்கன்	24
வெங்களூர்	39, 40
வென்னுய்க்கன்	24
வேலப்ப நாயக்கன்	25
வைகை ஆறு	4
வைசூரி	58
,, கண்டது	59

திருத்தப் பாடங்கள்.

ஏட்டுப் பிரதிகளில் அளவற்ற பிழைகள் இருந்தன. கூடியமட்டில் திருத்தியமைத்தும் பிழைகள் புகுந்துவிட்டன. சந்திப் பிழைகள் அளவற்றன. யகரம் வேண்டாவிடங்களில் எழுதப்பட்டுள்ளன. அவைகளை மூலத்தில் திருத்த முடியவில்லை. இங்கே திருத்தப் பாடமாக எழுதப்படுகின்றன. மேலும் சில சொற்கள் உருவம் மாறியிருக்கின்றன. தெளிவுபடாத இடங்களில் உள்ளபடியே வெளியிடப்பட்டுள்ளன. படிப்பவர்கள் ஊகித்துத் திருத்திக்கொள்ளலாம்.

தெரியாத சொற்கள்.

2. ஆகருபமுக
5. இராவாழி
7. ஆகமது பாரிசர்
8. துலுக்காணம் தல சோங்கு
   குழக்காறத்தனையும்
9. நனம்பாலே
   ககெனவே
   கதித்தமிசனே
18. மாலைபஞ்சுக்கு
20. ஆமைத்திரங்கள்
   வேமென்று
,, ராவுத்தன் நரைபடை
21. அறுமறுக்க
22. கொடேரி குளந்து
   கடுக்க முத்தரா
   சின்னயாளியவுக்கு
23. சுடரா குவைக்காரா
24. ஏழுமடையிலி வைப்பன்
   வென்ஞயக்கன்
38. ஆயிணையான் வீரதிவக்கும்
42. போருமை எசவழி
45. பக்க சமூதாடுமெங்கே
   கவிக்கத்து கத்தி
49. சோங்கு மருமாவும்
   சொகுடனே
53. தெத்திலே திறமாக
   கவிலனவே
   சேர்வதுக்குகவே
   தானகளைத்தார்
57. கொடியாடவை எல்லாம்
58. மறகர் வைதானம்
   மற்றேபனேனென்றால்
64. யதுவின்மூடி
   பிரடகைய
66. ஏறவே சோளி ஏகி
67. நாகலோக மரதி
   கண்காற்றின் மேலிருந்து

திருத்தம்.

(1) மொழிக்கும் சீருக்கும் முதலில் யி, யு, யெ, யொ வரும் சொற்களில் எல்லாம் இ, உ, எ, ஒ என்று படிக்கவேண்டும்.

(2) ஞயக்கன் என்ற இடமெல்லாம் நாயக்கன் என்று படிக்க வேண்டும்.

பக்கம்.	பாடம்.	திருத்தம்.
1.	மற்றரசர்	மாற்றலர்கள்
3.	வாழ்வீர	வாள்வீர
4.	எறுங்கள்	ஏறுங்கள்
	பொரும்புட ரோசாவே	பொரும்படை ராசாவே
5.	தேனங்காஞ்சி	தென் காஞ்சி
	நாயக்கணக்	நாயக்கன்
6.	அந்தினள்	அந்தநாள்
15.	சேனைக்கிரங்கி	சேனை இறங்கி
	பொருத்த	பொருந்த
	அனைத்தி	அணைத்தி
17.	பிடுங்கி கொல்லிட்டு	பிடுங்கச் சொல்லிட்டு
19.	ஏருக்கு	எருக்கு
23.	ஊதினர்	ஊதினன்
24.	ஆயகுழக்	ஆய்க்குடிக்
29.	ஏவரால்	எவரால்
30.	நூதுவன்	தூதுவன்
	மண் ணூறு	மண்டூரு
31.	ஊடருத்தான	ஊடறுத்தான்
	எதிர்ந்து	எதிர்த்து
32.	மற்ருனள்	மற்ருநாள்
	சந்தண	சந்தன
33.	போனனும்	போனலும்
35.	கொத்தவர்	கொற்றவர்
	போனேமென்று	போரேமென்று
36.	எல்லோறும்	எல்லோரும்
	யாம் குதிரை	யான் குதிரை
	மட்டூறு	மண்டூரு
37.	தனில்	தன்னில்
38.	பாரை	பாறை
	கதிரோரன்	கதிரோன்
39.	துறத்தி	துரத்தி
	அனுப்பினர்	அனுப்பினன்
41.	சென்றிரங்கி	சென்றிறங்கி
42.	செய்வாயாடா	செய்வாயடா
43.	குப்புர	குப்புற
	எடுத்தடுக்க	எடுத்தடக்க
44.	துரைமுகம்	துறைமுகம்
46	எள்ளாயிரம்	எண்ணுயிரம்

பக்கம்.	பாடம்.	திருத்தம்.
47.	ஆசைடிப்பயல்	ஆசையடிப்பையல்
48.	நெயமீன்	நெய்மீன்
	தாசைக்	தரையில்
	கடவிற்	கடலில்
49.	வளைந்து	வளைத்து
50.	குப்புர	குப்புற
51.	பேரை	போரை
	யெவ்லா	எல்லா
52.	மண்டுரு	மண்டூரு
	நானும்	நாயக்கனும்
53.	பாக்ஷை	பாஷை
	பரங்கி	பறங்கி
54.	பாவுறு	பாவூரு
55.	விடுக்க	இருக்க
56.	வானப்	வான்
63.	மெத்தையிலே்	மெத்தையிலே
64.	யெரிக்க	எடுக்க
	சொல்லி	சொல்ல
65.	கக்ஷை	கட்சி
	எற்ற போறங்காங்தெனவே	உற்ற பெருங்காற்றெனவே
	நூதுவர்	தூதுவர்
67.	திருக்கனது	திருமலைக்கிது
	பாக்கலை	பாக்கிலை
68.	குழலெல்லாரும்	குழலாரெல்லாரும்
	வகையர்கள்	வாசிகள்
	போனதுவை	போனதை

சில மேற்கோள் குறிப்புகள்.

1. இராமநாத பண்டாரம்.

இவர் தளவாய்ச் சேதுபதி காத்தத் தேவர் அவர் மகன் கூத்தன் சேதுபதி இவர்கள் காலங்களில் இராமேசுவரம் கோயில் திருப்பணி நடத்தியவர். அத் திருப்பணி 1598—1608-ல் முற்றுப்பெற்றதென்று அடியிற்கண்ட சாசனப் பாடல்கள் கூறுகின்றன. அதில் காணும் வீர பூபதி – வீரப்ப நாயக்கர் (1609—1623) ஆவர். இந்த பண்டாரம் சடைக்கத் தேவனுக்கு புத்திமதி கூறினவராக இருக்கலாம்.

சேல்கண்ட வாரி இலங்கேசன் வெம்பழி தீர முன்னாள்
மால்கண்ட கோயில் இராமீசர் ஆடல்செய் மண்டபத்தை
நூல்கண்ட நற்சகம் ஆயிரத் தோடைந்து நூற்றிருபான்
மேல்கண்ட நாளின் முனிராம நாதன் விதித்தனனே.

திருமால் அரனுக் கபிடேகம் செய்யச் சிலையதனால்
வருமாறு கண்டவண் கோடிப் புனற்கண் மகாலயத்தைத்
தருமா யிரத்தைந்து நூற்றுமுப்பான் செல் சகவருடத்
தருமா தவஞ்செய் முனிராம நாதன் அமைத்தனனே.

பற்றுச் சகனிற் பதினைந்து நூற்றிருபான் மருவ
நற்றும் புவியிளையாள் வீரபூபதி நாளிற் றெண்டர்
குற்றங் கடிந்தவர் சீராம நாயகர் கோயில்ன்பான்
முற்றும் தவங்கள் புரிராம நாதன் முடித்தனனே.

— (பெருந்தொகை 1915—17)

2. தளவாய் இராமப்பய்யன்.

இவனுடைய வீரச் செயல்கள் திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலை செ. 71-ல் அடியிற்கண்டபடி கூறப்பட்டுள்ளன.

திரமேவு விசுவநாதத் திரும லேந்திரன்
　　சித்த மகிழ் இராமப்பய்யன்
செங்கோட்டு வேலருடன் உமைபாகரைத் தொழுது
　　திக்கு விஜயம் செய்தனன்
உரமான தென்கடல் திருவவண யடைத்தனன்
　　உலகு நாற்பது லக்கமும்
ஒருகுடைக் கீழாக வாக்கினை புரிந்தனன்
　　உடையவன் மனது வரவே

துரமான மலையாளமும் கொள்ளை கொண்டனன்
துட்டரைக் கழுவேற்றினன்
சோரரை அடக்கினன் குருவி யழகன்தலை
துணித்தனன் பாண்டியரையும்
பொரமாற விட்டுச் சடக்கவை அடக்கினன்
பூசுரர்கள் தேவர் பூஜை
பொலிவுற நடாத்தினன் சந்த்ர சூரியராளவு
புகழ் நிலை நிறுத்தினனே.

(௪௫)

இச் செய்யுளில் இராமப்பய்யன் செயல்களில் அம்மானையில் வரும் வரலாறுகள் வருதல் காண்க. 1. அணை கட்டினது 2. கழுவேற்றினது 3. அழகனை வதைத்தது 4. சடக்கனை அடக்கினது முதலியன.

3. பாளையக்காரரைச் சிறையில் அடைத்தது.

இறை வரி செலுத்தத் தவறிய பாளையக்காரர்களில் சிலரை தளவாய் இராமப்பய்யன் சங்ககிரித்துருக்கத்தில் சிறையில் அடைத்தான். அவர்களில் ஒருவர் ஆனூர்ச் சம்பந்தச் சர்க்கரை மன்றாடியார் என்பவர். அவர் தமிழ்ப் புலவர்களைப் போற்றி வந்தவர். சிறையிலிருக்கும்போது ஒரு புலவர் கவி பாடிப் பரிசுக்கு வந்தார். அப் பாளையக்காரர் புலவரைத் தம் மனைவியாரிடம் அனுப்பினார். அந்த அம்மை கையில் பணம் இல்லாதிருந்ததினால் தன் தாலியைப் பரிசாகக் கொடுத்தாளாம். அப்புலவர் இச் செய்தியைத் தளவாய்க்குக் கூற, ஆச்சரியமுற்ற தளவாய் அத்தனைக் கொடையாளியைச் சிறை செய்தது சரியல்லவென்று எண்ணி இறை வரி செலுத்தக் கெடுவு கொடுத்து அப்பாளையக்காரரை விடுதலை செய்தான். அவர் வேண்டுகோளின்படி மற்றப் பாளையக்காரர்களையும் விடுதலை செய்தான். இச் செய்தியைக் கூறும் தனிப்பாக்கள்.

கொங்கினில் ராமப் பயனதி காரக் குரூரத்தினால்
கங்குலிராப் பகல் சர்வ சங்காரம்செய் காலத்திலே
சிங்கநற் சம்பந்தச் சர்க்கரை தேவி திருக்கழுத்தின்
மங்கிலி யந்தனைத் தந்தாள் தமிழ்க்கவி வாணருக்கே.

வாணன் உரைத்திட மால் ராமப் பையன் மனமகிழ்ந்து
வேணது கேளெனச் சம்பந்தச் சர்க்கரை வேளினுமிவ்
வீணரைக் காவல் விடீரென்று கூறிட விட்டிடலும்
தானுவென் றிம்முடிக் காணிக்கைச் சாசனந் தந்தனரே.

— (கொங்குமண்டல சதகத்தில் கண்ட வரலாறு)

4. பழனியாண்டவர் வழிபாடு மாற்றினது.

பழனியாண்டவர் வழிபாடு புலிப்பாணி சித்தர் பரம்பரையில் இருந்ததாம். இராமப்பையன் பழனி தரிசித்தபோது வழிபாடு செய்து கொண்டிருந்த பூசாரியிடம் பிரசாதம் வாங்க மறுத்து, வழிபாடு செய்யும் உரிமையை ஆதி சைவக் குருக்களிடம் தந்து வழிபாடு செய்வித்துப் பிரசாதம் பெற்றுக்கொண்டானும். இவ்வாறு மாற்றி ஒரு செப்பேடும் தந்ததாக பழனித்தல வரலாறும் மதுரை ஜில்லா நூலும் கூறுகின்றன.

கோயமுத்தூர் கூட்டுறவு அச்சுக்கூடம், லிமிடெட்.

தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடுகள்.

		ரூ. அ. பை.
1.	முத்ரா ராக்ஷஸ நாடக கதை (ஸம்ஸ்கிருத நூல்) ஆங்கில முகவுரை, மொழிபெயர்ப்பு, உரைக் குறிப்புகளுடன்	2—8—0
2.	சரபேந்திர வைத்திய முறைகள் — (தமிழ்) குன்மரோக சிகித்ஸை:— வைத்திய சாஸ்திரத்தைப்பற்றி முகவுரை, குணபாடம், சுத்தி முறை, பெயர்களுக்கு இதர பாஷைகளில் பிரதிபதம் சேர்ந்தது.	
	சாதா பைண்டு	3—8—0
	காலிகோ பைண்டு	4—0—0
3.	ஷை கர்ப்பிணி பால ரோக சிகித்ஸை (தமிழ்) ஸ்திரீ பால ரோகங்களின் விவரங்களுடன்	
	சாதா பைண்டு	3—0—0
	காலிகோ பைண்டு	3—8—0
4.	ஷை நயன ரோக சிகித்ஸை (தமிழ்) நயன ரோகங்களின் விவரங்களுடனும், பாவப்ராசிகையில் உள்ள முறைகளுடனும்.	
	சாதா பைண்டு	3—0—0
	காலிகோ பைண்டு	3—8—0
5.	ப்ரதாப சிம்மேந்திர விஜய ப்ரபந்தம் (மகாராஷ்டிரம்) ஆங்கில முகவுரை, மொழி பெயர்ப்புடன்	1—0—0

புத்தகங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

கௌரவக் காரியதரிசி,

சரஸ்வதி மஹால், தஞ்சை.